
அமுதசுரபி
ஆகஸ்ட் 1992
விலை ரூ.5

அமுதசுரபி சிறுகதைப் போட்டி '92 பரிசு ரூ 7,000

ஸ்ரீராம் டிரஸ்ட் அமுதசுரபி வெளியீட்டாளர்களும் வெல்வெட் ஷாம்பு நிறுவனத்தாரும் இணைந்து அளிக்கும் இலக்கியச் செல்வர் அமரர் சின்னி கிருஷ்ணன் நினைவு சிறுகதைப் போட்டி. மொத்தப் பரிசு 7,000.

டிசம்பர் 90ல் நடைபெற்ற ஸ்ரீராம் டிரஸ்ட் - சுஜாதா பிலிம்ஸ் லிட். இலக்கியப் பரிசளிப்பு விழாவில், வெல்வெட் ஷாம்பு நிறுவனத்தின் தலைவர் ஸி.கே. ராஜ்குமார் சிறந்த சிறுகதைகளுக்குப் பரிசளிப்பதாக அறிவித்தபடி அமுதசுரபி - வெல்வெட் ஷாம்பு நிறுவனம் இணைந்தளிக்கும் சிறு கதைப் போட்டியை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

முதல் பரிசு	ரூ. 3000 /-
இரண்டாம் பரிசு	ரூ. 2000 /-
மூன்றாம் பரிசு	ரூ. 1000 /-

தேர்ந்தெடுக்கப்படும் 10 சிறுகதைகளுக்கு ரூ. 100 வீதம் ரூ. 1000.

நிபந்தனைகள்

1. இந்தச் சிறுகதைப் போட்டியில் அனைவரும் கலந்து கொள்ளலாம். ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம்.

2. கதை, அமுதசுரபியில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாதவாறு இருத்தல் வேண்டும். (முழு வெள்ளைத்தாளில் பத்து பக்கங்களுக்கு மேற்படாமல்) சரித்திரம், சமூகம், நகைச்சுவை என எந்த வகைக் கதையையும் எழுதலாம்.

3. எழுதுபவரின் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். மொழி பெயர்ப்பாகவோ, தழுவலாகவோ, மற்றவர்களின் சொந்த வாழ்க்கையைப் பிரதிபலிப்பனவாகவோ இருக்கலாகாது.

4. கதைகளைச் சுருக்கவும், கதைத் தலைப்புகளை மாற்றி அமைக்கவும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

5. பரிசு பெற்ற கதைகளின் பூரண காபிரைட் உரிமை 'அமுதசுரபி' வெளியீட்டாளர்களையே சாரும்.

6. முழு வெள்ளைத்தாளில் தெளிவான கையெழுத்தில், ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும். பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் கதையைத் திரும்பப் பெற கதையுடன் போதிய தபால் தலை இணைக்க வேண்டும்.

7. போட்டிக்கான சிறுகதைகள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 4.10.92 முடிவுத் தேதி எக்காரணம் கொண்டும் மாற்றப்படமாட்டாது.

8. போட்டி சம்பந்தமாக எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ள இயலாது.

9. உறையின் மீது மறக்காமல் 'சிறுகதைப் போட்டி - 1992' என்று குறிப்பிடவும்.

10. ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

சிறுகதைப் போட்டி	- 1992
மொத்தப் பரிசு	ரூ. 7,000
கடைசித் தேதி	4-10-92

சிறுகதைகள் அனுப்ப வேண்டிய முகவரி :

அமுதசுரபி
த.பை.எண் : 5043
145, லிங்கச் செட்டி தெரு,
சென்னை - 600 001.

அமுதசுரபி ஆகஸ்ட் 1992. மலர் - 45. இதழ் - 4. ஆங்கிரஸ-ஆவணி.

விலை - ரு. 5.
ஆண்டுச் சந்தா ரு. 60.

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழியவே - பாரதியார்.

● ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன்.

● பதிப்பாளர் ஏ.வி.எஸ்.ராஜா. ● கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணியன் ஐ.ஆர்.டி.எஸ்.

● மேலட்டை ஓவியம் : ஜி.கே.மூர்த்தி. ● இதழ் ஆப்செட் அமைப்பு : சிவகுமார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் அமரர் கல்கி புதிய சகாப்தம் ஒன்றைத் தோற்றுவித்தவர். தம் எழுத்தால் தமிழ் வாசகர்களைக் கவர்ந்து தமிழ் இதழ்களை ஆர்வ முடன் படிக்கும் பழக்கத்தை ஏற் படுத்தியவர்.

அவர் இன்று நம்மிடையே வாழ்ந்திருந்தால் அவருக்கு வயது 92. கி.பி.2000 ஆம் ஆண்டில் அவருக்கு நூற்றாண்டு விழா தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் இடங்களில் மகத்தான முறையில் கொண்டாடப்படுவதை இப்போதே மனக் கண்ணால் கண்டு மகிழ் கிறோம்.

தியாக பூமி, கள்வனின் காதலி போன்ற சமூகப் புதினங்களையும், சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் போன்ற வரலாற்றுப் புதினங்களையும் படித்தவர்கள், மீண்டும் மீண்டும் படிக்கிறார்கள். மூன்று மாதம் கடுங்காவல், சங்கீத யோகம் போன்ற கட்டுரைகளை இன்று படித்தாலும் புதுமை குன்றா மல் இருக்கிறது. அவருடைய ஆணித்தரமான அரசியல் கட்டுரை கள் சிக்கலான செய்திகளை மிக எளிய முறையில் விளக்க வல்லவை. அதனால்தான் கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்களை பேராசிரியர் 'கல்கி' என்று அழைக் கிறோம்.

நகைச்சுவையுடன் பேசுவதிலும் எழுதுவதிலும் புகழ்பெற்ற அவர் தொடர்ந்து ஏறத்தாழ 14 ஆண்டு கள் ஆசிரியராக இருந்து வளர்த்த 'கல்கி' வார இதழ், அவருக்கு அழியாத நிரந்தரச் சின்னமாகத் திகழ்கிறது.

'கல்கி' பத்திரிகைக்குப் பொன் விழா ஆண்டு. 1.8.92 அன்று சென்னையில் சிறப்பாக விழா நடைபெற்றிருக்கும்.

கல்கி பத்திரிகையை வாழை யடி வாழையாக நடத்தி வரும் அமரர் கல்கியின் திருமகன் திரு. கி.ராஜேந்திரன் அவர்களையும், கல்கி பத்திரிகையை வளர்த்த திரு. டி.சதாசிவம் அவர்களையும் போற்றி புகழக் கடமைப்பட்டுள் ளோம்.

நீண்ட நெடுங்காலம் 'கல்கி' வார இதழ் சீரும் சிறப்புமாக தமிழ் மக்களுக்குத் தொண்டாற்றி வர வாழ்த்துகிறோம்.

அருணையில் வாழும் கருணை பகவான் ஸ்ரீ யோகி ராம்சுரத்குமார்

பேராசிரியை ரங்கநாயகி சீனிவாசன்

"ஞானத் தபோதனரை வாவென்றழைப்பது" திருவண்ணாமலை மணிவாசகப் பெருந்தகை, குகை நமச்சிவாயர், குரு நமச்சிவாயர், அருணகிரி நாதர், சேஷாத்திரி ஸ்வாமிகள், ரமண மகரிஷிகள் எனத் தொடர்ந்து ஆன்மீகப் பேரொளிகளைத் தன்பால் அழைத்து அரவணைத்திருக்கும் தலம் இத்திருத்தலம். மறைந்த தமிழறிஞரும், பகவானின் பக்தருமான கி.வா. ஜகந்நாதன் தன் "துதிப்பாடலில்" கூறுகிறார்.

'அந்நாளில் வாழ்ந்திருந்தோம் இல்லை;அந்நாள்
அருள்பெற்ற ஞானியர்கள் இருந்தார் என்பர்;
இந்நாளில் யாம்பார்க்க முடியா தென்றே
ஏங்குவது வேண்டாம்! நல் அருணை தன்னில்
நன்னாவ லர்புகழும் உயர்ந்த ஞானி
நடக்கின்றான்; இருக்கின்றான்; அருள் செய்கின்றான்;
இன்னாத போக்குகின்றான்; சாந்தி மீவான்;
இவனே காண் ராம சுரத்குமார யோகி'

ஆம்! இன்று திருவண்ணாமலையில் வீற்றிருந்து நம்மைக் காந்தம்போல் ஈர்த்து, கடைக்கண் பார்வையால் அருள் பாலித்து, நம்முடைய பிராரப்த, சந்சித கர்மாக்களை நசிக்கச் செய்யும் பேரருளாளர் பகவான் ஸ்ரீயோகி ராம்சுரத்குமார். இது இன்று நடந்து கொண்டிருக்கும் அற்புதம்.

கங்கைக் கரையின் அருகில் ஒரு சிறு கிராமத்தில் டிசம்பர் திங்கள் 1ஆம் நாள் 1918ஆம் ஆண்டில் அவதரித்த இப்பெருமானார், சிறு பிராயம் முதற்கொண்டு ஆண்டவன்பால் ஈர்க்கப்பட்டு வந்தார். கங்கை அன்னையின் மேல் பாலகன் ராம்சுரத் குமாரனுக்கு அளவு கடந்த பக்தியும், சிரத்தையும்; கங்கைக் கரையிலே வசிக்கும் ஸாதுக்களுடன் நாம ஜபத்தில் ஈடுபட்டும், அவர்களுக்கு உணவு அளித்தும், அவர்களுடன் உட்கார்ந்தும் ஆன்மீக உரையாடலில் ஈடுபட்டும், தம் பொழுதைக் கழிப்பதையே அவன் மிகவும் விரும்புவான். ஆண்டவனின் இந்த அற்புதப் படைப்பைப் பார்த்தும், அவன் எங்கும் வியாபித்திருக்கிறான் என்று எண்ணி பாலகன் ராம்சுரத் குமார் மனம் ஆனந்தத்தால் புல்லரிக்கும்.

ஒருநாள் பகவானுடைய பன்னிரண்டாம் வயதில் அவருடைய அன்னையார் கிணற்றிலிருந்து நீர் இரைக்கும்படி கேட்டுக் கொண்டார். பாலகன் ராம்சுரத்குமார் கிணற்றிலிருந்து நீர் இரைக்கும் பொழுது, பௌர்ணமி நிலா வெளிச்சத்தில், கிணற்றின் மறுபக்கம் ஒரு வால் குருவி ஆனந்தமாய்ப் பாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். என்ன செய்கிறோம் என்று தெரியாமல் பாலகன் கையிலிருந்த கயிற்றை அந்தக் குருவியின் மேல் வீச, அக்குருவி உடனே கீழே விழுந்துவிட்டது. பாலகன் ராம்சுரத் குமார் ஓடிச் சென்று பார்த்த பொழுது, அந்த வால் குருவியின் ஆவி பிரிந்து விட்டிருந்தது. பாலகன் கண்களில் நீர் தாரை தாரையாக வழிந்தோடியது. "நாம் ஒரு ஜீவனின் ஆவி பிரிவதற்குக் காரணமாகிவிட்டோமே" என்ற எண்ணம் அவன் மனத்தை அழுத்தியது. இதை எண்ணி எண்ணி அவன் மனம் மீளாத் துயரத்தில் ஆழ்ந்தது. இறந்து போன அந்த வால்குருவியைப் பாலகன் கங்கையில் சங்கமம் செய்துவிட்டு இரவு முழுவதும் கங்கைக் கரையிலேயே அமர்ந்து கண்ணீர் வடித்தவண்ணம் இருந்தான்.

இந்தச் சம்பவம் பாலகன் யோகி ராம்சுரத் குமார் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்துவிட்டது. புத்தருக்குத் தாம் கண்ட ஒரு சவ ஊர்வலம், ஒரு நோயாளி, காந்தி மஹாத்மாவுக்கு அவர் பார்த்த ஹரிச்சந்திரா நாடகம், வால்மீகிக்கு வேடன் அடித்த கிரௌஞ்சப் பறவை எப்படித் திருப்புமுனையோ, அதுபோல் பாலகன் யோகி ராம்சுரத்குமாரனுக்கு இச்சம்பவம் உலகின் ஒவ்வொரு ஜீவனின் மீது கருணையும், தணியாத இறை தாகமும், ஆன்மீக எழுச்சியும் உண்டாக்கியது.

இளைஞனான யோகி ராம்சுரத்குமார் ஒருநாள் கங்கைக்கரையில் ஒரு வயோதிக ஸாதுவிடம் உரையாடிக் கொண்டிருந்த பொழுது, தன் ஆன்மீக லட்சியம் நிறைவேற குருவின் அருள் தேவை என்ற எண்ணம் ஏற்பட்டது. பாண்டிச்சேரியில் வாழ் மஹா யோகி அரவிந்தரை நாடிச் செல்லப் போவதாகத் தன் அபிப்பிராயத்தை அந்த ஸாதுவிடம் இளைஞன் கூறினான். அந்த ஸாதுவும் அதனை ஆமோதித்து, பாண்டிச்சேரியின் அருகில் இருக்கும் மற்றொரு மஹானையும் தரிசிக்கும்படி உபதேசித்தார்.

பகவான் யோகி ராம்சுரத்குமார் 1947ஆம் ஆண்டில் பாண்டிச்சேரி வந்து மஹாயோகி அரவிந்தரைத் தரிசித்து ஞான ஒளியைப் பெற்றார். பிறகு திருவண்ணாமலையில் அருளாட்சி புரிந்து கொண்டிருந்த மஹரிஷி ரமணரைத் தரிசித்து அவரிடமிருந்து தபோ பலத்தைப் பெற்றார். ரமணாசிரமத்தில் அவர் தங்கி இருந்த சமயம் அங்குள்ள ஒரு ஸாது, கேரளத்தின் கன்சன்காடு என்ற இடத்தில் அருள்புரிந்து வந்த ஸ்வாமி ராமதாஸரைப் பற்றிய ஒரு செய்திக் குறிப்பைக் காட்டினார். மூன்றாம் முறை ஸ்வாமி ராமதாஸரைச் சந்தித்தபொழுது பகவான் யோகி ராமசுரத் குமாரருக்கு ஸ்வாமி ராமதாஸரே தம்முடைய குருநாதர் என்ற உள்ளுணர்வு ஏற்பட, ஸ்வாமி ராமதாஸரும் அவரைச் சிஷ்யனாக வரவேற்று பக்தி யோகத்தை அருள் பாலித்தார். ஆனந்தாசிரமத்தில் தங்கி இருந்தபொழுது ஸ்வாமி ராமதாஸர் 'ஓம் ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம்' என்ற தாரக மந்திரத்தைப் பகவானுக்கு உபதேசம் செய்தார். ராம நாமத்தின் அபார பிரபாவம், அவருடைய ஆன்மீக எழுச்சி, இவ்விரண்டும் சேர்ந்த நிலையில், யோகி ராம் சுரத்குமார் பூரணத்துவம் பெற்று, பிரம்ம நிலையை அடைந்தார்.

பகவான் ஆனந்தாசிரமத்தில் இரண்டு மாத காலம் தங்கி இருந்தார். மேலும் அங்கே தங்க வேண்டும் என்ற தன் அவாவை மூன்று முறை ஸ்வாமி ராமதாஸரிடம் விண்ணப்பித்த பொழுதும், ஸ்வாமி ராமதாஸர் மறுத்துவிட்டார். "இங்கு ஆசிரம வாழ்க்கைக்குத் தேவையான பல பேர் இருக்கின்றார்கள்" என்று ஸ்வாமி ராமதாஸர் கூறிவிட்டார். ஸ்வாமி ராமதாஸர் இப்படிக் கூறியதன் நோக்கம் என்னவென்றால், 'நீ ஓர் ஆலமரம். ஆகவே உன்னுடைய நிழலில் தங்குவோர்க்கு நீ ஆன்மீக நம்பிக்கையும், ஞான ஒளியும் கொடுத்து அவர்களுக்கு நற்கதி அளிக்க முடியும்" என்றே ஆகும்.

ஆனந்தாசிரமத்திலிருந்து 1952ஆம் ஆண்டு ஸ்வாமி ராமதாஸரிடமிருந்து, பகவான் யோகி ராம்சுரத்குமார் விடை பெற்றுச் செல்லும்போது, ஸ்வாமி ராமதாஸர் அவரிடம் கேட்டார், "எங்கு செல்ல முடிவு செய்துள்ளாய்?" ஆண்டவனால் உணர்த்தப்பட்டு பகவான் "திருவண்ணாமலைக்கு" என்று கூறினார். ஸ்வாமி ராமதாஸரின் பரிபூர்ண ஆசியுடன் பகவான் யோகி ராம்சுரத் குமார் தன் ஆன்மீக லட்சியத்தின் பயணத்தை ஆரம்பித்தார்.

1952 ஆம் ஆண்டு முதல் ஏழு வருட காலம், பாத தாமரைகள் புண்பட, காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, பாரத தேசத்தை ஸஞ்சாரம் செய்து வந்தார். பகவான் யோகிராம் சுரத்குமார், பாரத நாடு மீண்டும் ஆன்மீக எழுச்சி பெற வேண்டும், நம் பாவங்கள் நீங்க வேண்டும், மக்களுக்கு இறை உணர்வும், ஆன்மீக பலமும் ஏற்பட வேண்டும் என்றே பகவான் இந்த தபஸ்ஸை மேற்கொண்டார்.

1959ஆம் ஆண்டு திருவண்ணாமலை அடைந்து தம் இருப்பிடமாகக் கொண்டு அருள் நெறி பரப்பி வருகின்றார் பகவான். ஆரம்ப காலத்தில் திருவண்ணாமலை ரயில் நிலையத்தருகில் மைதானத்திலிருந்த ஒரு புன்னமரத்தடியில் காற்றையும், மழையையும், வெயிலையும், குளிரையும் பொருட்படுத்தாமல் உறைந்து வந்த இப்பெருமானார், பிறகு அருணாசலேசுவரரின் திருத்தேர் நிலையில் நெடுங்காலம் தங்கி அருள் பாலித்து வந்தார். அன்பர்கள் பலரின் கோரிக்கைக்குச் செவி சாய்த்து பகவான் 1977 ஆம் ஆண்டு முதல், 90 சந்நிதி அக்கிரஹாரத்தில் தங்கி வருகின்றார்.

'நினைத்த மாத்திரத்தில் முக்தி தரும்' புண்ணியத் தலம் எனப் போற்றப்படும் திருவண்ணாமலையில் வீற்றிருந்து, ஞான ஒளியைப் பரப்பும் பகவான் யோகி ராம்சுரத்குமார் அருட் பெருஞ்ஜோதியாகக் காட்சி தரும் அழகே அற்புதம்!

தெய்வீகம் பொருந்திய முகம், கூர்ந்த ஒளி வீசும் கண்கள், விசாலமான நெற்றி, தலையில் தலைப்பாகை, பாதம் வரை கீழ்பாய்ச்சிக் கட்டப்பட்ட வேட்டி, மேல் வஸ்திரமாக ஜிப்பா, போர்த்திய அங்கவஸ்திரம், சிம்மக் குரலில் அலை அலையாய் மிளிரும் சிரிப்பு, ராஜ கம்பீரமான நடை, திருக்கரத்தில் விசிறி, கொட்டாங்குச்சி, ராம நாமாவை எல்லையற்ற கனிவுடன் உச்சரிக்கும் திருவாயும் - இந்தத் தோற்றத்தில் காட்சி தரும் பகவான் யோகி ராம்சுரத் குமாரரின் சந்நிதியில் இருக்கும் பொழுது, கனிந்து உள்ளம் உருகி அவர் நம்மை வாழ்த்துகின்ற அளவு மிகுந்த கருணையும், பரிவையும் அனுபவிக்கும் நம் உள்ளத்தில் எழும் எண்ணம்,"எத்தனை கருணை, எத்தனை தெய்வீகம், எம்பெருமான் சந்நிதியல்லவா!".

பகவான் தம்மை அண்டி வருவோர்களைக் கடைக்கண்ணால் நோக்கி அருள் பாலிப்பார். கைகளை உயர்த்தி ஆசிமொழி பொழிவார். நாம் எவ்வளவு பெரிய குழப்பத்துடனும், மனக்கிலேசத்துடனும் அவரிடம் சென்றிருந்தாலும் நம் மனவருத்தம் தீரும்படி நமக்கு ஆறுதல் திருமொழிகள் கூறி நமக்குத் தைரியமும், சாந்தியும் அளிப்பார். உலகில் தோன்றும் துன்பங்கள் எல்லாம், இறைவன் திருநாமத்தை

மறக்காமல் உச்சரித்தால், கொஞ்சமும் நில்லாமல் இன்றே ஓடிவிடும். இறைவன் திருநாமத்தை மறந்தால் அதுவே நம் வாழ்க்கையில் மாபெரும் விபத்து என்று ஒளிவீசும் இசையோடு உபதேசிப்பார்.

திருவண்ணாமலையில் நான் இருந்த காலத்தில், பல மாதங்கள் அருணாசலேசுவரர் ரதத் தேர் நிலையத்தில் பகவானின் ஸந்நிதானத்தில் இருக்கும் பெரும் பேற்றை என் கணவரும் நானும் பெற்றோம்; அந்தக் காலங்களில் சாதாரண உரையாடல்போல் தொடங்கிப் படைப்பின் இரகசியத்தை விண்டு காட்டும் அற்புத அனுபவங்களை அருளியதோடு, வடமொழியில் பக்திக் கவிதைகள், ஆன்மீகக் கதைகள் கூறுதல், அகில சராசரத்தில் இருக்கும் அதே சக்தி நமக்குள் உள்ளது என்று எடுத்துரைத்தல், அவ்வப்பொழுது வழிகாட்டுதல், ஆறுதல் கூறுதல், ஆசியுரைகள் வழங்குதல், ஆனந்தாதிசயம் பொங்கி வழியச் செய்தல் முதலிய எண்ணற்ற திருவிளையாடல்களை இப்பெருமானார் நிகழ்த்தியுள்ளார்கள்.

"இறைவனை ஆழ்ந்து அனுபவித்து ஆழங்கால் படுபவர்களே ஆழ்வார்கள்" என்று கூறி, திருமங்கையாழ்வாரின் கீழ்க்கண்ட பாசுரத்தை அடிக்கடி என் கணவரைக் கூறச்சொல்லி ஆனந்திப்பார்.

குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார்
படுதுயராயின வெல்லாம்,
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்,
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்,
நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்.

(பெரிய திருமொழி - 9ஆம் பாசுரம்)

மற்றொரு சந்திப்பின் பொழுது பகவான் என்னிடம், "பாரத தேசத்தின் சரித்திரம் புத்தர் காலம் தொடங்கித்தான் எழுதப்பட்டு வருகிறது. நீ வேத காலம் தொட்டு பாரதத்தின் சரித்திரத்தை எழுதுவாய்" என்று கூறினார். அந்த வாக்கியத்தின் உள்ளர்த்தம் அப்பொழுது எனக்குப் புரியவில்லை என்றாலும், பகவானுக்கு வேதங்கள், உபநிடதங்கள், இதிஹாஸ புராணங்கள், சைவத் திருமுறைகள், வைணவப் பிரபந்தங்கள் மீதுள்ள அவருடைய ஆராக் காதல் புரிந்தது. "உண்மையைக் கூறப் போனால் இந்த அகில மானிட சமுதாயமே வேதம், வேத மந்திரம் மற்றும் மஹான்களாலும் அவதார - புருஷர்களாலும் நிலைத்துக் கொண்டிருக்கிறது. இந்தப் புண்ணிய பாரதத்தில் பல மஹான்களும், தவசீலர்களும் தோன்றியிருக்கிறார்கள். இன்றும் தோன்றிக் கொண்டு இருக்கிறார்கள். இந்தப் புண்ணிய பாரதம், இந்த ஞான பூமி ஆண்டவனால் எப்பொழுதும் காக்கப்படும். இந்த ஞான பூமியில் நாம் பிறந்திருப்பதே புண்ணியம்" என்று பகவான் அடிக்கடி கூறுவார்.

சில ஆண்டுகள் கழித்து, நான்கு வேதங்களின் பண்டிதரான மஹாமஹோபாத்யாய ஸ்ரீ உ.வே. அக்னிஹோத்திர ராமானுஜ தாத்தாசாரியார் அவர்கள் என்னைத் தன்னுடைய Eternal Relevance of Vedas, Tirumala Tiruppathi Devasthanam Religious Publications Series No. 288, 1985 என்னும் ஆங்கிலப் புத்தகத்திற்கு மொழி ஸம்பந்தமாக உதவிபுரிய எனக்கு வாய்ப்புக் கொடுத்த பொழுது, நான் அதைப் பகவானின் அருளாணையாக எடுத்துக் கொண்டேன். இந்தப் புத்தகத்தை நான் எழுதும் காலத்தில் பகவான் யோகி ராம் சுரத் குமார் என் கணவரை வாராவாரம் திருவண்ணாமலைக்கு அழைத்து ஏறத்தாழ ஏழு மாத காலம், பசி, தாகம், தூக்கம் யாவையும் பொருட்படுத்தாமல் அந்தப் புத்தகத்தின் ஒவ்வோர் அத்தியாயத்தைப்படித்துப்பரிசோதனை செய்ததும் அல்லாமல், தன்னுடைய இப்பணியை வெளி உலகிற்கு வெளிப்படுத்தக்கூடாதென்றும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து எந்தவித சன்மானமோ, சலுகையோ நாங்கள் பெறக்கூடாது என்று எங்களை ஆணையிட்டார்.

அத்வைத சிங்கமான பகவான் ரமணர்கூட விதியை மாற்ற முடியாது என்றும் "தேகத்தைக் கடந்து ஆன்மா என்ற இருத்தலே விடுதலை" என்கிறார். இப்படி இருக்க பக்தி செய்தும் துன்புறும் வாழ்வில் நிவாரணமும், பணம்-பதவி-வலிமை படைத்த கொடியவர்களிடமிருந்து எளியவர்களுக்கு எங்ஙனம் விடுதலை கிடைக்கும்? இதனால்தான் மேல் நாட்டிலும், நம் பாரத நாட்டிலும் இளைஞர்கள் ஆன்மீகத்தை மறந்து பணத்தையும், பதவியையும் நாடி அலைந்து அல்லலுறுகிறார்கள். "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" என்று நம்மாழ்வார் கூறியபடி, நமது ஊழ்வினையைப் போக்கும் நடமாடும் தெய்வம்தான் பகவான் யோகி ராம் சுரத்குமார். அருணையில் சென்றால் இந்தக் கருணையைக் காணலாம்.



சிந்தனை மணிகள்

தன் பூரண யோக சாரத்தை 547 மணிகளாக பகவான் ஸ்ரீ அரவிந்தர் தான் புதுவைக்கு வந்த புதிதில் எழுதினார். ஞானம், கர்மம், பக்தி என்ற தலைப்புகளில் எழுதப்பட்டவை அவை. சாதாரண மனிதனுடைய கருத்துக்குப் புறம்பான வழியில் இறைவன் செயல்படுகிறான் என்பதை விளக்குபவை அவை. இறைவனை உயர்ந்த புருஷனாகக் கருதுவது நம் இயல்பு. உயர்ந்த புருஷனையும், தாழ்ந்த மனிதனையும் படைத்தவன் இறைவன். அவரிருவரும் இறைவனே என்பது பகவான் ஸ்ரீஅரவிந்தர் அனுபவம். அதை விளக்கும் யோகானுபவம் அவர் எழுதிய 547 மணிகள். சுமார் 25 வருஷத்திற்கு முன்னால் திரு ரா. ஸ்ரீ தேசிகன் அவற்றை சிந்தனை மணிகள் என்ற தலைப்பில் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அன்னை நூற்றாண்டு வெளியீட்டில் 10ஆவது வால்யூமில் இந்த சிந்தனை மணிகளுக்கு அன்னை தனித்தனியே விளக்கம் அளித்துள்ளார்.

ஆஸ்திகன் நல்லவன்; நாஸ்திகன் கெட்டவன் என்பது நம் கருத்து. நாஸ்திகனுக்குள்ள தெய்வ நம்பிக்கை ஆஸ்திகனுடைய தெய்வ நம்பிக்கையைவிட உயர்ந்தது என்பது ஆன்மீக உண்மை. புண்ணியத்தை நாம் வரவேற்கின்றோம், பாவத்தை வெறுக்கின்றோம். அவை இரண்டும் ஆன்மீகப் பாதையிலுள்ள இரண்டு கட்டங்கள் என்பது சித்திபெற்றவர்களுடைய விளக்கம். அதிர்ஷ்டம் ஆண்டவனின் பரிசு, துர் அதிர்ஷ்டம் இறைவனின் தண்டனை என்ற பொதுக் கருத்தை மாற்றி, துர்அதிர்ஷ்டம் ஆண்டவனுடைய உயர்ந்த பரிசு என்று விளக்குவது யோக சித்தி. பிருந்தாவனத்தில் கிருஷ்ண பரமாத்மா லீலைகள் புரிந்தார் என்பதால் அங்கு யாத்திரை போக விழைவது பக்தனுள்ளம். கிருஷ்ண பரமாத்மாவுடைய பிருந்தாவனம் ஆன்மீக யாத்திரையின் எத்தனையாவது கட்டம் என்று விளக்குவது ஞானம். தேவன் வழிபாட்டுக்குரியவன், அசுரன் கொடூரமானவன் என்பது நம் சட்டம். அசுரன், அதிதீவிரமான பக்தியால் இறைவனை சீக்கிரமாக அடைய முயல்பவன் என்பது ஸ்ரீஅரவிந்தர் விளக்கம்.

இந்த 547 மணிகள் விளக்கும் கருத்துகள் ஏராளம். அவற்றுள் பெரும்பாலானவற்றைக் குறிப்பிடுகிறேன்.

ஞானம்; சித்திபெறும் ஆன்மீக ஆர்வம்; பகுத்தறிவு; ஞானமும், மடமையும்; இறைவனின் பரிசு; விவேகம்; மனத்திரை; தந்திரவாதிகள்; ஆன்மா; அறியாமை; இறைவன்; பயங்கரக் காட்சிகள்; இன்றைய அறிவாளி; அகந்தை; தற்செயலாக நடப்பது; விகாரம்; விகாரத்தில் தெய்வம்; வைஷ்ணவம்; கிருத்துவம்; அருளும், தூக்குமேடையும்; கிருஷ்ண பரமாத்மா; நெப்போலியன்; புண்ணியம்; லீலை; காரண, காரியம்; தண்டனையானவரும்; அன்பு; துர் அதிர்ஷ்டம்; ஜெருசலம்; பிருந்தாவன்; ஜூலியஸ் சீஸர்; சரித்திரம், குருக்ஷேத்திரம்; மோட்சம்; மன்னிப்பு; நரகம்; பொய்மை; தர்க்கம்; சிறை; கடமையில் இறைவன்; அழகு; பாவி; சித்து விளையாடுதல்; மதப்போராட்டம்; வருணன்; எமன்; தர்க்கவாதி; கைதி; காட்டுமிராண்டி; மரணம்; மடையன்; முஸ்லிம்; பாவம்; எண்ணம்;



இராமன்; ஜனநாயகம்; சோஷலிஸம்; பயம்; முகஸ்துதி; துன்பம்; பக்தி.

சில சிந்தனை மணிகளைச் சுருக்கமாகவும், ஒரு சிலவற்றை விளக்கமாகவும், மற்றும் சிலவற்றைக் குறிப்பாகவும் எழுதுகிறேன்.

1. பகுத்தறிவு அழிந்த பின்னரே விவேகம் பிறக்கின்றது. அதுவரை நாம் பெற்றுள்ளது சாதாரண அறிவு.

2. இறைவன் என் கண்களைத் திறந்த பொழுது விகாரமானவனுடைய கவர்ச்சி எனக்குத் தெரிந்தது. கோர மனிதனின் பெரும் தன்மையும் அந்த திருஷ்டிக்குத் தெரிகிறது.

3. நித்தியத்துவம் என்பது அழியாத ஆன்மா நம் அன்றாட வாழ்வில் செயல்படுவதாகும்.

4. விலங்கான மனிதனுக்கு எட்டாத நிலையில் உள்ள பொக்கிஷங்கள் என்ன என்பது தெரிந்தால், அதைப் பெறும்வரை மனிதன் ஓயமாட்டான்.

5. எனது துர்அதிர்ஷ்டத்தைத் தீமை என்று என் மனம் விவரிக்கும்பொழுது, மனிதனுக்குரிய மடமை செயல்படுகிறது என்று நான் அறிவேன்.

6. தெய்வத்துடன் கண்ணாமூச்சு விளையாடும் தெய்வமே நாத்திகன்.

7. உலக சரித்திரத்தின் பெரு நிகழ்ச்சிகள் நான்கு.

- டிராய் நகரத்தின்மீது தொடுத்த போர்.
- இயேசுவைச் சிலுவையில் அறைந்தது.
- பிருந்தாவனத்தில் கிருஷ்ணனிருந்தது.
- குருக்ஷேத்திரத்தில் பகவான் அர்ஜுனனுக்குக் கீதோபதேசம் செய்தது.

8. வேதங்கள் பொய், கிருஷ்ண பரமாத்மா கவிகளின் கற்பனை என்கிறார்கள். அப்படியானால் அந்தப் பொய்யைச் சொன்னவருக்கும், கற்பனையில் தன்னை இழந்தவனுக்கும் நான் தலை வணங்கி நன்றி சொல்கிறேன்.

9. ஜீவனற்ற புத்தகத்தை ஜீவனோடு படித்து ஜீவனற்ற நிலையை நன்கு அறிந்தால், நான் மனத்தை வென்றவனாவேன்.

10. நான் பக்தனில்லை, ஞானியில்லை, இறைவனின் அடிமையுமில்லை. வேறென்ன? இறைவனின் உதட்டுடன் உறவாடும் வேய்ங்குழல் நான்.

11. இறைவனுக்குரியவர்களெனப் பெருமைப் படுபவர் பலர், நான் இறைவனை நாடவில்லை என்ற பெருமை எனக்குண்டு. அவனே என்னை நாடி வந்தான். வற்புறுத்தி என்னை அவனுடமையாக்கினான்.

12. பயந்து வணங்கும் பக்தன் யூதன். அவனை அறிந்து விழைபவன் இந்து.

13. நான்கு வகையான வலியை நமக்களிக்கின்றான் இறைவன்.

முதல் வகை சாதாரண வலி.

இன்பத்தைக் கொடுக்கும் வலி அடுத்தது.

இன்பமாகவே இருக்கும் வலி மூன்றாம் வகை.

தீவிர ஆனந்தமான வலி கடைசிவகை.

14. என் மனத்தைப் புண்படுத்தியபின், வற்புறுத்தி என்னை மன்னிக்கச் சொன்னான் இறைவன். அதற்கீடாக மேலும் என் மனத்தைப் புண்படுத்தினான்.

15. புன்னகையை அறியாத இறைவன் இந்த ஆனந்த லோகத்தை எப்படி சிருஷ்டிக்க முடியும்?

லவ் பேர்ட் லக்சுரி டால்க்



முகப் பவுடர்கள் பலவகை. பொதுவாக தரம், மிருதுத் தன்மை, தூய்மையான மணம் பொருந்தியவையாக அமைதல் வேண்டும். எல்லோர் எதிர் பார்ப்பும் இதுவே.

வாடிக்கையாளரின் இந்த எதிர்பார்ப்பை முழுமையாகப் பூர்த்தி செய்யும் நோக்கில் மார்க்கெட்டில் இப்போது விற்பனைக்கு 'லவ் பேர்ட் லக்சரி டால்க்' (Love Bird Luxury Talc) பவுடர் வந்துள்ளது.

டால்க் பவுடர் தயாரிப்பில் உபயோகப்படுத்தப்படும் முக்கிய மூலப் பொருளான துகள்கள் மிகச் சன்னமாக இருத்தல் அவசியம். திரள்திரளாகவோ, ஊசி முனைகளுடனோ இருத்தல் கூடாது. இப்படி இருந்தால் இறுதித் தயாரிப்பு சருமத்தை அடைத்துக் கொள்ளும் பாதுகாப்பற்ற தன்மை ஏற்படும்.

ஆனால் லவ் பேர்ட் லக்சரி டால்க் தயாரிப்பாளர்கள் உறுதி படக் கூறுகிறார்கள்: "நாங்கள் உபயோகிக்கும் மூலப் பொருளான பவுடர் மிருதுவாக இருப்பதில் மிகவும் கவனத்துடன் இருக்கிறோம். துகள்கள் மிகச் சன்னமாக, சருமத்துக்கு எவ்விதக் கேடும் செய்யாதபடி இருக்க உரியதையே தேர்வு செய்கிறோம். இதனால் இறுதித் தயாரிப்பு மிக மென்மையாக, மாவுபோன்ற பொடியாக, நல்ல நறுமணமும் சேர்க்கப்பட்டு சருமம் மற்றும் உடல் ஆரோக்கியத்துக்கு உகந்த மாதிரியில் தயாராகிறது."

சருமத் துவாரங்கள் பவுடர் பூசியவுடன் அடைத்துக் கொள்ளாமலும், அதே சமயம் நாள் பூராவும் மேனியின் நறுமணம் நீடித்து இருக்கவும் இவர்கள் தயாரிப்புப் பயன்படுகிறது.

மார்க்கெட் செய்யப்படும் இறுதிக் கட்டத்தில்கூட, தரக் கட்டுப்பாடு வல்லுநர்கள் தயாரிப்பைப் பரிசீலித்தே விற்பனைக்கு அனுப்புவதாகத் தெரிவிக்கிறார்கள். ஏனெனில் இந்த இறுதிக் கட்டப் பரிசீலனையில்கூட ஏதேனும் ஈரக் கசிவு இருந்தாலும் அது தவிர்க்கப்படுகிறது. மேலும் டால்க் பவுடர் உற்பத்தியாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தரக் கட்டுப்பாடு நிர்ணயத்தைப் பூரணமாக உறுதி செய்து கொள்கிறார்கள் 'லவ் பேர்ட் லக்சரி டால்க்' தயாரிப்பாளர்கள்.



மார்க்கெட்டில் புதிது

ஸ்வாடேஜ் நீம் சோப்

தற்போது மார்க்கெட்டில் விற்பனையாகும் சோப்புகள் தான் எத்தனை விதம்! இவற்றில் முக்கியமாக சருமப் பாதுகாப்பு, உடல் ஆரோக்கியத்துக்கு உகந்தமாதிரி வேம்பு (Neam) கலந்த சோப்புகளும் பலவுண்டு.

இப்போது புதிதாக 'நீம்' (வேம்பு) கலந்த சோப் விற்பனைக்கு வந்துள்ளது.

ஸ்வாடேஜ் நீம் சோப்.

சருமப் பாதுகாப்பு எல்லோருக்குமே முக்கியமானது. சருமத்தின் மென்மைக்கும் உணர்வுக் கட்டுப்பாட்டுக்கும் ஈடு கொடுத்துப் பாதுகாக்கும் முறையில், சோப்பு உற்பத்தித் துறையில் நிபுணர்களால் மிகவும் கவனமாக உருவாக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது ஸ்வாடேஜ் நீம் சோப்.

சுத்தமான வேம்பு, கலப்பில்லாத தாவர எண்ணெயால் தயாராவதுடன், தரமான உட்பொருள் கலவையுடன் சேர்த்துத் தயாராகி மார்க்கெட் செய்யப்படுகிறது.

தட்ப, வெட்ப நிலையில் பொதுவாக உஷ்ணப் பிரதேசமான நம் நாட்டில் நமது சருமம் கால நிலைகளின் மாறுபாட்டுக்கு அவ்வப்போது உட்படுவதாக உள்ளது. இதனால் சருமம் இக் கால நிலை வேறுபாட்டால் பாதிக்கப்படாமல் இருத்தல் அவசியம். முக்கியமாக எதிர் விளைவுகள் தவிர்க்கப்பட வேண்டும். அதனால் நமது சருமம் சீரான நிலையில் எப்போதும் இருக்கும் பாதுகாப்பு வேண்டும். இதை உறுதிப்படுத்தும் வகையில் ஸ்வாடேஜ் நீம் சோப் தயாரிப்பு உள்ளது.

தயாரிப்பில் காற்றுப் புகாமல் சோப்புக் கட்டிகளுக்கு உறுதித் தன்மை வேண்டும். இதனால் உபயோகிப்பில் கரைவது கட்டுப்படுத்தப்பட்டு, நீண்ட நாள் வருவதும் சுலபமாகிறது.

தயாரிப்பாளர்கள் கூறுகிறார்கள்: எங்கள் சோப்பை வாங்குவோர் நிச்சயம் மிகச் சிறந்ததையே தேர்வு செய்கிறார்கள்.

சங்கப் பலகை

ஓசையிடும் மௌனங்கள்

(நூலாசிரியர் – ஆனந்தம் கிருஷ்ணமூர்த்தி. வெளியீடு – 'பாரதி 200' புதுடில்லி 110 067. (நவபாரதி பிரசுரம், 14,தெற்கு மாடவீதி, திருநின்றவூர் – 602 024). பக்கங்கள் – 96. விலை – ரூ. 12.00.)

தலைநகரில் தமிழ் இலக்கியம் தழைக்கவும், முத்தமிழின் ஓசை முழங்கவும் அல்லும் பகலும் அயராது தமிழ்ப் பணியாற்றிவரும் ஆனந்தம் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 'ஓசையிடும் மௌனங்கள்' என்ற இந்நூல் இரு குறுநாவல்களின் தொகுப்பாகும்.

"ஏறக்கூடாத முரசு கட்டிலிலே ஏறிப் படுத்துத் தூங்கிப் போன மோசிகீரனாரை வாளாலே வெட்டிப்போடாமல் விசிறியாலே வீசிக்கிட்டு நின்னானே சேரமான் பெருஞ்சேர இரும்பொறை, அவன் புலவர்களை மதிச்ச மாதிரி ஆசிரியர்களை மதிக்கிற அருமை நிர்வாகிகள் இந்தக் காலத்திலே இருக்காங்களா?" என்று தன் இலக்கியத் திறனையும்,

"எல்லா விலங்குகளின் முன்னேயும் கழுதைகளின் முன்னே கூட – நான் மனத்தால் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறேன். எல்லா வடிவங்களுக்கும் பெயர் பின்னேயுள்ள பிரம்மத்தை நான் காண்கிறேன். அன்றாட வாழ்வில் அதுதான் உண்மையான வேதாந்தம்" என்று மனித நேய வெளிப்பாடுகளையும் சொற்கோலமாக்கி,

"பாம்புச் சிலையைச்
சுத்திவந்தா தங்கமே தங்கம்
பண்ணிய பாவமெல்லாம்
தொலையுமடி தங்கமே தங்கம்"

....
....

"விஞ்ஞானத்தால் ஆகாதது –
குதம்பாய்
மெய்ஞ் ஞானத்தால்
ஆகுமோடி – குதம்பாய்"

இப்படிப் பாடல்களையும் பக்குவமாய்ப் பதித்துத் தன் இசை மேதையினையும் பறைசாற்றும் ஆனந்தம் கிருஷ்ணமூர்த்தியின் இந்நூல் படித்து இன்புறத்தக்க நூல்.

அவளுக்கென்று ஒருவன்

(நூலாசிரியர் – பா. அமிழ்தன். மதிவெளியீடு – 5/43 பூஞ்சோலைத் தெரு, கள்ளிக்குளம் – 627 113. பக்கங்கள் – 120. விலை – ரூ. 15.00.)

கடல் கடந்தும் இலக்கிய மணம் பரப்பிவரும் கவிஞர் பா. அமிழ்தனின் ஐந்து குறுநாவல்களை உள்ளடக்கிய உணர்ச்சிகளின் ஊர்வலம் தான் 'அவளுக்கென்று ஒருவன்' என்னும் இந்நூல்.

சூழ்நிலை பாதிப்புகளை வைத்துப் 'புதிரான விடைகளை'யும், மனத்தீயைத் தணிக்க மண்ணெண்ணைத் தீயை வைத்துக் கொள்ளும் பாத்திரம் மூலம் 'இதற்காகவோ?' என்றும், மீன் குஞ்சுகளை வைத்து மனித 'முரண்பாடுகளையும்' வைத்து எழுதப்பட்ட அமிழ்தனின் 'அவளுக்கென்று ஒருவன்' படிப்பவர்களுக்கு ஒரு 'முழுமையை'த் தரவல்ல நல்ல தொகுப்பு நூலாகும்.

– பின்னலூர் மு. விவேகானந்தன்

முடன், மட்டி, மடையன் கதைகள்

(பதிப்பாசிரியர் : லேனா தமிழ்வாணன் எம்.ஏ., வெளியீடு : மணிமேகலைப் பிரசுரம், 4. தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை – 17. விலை ரூ : 16.00).

நகைச்சுவையும், அறிவுச் சுவையும், சிந்தனைச் சுவையும் நிரம்பிய இருபத்தேழு கதைகளின் தொகுப்பு. பெரியோரும் சிறியோரும் படிக்கலாம்.

மங்கியதோர் நிலவினிலே

(எழுதியவர் – கோவூர் இசைதாசன். வெளியீடு – எழில் பதிப்பகம், 823 சன்னிதி வீதி, கோவூர், (வழி) மாங்காடு – 602 101. விலை – ரூ.17.50.)

எண்பத்தாறு கவிதைகளின் தொகுப்பு நூல். காதல், அரசியல் தலைவர்கள் பற்றிய கவிதைகளுடன் "டபேதார் திருப்பள்ளி எழுச்சி (பக் – 17) மேலாடையும் உள்ளாடையும் (81) சுரதாவின் பொடிடப்பி (96) எமதர்மனின் ஏஜண்டுகள் (173) போன்ற பொருள் பொதிந்த நகைச்சுவைக் கவிதைகளும் இடம்பெற்றுள்ள.

சதாம் உசேன்

(எழுதியவர் – இசட். ஒய். ஹிம்ஸாகர். வெளியீடு – பத்மா & பத்மா பப்ளிகேஷன்ஸ், அஞ்சல் பெட்டி எண். 60. 179 / 180 மேலவீதி, சிதம்பரம் – 608 001.)

ஈராக் அதிபர் சதாம் உசேனின் வாழ்க்கையோடு கலந்துவிட்ட வளைகுடாப் போரின் முன், பின் விளைவுகளை விளக்கியுள்ள ஆசிரியர். செங்கிஸ்கான், பதினான்காம் லூயி, நெப்போலியன், முசோலினி, ஹிட்லர் போல சதாம் உசேன் ஆட்சிக் கட்டிலிலிருந்து தூக்கியெறியப்படாததால் எதிர்காலத்தில் ஈராக்கைத் தலைசிறந்த நாடாக்குவார் என்று தமது நம்பிக்கையைத் தெரிவிக்கிறார். வளைகுடாப் போரைப் பற்றித் தெரிந்துக் கொள்ளப் படிக்கலாம்.

பறக்கும் கோப்பை

(எழுதியவர் – வான்முகில். வெளியீடு – அகரம், 2 சிவன் கோயில் தெற்குத் தெரு, சிவகங்கை – 623 560. விலை –ரூ – 16.00.)

பீர்பால் கதைகள், முல்லா கதைகள், தெனாலிராமன் கதைகள் போலக் காலத்தை

வெல்லும் அற்புதமான கற்பனைக் கதைகள் இந்நூலில் உள்ள திப்பிலி ராஜாக் கதைகள். சுவையான கதை அமைப்பும் மனத்திற்குச் சுகமான கற்பனை அழகும் போற்றத்தக்கவை. பெரியவர்களும் சிறியவர்களும் படிக்கலாம்; சுவைக்கலாம்; சுவைத்துச் சிரிக்கலாம்!

கம்பனில் அறிவு

(எழுதியவர் - பாவலர் சு. வேல்முருகன். வெளியீடு - கம்பன் பதிப்பகம், 60. குயவர் தெரு, முருங்கப்பாக்கம், புதுச்சேரி 605 004. விலை - ரூ. 18.00.)

அறிவு, புத்தி, போதம், மதி முதலான ஒரு பொருள் பல சொற்களின் நுண்ணிய வேறுபாடு விளக்கி, அறிவின் கூறுபாடுகளைத் தொகுத்துத் தொடங்கும் கட்டுரையுடன் நூல் தொடங்குகிறது.

அடுத்து, கம்பன் சிறப்பும் அவன் ஒண்பாச்சிறப்பும் வசிட்டன் அளித்த கல்விச் சிறப்பும், கம்பன் கண்ட உயிர்ப் பாகுபாடுகளின் அறிவும், பட்டறிவின் பகிர்வும், கம்பனின் அறிவுக் கூறுகளும் என்று பன்னிரண்டு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. 'பாயிரமே அறிவு ஆயிரம்' - தலைப்பைப் போலவே உட்பொருள் இலக்கிய நயம் மிகுந்துள்ளது. நூலாசிரியர் கம்பனில் தோய்ந்தவர் என்பதை நூல் நுவல்கிறது.

—தாமரைக்கண்ணன்

சின்னச் சின்னச் சிட்டுகள் சிங்காரப் பாட்டுகள்

(ஆசிரியர் - கவிஞர் சங்கை வேலவன். வெளியீடு - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிமிடெட், 41.பி., சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை - 600 098. பக்கங்கள் - 88. விலை - ரூ 9.00).

எழுபது குழந்தைப் பாடல்களின் தொகுப்பு. குழந்தைகள் வாய்விட்டுப் பாடி மகிழக்கூடிய எளிய சந்தங்களில் உருவாக்கப் பெற்றிருப்பது இந்நூலின் சிறப்பு. ஆசிரியர் சங்கை வேலவன், அமரர் ஜீவாவின் அரிய தத்துவங்களில் தோய்ந்த காரணமே இதன் பிறப்பு! 'என் சிபிஹெச்' போன்ற புகழார்ந்த பதிப்பகங்கள் குழந்தை இலக்கியங்களைப் படத்துடன் வெளியிட வேண்டுமென்பது நம்குறிப்பு!

கழுகுமலை கந்தனலங்காரம்

(ஆசிரியர் - கோவில்பட்டி நீலமணி. வெளியீடு - கழுகுமலை கந்தசஷ்டி விழாக்குழு, கழுகுமலை. கிடைக்குமிடம் - கோவில்பட்டி பா.கண்ணன், 70, மாதாக் கோயில் தெரு, கோவில்பட்டி - 627701. பக்கங்கள் - 36. விலை - ரூ. 3.)

கழுகுமலை வீற்றிருக்கும் கந்தப் பெருமானைக் கனிந்த தமிழால் உருகி வேண்டுகிற கட்டளைக் கலித்துறை நூற்றெட்டுத் திருப்பாட்டுகள் கொண்ட அழகிய சிறு நூல். பக்தி நெறியும், பைந்தமிழ்ச் சுவையும் ஊடும் பாவுமாக அமைய உருவாக்கப் பெற்ற வழிபாட்டு நூல்.

செல்லப் பாப்பா

(ஆசிரியர் - நெல்லை செல்வம். வெளியீடு - செல்லப் பாப்பா பதிப்பகம், எண். 6, கஸ்தூரிபாய் நகர், 4 ஆவது தெரு, அனகாபுத்தூர், சென்னை - 600 070. பக்கங்கள் - 80. விலை - ரூ.10.00)

சமுக உணர்வும், தொண்டுள்ளமும் வளரும் குழந்தைகளின் மனங்களில் பதிய வேண்டுமெனும் இலட்சிய தாகத்துடன் எழுதப்பெற்ற சிறுவர் கதை. குழந்தை இலக்கியத்திற்கு வளமும் வனப்பும் சேர்க்கும் இந்நூலில் ஆசிரியர் நெல்லை செல்வம் - செல்லப் பாப்பா, மணிமாறன் ஆகிய இரு பாத்திரப் படைப்புகளை பாராட்டத் தக்கனவாய் உருவாக்கி உள்ளார். சிறுவருக்கான கதைகள் எப்படி உருவாக்க வேண்டுமென்பதற்கு இச்சிறிய நூல் பெரியதோர் எடுத்துக்காட்டு.

— குன்றக்குடி

ஒரே வானம் ஒரே நிலவு

(ஆசிரியர் - பி.வி. கிரி. வெளியீடு - திருமலைப் பதிப்பகம், N385, அறிஞர் அண்ணா நகர் கிழக்கு, சென்னை - 600 102. பக்கங்கள் - 112. விலை - ரூ. 14)

குழந்தைகளுக்கான கதைகளைச் சுவைபடக் கூறும்போதே நல்ல கருத்துகளையும் அவர்களிடம் தெரிவிக்கும் நோக்குடன் எழுதப்பட்ட சிறுகதைகளின் தொகுதி, இந்நூல்.

— கே. ஏ.

ஐசுவரியம் தரும் அஷ்டலக்ஷ்மி

(ஆசிரியர் - நாகர்கோவில் கிருஷ்ணன். வெளியீடு - மஹேஸ்வரி பிரசுரம், 55, சோலையப்பன் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004. பக்கங்கள் - 104. விலை - ரூ. 10.00).

அஷ்ட ஐசுவரியங்கள் பெருக வேண்டுமென்று நினைப்பவர்களுக்குச் சிறுசிறு புராண கதை நிகழ்ச்சிகளைக் கூறுவதோடன்றி உரிய நமஸ்கரிக்கும் பாங்குகளையும் விளக்கும் இந்நூல், ஸ்ரீமஹாலக்ஷ்மி வைபவம், ஸ்ரீலக்ஷ்மியின் வாசஸ்தலம், ஸ்ரீமஹாலக்ஷ்மி அவதார மகிமை, ஸ்ரீலக்ஷ்மியை ஆராதித்த அமரேந்திரன், தசாவதாரத்தில் ஸ்ரீலக்ஷ்மி கனகதார ஸ்தோத்ர வைபவம், ஸ்ரீதேசிகரின் ஸ்ரீஸ்துதி, ஸ்ரீ ஸூக்தம், குத்துவிளக்கு பூஜையும் விரதமும், துளசி மகிமை, ஸ்ரீமஹாலக்ஷ்மீ ஸ்தோத்திரங்கள், திருமகள் தரிசனம் போன்ற பன்னிரு தலைப்புகளில் அற்புதமாய் விளங்குகிறது.

— நீலவன்

கனவினில் மட்டும்...

ச. இலக்குமிபதி



கனாக் காணும் உரிமை நமக்குக்
கடவுள் கொடுத்தான் பிறக்கும்போது!
செலவுகள் இன்றி சுகங்கள் கொடுக்கும்
சுந்தரக் கனவே! நீ களைப்பு மருந்து!

ஆலையில் கரும்பாய் நசுங்கி உழைப்பவன்
அதிக போனஸ் கனவினில் காண்பான்!

கல்யாணம் முடியா கன்னிப் பெண்கள்
கனவினில் மட்டும் கணவனைப் பார்ப்பார்!

கனவுகள் அன்றும் தூங்க வைக்கும்
கவலைகள் கரையும் பொழுதுகள் விடியும்!

அஞ்சுகிறோம்

பொன். செல்வகுமார்



பாதி இருளில் சுழலும் பூமியில்
முழுவதுமாக இருளில் மனிதர்கள்
கவலை அலைகளில் மிதந்து
பிணக்கரையில் ஒதுங்குகிறோம்

இளைப்பாறுதலுக்காக
இதயங்களை விற்று
விலைவாசி விஷக்காற்றில்
மூச்சடைத்து
வறுமை அரக்கனோடு
மோதி மோதி
சாவதற்கு அஞ்சவில்லை ஆனால்
வாழ்வதற்கு அஞ்சுகிறோம்.

வேலையில்லாப் பட்டதாரிகள்

நா.இர. தென்னன்



● வேலைவாய்ப்பு அலுவலகம்
நோக்கிப்
படையெடுக்கும்
கஜினி முகமதுகள்.

● இந்திய நூல்நிலையத்தில்
அடுக்கி வைக்கப்பட்டும்
யாரும் எடுத்துப் படிக்காத
புத்தகங்கள்.

● பல்கலைக் கழகமே!
உன் தயாரிப்புகளை
நிறுத்தி வை.
நூறு சதம் தள்ளுபடியென
அறிவித்தும்
வாங்குவோர் யாருமில்லை.

மறக்க முடியுமா?

அ. சண்முகம்



● அவள்...
என்னிடம் இமைகளால்
பேசும்போது
நான் வாழ்ந்துகொண்டிருந்தேன்
அவள்
என்னிடம் இதழ்களால்
பேசும்போது
நான் இறந்துவிட்டேன்
ஏன்? அவள் மறந்துவிடு என்றாள்.



ஊமைகள்

அலியூர்ரகீம்

“ஊமை!”

அவள் காதில் படும்படியாகவே முணுமுணுத்தான் அவன்.

அவளுடைய மெல்லிதழ்கள் குறுநகையில் நெளிந்தன.

புன்னகை மாயம் செய்த அந்த மோகினி, இப்போது சற்றே தலை குனிந்து நின்றாள்.

அவளை 'ஊமை' என்றுதான் சலித்துக்கொண்டான்; உண்மையில் அவள் ஊமையாகவே பிறந்திருந்தால், அவனுக்கு இந்தத் தவிப்பே ஏற்பட்டிருக்காது!

அவளுக்குப் பேசத் தெரியும்; இருந்தும் பேச மறுக்கிறாள்.

❖ ❖ ❖

அன்று அவள், வாடிச் சோர்ந்து உட்கார்ந்திருந்தாள்.

அவள் கண்கள் ஈரித்திருந்தன.

“மனச் சுமைகளை மற்றவர்களிடம் இறக்கி வைக்க வேண்டும்... அப்போதுதான் ஆறுதல் கிடைக்கும்!”

யாருக்கோ சொல்வதுபோல அவன் சொன்னான்; அது, தனக்காகத்தான் சொல்லப்பட்டது என்பதும் அவளுக்குத் தெரியும்.

இருந்தாலும் என்ன! அவள் வாய் பேசவில்லை!

அவள் பேசவில்லைதான்; இருந்தாலும் மேல் உயர்ந்த அந்தக் கண்கள்!

சுமையை இறக்க விரும்பியவன் மனத்தில், எத்தனை சுமைகளை ஏற்றிவிட்டன!

அவன் கலங்கி நின்றான்; அவளும்தான்! ஆனால், அவன் கலக்கம், மனத்துள் மட்டும்; அவளுக்கோ, கண்களிலும்!

❖ ❖ ❖

“உன்னைத் தேவதையாக எண்ணி, வரம் பெற நோன்பிருந்தேன்; நீயாவது நிம்மதியாகத் தூங்குகிறாயா?”

“அதென்ன அது! நீங்கள் தூங்காவிட்டால், நானும் தூங்கக் கூடாது என்பது சட்டமா என்ன?”

“உணவு கொள்ளவே பிடிக்கவில்லை... மனம் பூஞ்சருகு போல தவிக்கிறது! நீ எப்படியோ...?”

“நான் என்ன, உங்கள் தனி அறை நிலைக்கண்ணாடியா! உங்களுக்குப் பைத்தியம் பிடித்தால், நான் தலையைப் பிய்த்துக் கொள்ளவேண்டுமா?”

“நான்...”

“ஆமாம்... நீங்கள் அழுதால் நான் அழவேண்டும்! நீங்கள் சிரித்தால் நான் சிரிக்க வேண்டும்! எந்த வானத்துக்கும் இந்தக் கடல், அடிமை முறி எழுதித் தரவில்லை!”

“சே...! நீ ஒரு பெண்தானா?”



வெடித்துக் கிளம்பியது இந்தக் கேள்வி.

நள்ளிரவுப் படுக்கையில், அதிர்ந்தெழுந்து உட்கார்ந்திருந்த சூனிய நிழலுருவம்...

ஒன்றல்ல! இங்கொன்றும் அங்கொன்றுமாய்...இரண்டு!

என்ன கனவு இது!

மெல்ல எழுந்து வெளியே வந்தான்.

தோட்டத்தில் நின்ற மரமல்லி மரத்துக்கப்பால், அடிவானத்தில் தேய் நிலவு.

“என் நிலைதான் உன் நிலையும்!”

❖ ❖ ❖

“தேவதையின் காலடிகளுக்குக் காணிக்கையாக்க வேண்டும்!” அவன் பலவண்ண மலர்களைப் பறித்து வந்தான்.

“எந்தத் தேவதைக்கு இவை?” – அவன் மனம் அவனை, நேரடியாகவே கேட்டது.

அவனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

மலர்களைப் பார்த்து அவன் சொன்னான்;

“எல்லாமே அழகிய மலர்கள்... ஆனால், என் தேவதைக்கு... இந்த மல்லிகைகள்தான் ஏற்றவை!”

அவன் விரல்கள் மல்லிகைகளைச் சரமாக்கத் தொடங்கின! அவனுடைய அடிமனம் மீண்டும் கேட்டது;

"எந்தத் தேவதைக்கு இது?"

அவனுக்கு விடை சொல்லத் துணிவு இல்லை.

மலர்களோடு அவன், அம்மன் கோயிலை நெருங்கினான்.

சுட்டிப் பெண்கள் அவனை நோக்கிப் பாய்ந்து வந்தனர்.

"எனக்கு ரோஜாதான் வேண்டும்!"

"எனக்கு முல்லை!"

"எனக்கு மருக்கொழுந்து!"

"எனக்கு சம்பங்கி!"

மலர்களும், சரங்களுமாய்க் கைமாறிப் பறந்தன...

ஆனால்..ஆனால்...

நெஞ்சத்தை வட்டம் வட்டமாய்ச் சிறகடிக்க நழுவவிட்ட அவன், உடம்பைக் கூண்டுப் பறவையாய்ச் சிறைப்படுத்தி ஏக்கத்தோடு நின்றிருந்தான்.

அவளும்தான், நின்றாள்... நின்றாள்...

ஆனால், அவள் எண்ணங்கள்..?

நெஞ்சத்துள் நிற்கவில்லை... அவன் கரத்தில் தொங்கிய ஒவ்வொரு பூவிலும் பீடம் போட்டு அமர்ந்துவிட்டன.

அவன் அமைதியாக நின்றிருந்தான்.

'அந்த மல்லிகை மாலையை... அவன் நமக்குத் தரமாட்டானா!'

அவன் நின்றிருந்தான், அசையாமல்!

'இந்த மல்லிகைச் சரத்தை, அவள்..கேட்க மாட்டாளா..!'

மலர்களைப் பறித்தெடுத்துக் கொண்டவர்கள், தெய்வத்தைத் தேடிக் கோயிலுக்குள் ஓடிவிட்டார்கள்!

உன் கைகளிலும் கிழக்கு!

இளைஞனே!
உழைத்துச் சிவக்கும்
உன் கரங்களில்
கிழக்கும்தான்
முகம் காட்டும்.



சீ. செழியன்

காவேரிக்காக!

காவேரி!
உனக்காகக் காயம்பட்டது
உடல்கள் மட்டும் அல்ல
தேசியமும் தான்.

கோயிலுக்கு வெளியே இருந்த தெய்வத்தின் எதிரே, அதற்காகவே மலர் தொடுத்தவன், சிலையாக நின்றிருந்தான்!

விரும்பியவள் கேட்கவில்லை; கொடுக்கத் தொடுத்தவனோ... தரவில்லை!

அவள் தலையைத் தாழ்த்தித் திரும்பி நடந்தாள்...

அவனோ, அங்கேயே நின்றிருந்தான்,

அவள் விம்மினாள், 'கேட்டுப் பெற்றிருக்கலாமே!' என்று. அவன் அனல் மூச்செறிந்தான், 'நாமாகவே கூப்பிட்டுத் தந்திருக்கலாமே!' என்று.

❖ ❖ ❖

அந்தி இளம் இருட்காற்றில் மிதந்து வந்த கோயில் மணியோசை இருவரையுமே கேலி செய்து கொண்டிருந்தது.

ஊரை ஒட்டிய கொடிப் பாதை; அதன் இரு ஓரங்களிலுமே தாழை வேலி.

கிழக்கு வேலியின் உட்புறத்தில் ஒரு பெரிய ஓதிய மரம்; ஓதிய மரத்தின் பின்னால் அவன் ஒளிந்து நின்றிருந்தான். அவனுக்குத் தெரியும், அந்த நேரத்தில் நீர் முகந்து வர ஆற்றுக்குப் போவாள் என்று.

அவன் காத்திருந்தான்...

அவளுக்காகவே! அவன் கரத்தில் ஓர் அழகான மல்லிகைச் சரம்.

எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவனை, அவள் ஏமாற்றி விடவில்லை; அவள் வந்து கொண்டிருந்தாள்... கூடவே, அவள் தோழியும் வந்துகொண்டிருந்தாள்!

"எல்லோரும் அவனிடம் உரிமையோடு மலர்களைப் பறித்துக்கொண்டு போனார்களே...நீ மட்டும் ஏன் அப்படிச் செய்யவில்லை?"

— தோழி அவளைக் கேட்டாள்!

"எல்லோருக்கும் அவன் உரிமையோடு தந்தானே... எனக்கு மட்டும் அவன் ஏன் தரவில்லை?"

— அவள் தோழியைக் கேட்டாள்!

"ஆனாலும் உனக்கு மிகக் கர்வம்!"

"இருந்தாலும் அவனுக்கு ரொம்பப் பிடிவாதம்!"

"நீ அவனைப் பார்த்ததும், ஊமையாகி விடுகிறாய்!"

"அவன் என்னைப் பார்த்ததும் ஊமைபோல நடிக்கிறான்!"

"நடிக்கிறானா...! இது பெரிய பழி!"

"உனக்கென்ன தெரியும்? பகட்டாய் இருக்கும் வாயாடிப் பெண்களிடமெல்லாம் சிரித்துச் சிரித்துப் பேசுவான்... என்னைக் கண்டால் மட்டும் நாக்கு கட்டுப் போட்டுக்கொள்ளும்!"

அவள் மையுண்ட கண்களில் இப்போது நீர் தளும்பியது... மீறிவந்த அழுகையை அடக்க, உதட்டைக் கடித்துக்கொண்டே நடந்தாள்...

ஒதிய மரத்துக்குப் பின்னால் நின்றவன், மல்லிகைச் சரத்தை முத்தமிட்டு மார்போடு அணைத்துக்கொண்டான்.

"எனக்குப் பகட்டான ரோஜாக்களைப் பிடிக்காது. அவை மலிவானவை... அடக்கமான மல்லிகையைத்தான் பிடிக்கும்... அது மதிப்பு மிக்கது..."

— மனத்துக்குள்ளே ஊமைமொழி பேசி நின்றான் அவன்.

தோழி இப்போது எதிர்வாதம் ஏதும் பேசவில்லை... ஊமை போல் நடந்தாள்; அவளோடு இவளும் நடந்தாள் ஊமை அமைதியோடு!

அப்போதும் அவன் ஒதிய மரத்தின் பின்னால்தான் நின்றிருந்தான், தன்னந்தனியே... மல்லிகைச் சரத்தோடு!

அவள்கூட... போய்க்கொண்டே இருந்தாள்... தோழியோடு... ஆனால்... தன்னந்தனியாய்த்தான்.

கிராமத்து டாக்டர்

"மேலரசம்பட்டு' என்ற குக்கிராமத்தில் சுகப்பிரசவ வசதியில்லாததால் மரணமெய்திய என் மூத்த சகோதரியின் பரிதாப நிலையே என்னை டாக்டருக்குப் படிக்க வைத்தது" எனக்கூறும் டாக்டர் த.குமரகுரு, இருபதாண்டுகளுக்கு முன் இருபது படுக்கைகளுடன் ஆரம்பித்த குமரன் மருத்துவமனையை இன்று தொண்ணூறு படுக்கைகளைக் கொண்ட, இம்மாவட்டத்திலேயே புகழ்பெற்ற சி.எம்.சி. மருத்துவமனைக்கு அடுத்த பெரிய தனியார் மருத்துவமனையாக விளங்கச் செய்துள்ளார்.

வேலூரிலிருந்து காட்பாடி செல்லும் சாலையில் காந்தி நகரில் அமைந்துள்ள இதில் 60 பேர் பணியாற்றுகின்றனர்.

மூளை, இருதயம் சம்பந்தப்பட்ட அறுவை சிகிச்சைகளைத் தவிர மற்றெல்லா அறுவை சிகிச்சைகளும் இங்கு செய்யப்படுகின்றன.

சுற்றுப்புற நகரங்களிலிருந்தும், ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களிலிருந்தும் நோயாளிகள் இங்கு வருகின்றனர்.



டாக்டர் த.குமரகுரு

கிராம மக்களுக்கு இங்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. குறைந்த 'பீஸ்' வசூலிக்கப்படுபடுகிறது.

பெரம்பூரிலிருந்து ஒரு கட்டடத் தொழிலாளி முதுகுத் தண்டில் ஏற்பட்ட நரம்பு வியாதி சுகமாகாது என்று பல தேர்ந்த மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் இவரிடம் சிகிச்சைக்காக வந்தார். நடக்க முடியாத அவரைத் தன் அரிய சிகிச்சையால் நடக்க வைத்தார் இவர். அந்தக் கட்டடத் தொழிலாளி இப்போது காண்ட்ராக்டராகி விட்டார்.

பி.எச்.இ.எல். நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஆறு ஆண்டுகள் வரை தங்கள் ஊழியர்களுக்கு இவரிடம்தான் மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை ஆகியவற்றைப் பெற்றுத் தந்தது.

கிராம மக்களுக்கு அறிவியல் வளர்ச்சியுற்ற மருத்துவ அறிவு தரப்படுவதின் அவசியம் இப்போதைய தேவை என்று கூறும் இவர், அதற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார். இவருடைய ஒரே மகனான சேந்தனும் அடுத்த ஆண்டில் இவரது சேவைக்குத் தோள் கொடுக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறார்.

இந்திய மருத்துவ சங்கத் தமிழ் நாட்டுக் கிளையின் பொருளாளராக உள்ள டாக்டர். த.குமரகுரு பல்வேறு தொண்டு நிறுவனங்களிலும் பொறுப்பேற்றுள்ளார்.

இவரைப் போலவே இவரது மனைவி மயிலாம்பிகை குமரகுருவும் ஒரு பிரபல சமூக சேவகி!

போய் வா, நண்பா!

மேகலா சித்ரவேல்



வானத்தை ரத்தக்குழம்பில் தோய்த்த கதிரவன் மேற்குத் திசை மயானத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் பின் மாலைப் பொழுது.

"அன்பிற்குரிய நண்பா,

நீ அமெரிக்கா செல்லும் விமானத்தில் ஏறும் வேளை இமைச் சிறகுகள் படபடக்க உன் தேன் நிற விழிகளால் என்னைத்தானே தேடினாய்... நான் நீ அறிந்து கொள்ள முடியாவண்ணம் விழிகளில் உன்னைப் பின் தொடர்ந்து கொண்டே, மறைந்திருந்தேன். நீ பறந்த பின்னே நான் வெளியே நடந்தேன்.

வழியெங்கும் கால்களாய் முளைத்த இறக்கைகளைத் தரையில் பாவி மனிதர்கள் ஓடுகிறார்கள். எத்தனை விதமான மனிதர்கள்... சிவப்பாக, கறுப்பாக.... ஒல்லியாக... குண்டாக... உயரமாக... குள்ளமாக... எல்லோருமா பச்சென்று மனதில் ஒட்டிக் கொள்கிறார்கள்... உன்னைப்போல... நீதானே கண்ணோடு, கருத்தையும் கவர்ந்தவன்.

நீயும், நானும் எப்படி, எங்கே சந்தித்தோம் என்பதெல்லாம் உலகை உய்விக்கும்



பொட்டாக வாழ்ந்ததெல்லாம் போதும்

— வே. பதுமனார்



பொய்நாட்டும் புத்தகத்தில் கைநாட்டு வைத்துவிட்டு
பொறைவாங்கும் கடையெல்லாம் கடன்வாங்கிப் பற்றுவைத்து
பொய்நாட்டில் வரவாகிப் போதைக்குச் செலவாகிப்
பொட்டாக வாழ்ந்ததெல்லாம் போதுமென்று தள்ளிவைப்போம்!

மைநாட்டும் ரேகையுள்ள மாந்தரெல்லாம் கல்வியினால்
கைகாட்டும் எழுத்தறிவைக் கணக்கோடு பெற்றுவிட்டால்
தைநாட்டும் வளமெல்லாம் தான்றாடி வாராவோ?
செய்நாட்டும் இடமெல்லாம் செழுமைகளே சேராவோ?

பைநாட்டும் பொருளெல்லாம் பூப்பதற்கு அறமாக்கி,
பாரெல்லாம் ஒன்றென்னும் கொள்கைக்கு உரமாக்கி
மெய்நாட்டும் அறிவியலை மேதினியின் கரமாக்கி
மேன்மையுள்ள மேதினத்தை வரவேற்போம் வாருங்கள்!

மகாகாவியங்களா என்ன, மற்றவர் அறிந்து கொண்டே ஆகவேண்டும் என்று நாம் வற்புறுத்த? நம்முடைய நட்பு எப்படிப்பட்டது? அன்பைப் பரிமாறிப் பாசத்தை விளைவாக்கிக் கொண்டோம். இது காதலா? நட்புக்கும், காதலுக்கும் இடைப்பட்ட திரிசங்கு நிலையில் மூன்றாண்டுகள் முடிந்த பின்னே நீ உன் எண்ணத்தைச் சொல்லிவிடத் துடிப்பது புரிந்தது. எனக்குப் புரியும் என்பது உனக்குத் தெரியும். ஆனாலும், வேண்டாம் நண்பா. உன் காதலைச் சொல்லி விடாதே. சொல்லிவிட்டால் அதன் சுகம் கெட்டுவிடும். சொல்லாதே என இதயம் ஓலமிடும். இன்றுவரை இந்தக் கண்ணாமூச்சு நமக்குள் நடந்திருக்கிறது.

என் இறுதி மூச்சுவரை மிலும் இப்படியே இது இன்ப இம்சையாகவே இருந்து விட்டுப் போகட்டுமே... எதற்காக நம்மை நாமே வெளியிட வேண்டும்? கூடாது என்று நான் முடிவெடுத்துவிட்டேன். ஆனால் உனக்கு மட்டும் சின்ன நம்பிக்கை. என்னை வாய் விட்டுச் சொல்லிவிடச் செய்ய முடியும் என்று நம்பினாய். என்னால் முடியாது என்னரும் நண்பா...

போனவாரம் இருட்டில் மினுமினுவெனப் பாதரசத்துளி போல் வீட்டிற்கு வந்தாய். பதவி உயர்வோடு பிரிவுச் செய்தி சொன்னாய். இப்போதாவது என் பதில் என்னவென்று உன் ஒவ்வொரு அணுவும் எதிர்பார்ப்பது புரிந்தது.

நான் கம்பீரமாகச் சொன்னேன். "போய்வா நண்பா." உனக்குள் ஏற்பட்ட ஏமாற்றம் விழிக்கடலின் முத்தாக நெஞ்சில் வழிந்தது. உன் உருவம் கருமேகத்திடை நெளியும் வெண் மின்னலாய் மறைந்தது. நான் எனக்குள் அழுதேன். போய் வா நண்பா!

நாமிருவரும் இணைவதை விடப் பிரிவதே நலமென நான் நினைக்கிறேன். என் அன்பு உனக்குச் சுகமாகத்தான் இருக்க வேண்டும். அதுவே சுமையாகிவிடக் கூடாது. நாமிருவரும் இணைந்து வாழும் போதில் நான் குடிகாரத் தந்தைக்கும், சீக்காளித் தாய்க்கும் பிறந்தவள் என்ற எண்ணம் உன்னைச் சுட்டுவிடும்.

வைரத்தைச் செருப்பில் பதித்து நடக்கும் உன் குடும்பத்தார் காதுகளில் நான் அனாதை இல்லத்தில் வளர்ந்தவள் என்ற ரகசியம் அம்பல

• இம்மாவட்டத்தில் முதன் முதலில் 1856 ஆம் ஆண்டு சென்னையிலிருந்து வாலாஜா வரை இருப்புப்பாதை போடப் பட்டது.

மாகிவிடும். அவர்கள் எதிரில் உனக்கு எந்தவிதமான பெருமையும் தரமுடியாத என்னால் தலைகுனிய நேர்ந்து என்னை வெறுத்து விடுவாய். பயம் என்னைத் தவிக்க வைக்கும். அது வேண்டாமே...

வாரம் ஒருமுறை சந்திக்கும் போதில் என்னிடம் உனக்குப் பிடிக்கும் திமிரும், கர்வமும், உன் தினப்படி வாழ்வில் அருகில் பார்க்க நேரும் போது எரிச்சலாக மாறினாலும் மாறிவிடும். ஆண் இனத்தை வெல்ல வேண்டும் என்ற என் "ஈகோ"வை இப்போது ரசித்து ஆதரிக்கும் மனப் பக்குவம் உன் மாலையைக் குனிந்து பெற்றுக் கொண்டவள் என்ற உரிமையில் அடிபட்டுப் போகும் அபாயம் இருக்கிறதே... உனக்குத் தெரியாதா?

ஒரே மாதிரியான குணங்களைக் கொண்டவர்களாக இருப்பதற்கு இன்று மனம் மகிழும் நாம் பின் ஒரு காலத்தில் அவரவர் ஈகோவைக் காப்பாற்றுவதாக நினைத்துக் கொண்டு டைவர்ஸ்வரை போய் நொந்து கொள்வதைவிட நாம் பிரிவது சுகமென்று உனக்குப் புரியவில்லையா?

சுட்டுவிடும் இத்தனை உண்மைகளையும், நடைமுறைப் பிரச்னைகளையும் ஏற்று, அனுபவித்து ஒரு உருண்டை சோற்றைக்கூட நிம்மதியாக உண்ண முடியாது போவது எத்தனை வேதனை... அதை வீடு என்று நாம் பெயரிட முடியுமா? அது நடைமுறை நரகமல்லவா. வேண்டாம் நண்பா... தயவுசெய்து வேண்டாம்...!

இதையெல்லாம்விட என்னுடைய "போய்வா நண்பா" என்ற வார்த்தை தரும் துன்பம் மிகவும் கொஞ்சம்தான். இதனால் இதயமற்றவளாக, நட்பு மறந்தவளாக, காதல் புரியாத ஜடமாக உன்னால் வெறுத்து ஒதுக்கப்படும் நிலையில் நான் இருப்பது புரிகிறது. அந்த வெறுப்பு என் உள்ளக காதலுக்கு உயிரூட்டும் ஜீவநதியாகிப் பாயத் தொடங்கி விட்டது.

இப்போது நான் இந்தத் தனிவாழ்வுக்குத் தயாராகி விட்டேன். உன் துணையின்றித் தொடரும் என் வாழ்வில் உன் நினைவு மட்டும் போதும். அதனாலேயே உன்னை மீண்டும் சந்திக்கவே நான் விரும்பவில்லை. அதனால் தான் சொல்கிறேன், "போய்வா நண்பா! குட்பை!" ●

● தமிழில் எழுதிச் செல்வந்தரானவர். ஏராளமான நாவல்கள், கட்டுரைகள், சிறுகதைகள் எழுதியவர். வேலம் என்ற ஊரைச் சேர்ந்தவர். பல்கலைக் கழகத் துணை வேந்தராய்த் திகழ்ந்தவர்.

'மு.வ.' என்று சுருக்கமாய் அழைக்கப்பட்டவர். இவருடைய நாவல்கள் பல திரைப் படங்களாக வெளிவந்துள்ளன.

எளிமையானவர். இனிமையானவர். இவர்தான் டாக்டர் மு.வரதராசனார்.

☆

மணிமாலை

● தனித்தமிழ் இயக்கத்தின் தந்தையாய் இம்மாவட்டத்தில் 'உலகத் தமிழ்ப் பேரவை'யை நடத்தியவர். எழுத்தாளர். விடுதலை வீரராய் சென்னை, பெல்லாரி, வேலூர், நாகபுரி சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்தவர்.

தாமிர விருது பெற்றவர். திரைப்படப் பாடலாசிரியர். குடியாத்தம் இவரது சொந்த ஊர். இவர் பெயர் கு.மு. அண்ணல் தங்கோ.

☆

பாலை நிலா — நீ. தங்கவேலன்




கனமான பேய்ச்சுரையின் காயில் தேனைக்
கற்கண்டை பசுநெய்யைப் பெய்தால் என்ன?
மனம் மாறும் மகளிரிடம் இளமை இன்சொல்
மாணெழிலும் மதிநலமும் இருந்தால் என்ன?

கல்லாதான் இடமுள்ள அறிவுக் கூர்மை,
கேள்வியெனும் செல்வமிலான் கற்ற கல்வி,
இல்லாதான் சொல்கின்ற இனிய சொற்கள்,
இல்லாளைத் துறந்தானின் இரக்க நெஞ்சம்.

பொல்லாதான் பேசுகின்ற கனிவுப் பேச்சு,
புறங்கூறும் பொய்யனவன் புகலும் உண்மை
புல்லுந்தான் விளையாத பாலை தன்னில்
பொழி நிலவாய்ப் போகாமல் வேறென் செய்யும்?

மணிமாலை
மணிமாலை



என். பன்னீர்செல்வன்
பத்திரிகாசிரியர்

'சேவை செய்யும் செல்வன்' என்று இம் மாவட்ட உணவு வழங்கல் அலுவலரால் பாராட்டப்பட்ட இவர் ஒரு முது அறிவியல் பட்டதாரி. இளைஞர்.

இம்மாவட்டத்தின் சர்க்கரை மொத்த வியாபாரிகளில் இவரும் ஒருவர்.

400க்கும் மேற்பட்ட குருவிக்காரர்களுக்குக் குடும்ப அட்டை வாங்கித் தருவதில் உதவி, 72 பேருக்கு முதியோர் பென்ஷன் பெற்றுத் தருவதில் உதவி, காது கேளாதோர்க்குக் காது கேட்கும் கருவி மற்றும் உடல் ஊன முற்றோர்க்குத் தேவையான கருவி தருவதில் உதவி ஆகியவை இவருடைய பொதுச் சேவை முத்திரைகள்.

வேலப்பாடிக்குப் பக்கத்திலுள்ள பகவதி மலைக்குச் சீரான படிக்கட்டுகள் அமைப்பதில் ஆர்வம் கொண்டுள்ளார்.

'இதயமுரசு' எனும் மாதமிரு முறை பத்திரிகையின் ஆசிரியராய்த் திகழ்கிறார்.

டி. கே. சண்முகம்
விடுதலைப் போராட்டத் தியாகி

இவருக்கு வயது எழுபத்தொன்று என்று சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள்.

1935 ஆம் ஆண்டில் காங்கிரஸில் சேர்ந்த இவர் 1939 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டு வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அப்போது இவருடன் பட்டாபி சீதாராமையா, அச்சுத மேனன், காமராஜர் போன்றோர் சிறையில் இருந்திருக்கின்றனர்.



இவருடைய மொத்த சிறை வாசம் சுமார் இரண்டாண்டுகள்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தன் நாற்பது ஏக்கர் நிலத்தையும், மூன்று வீடுகளையும் இழந்தவர்.

பிரபல விடுதலை வேந்தர் ஜமதக்னி இவரது குருநாதராம்.

சிறைச்சாலையில் தொடர்ந்து பதினைந்து நாட்களுக்கு மேல் உண்ணாவிரதம் மேற்கொண்ட இவரது பூர்வீகம் வேலூர்.



கருமலைப்பழம் நீ
கவிஞர்

சென்னையிலுள்ள இலக்கிய அமைப்புகள் பலவற்றின் பாராட்டைப் பெற்றுள்ள இவர், வேலூரில் பிறந்தவர். தற்போது தமிழ்நாடு மின்வாரியத்தில் பணிபுரிபவர். கலைமாமணி டாக்டர் விக்கிரமன் -

'வில்லாக வளைந்தது
போதும் பெண்ணே!
அம்பாக என்று
அவதரிக்கப் போகிறாய்?' -

என்ற,

இவருடைய வைரவரிக் கவிதையைப் பெரிதும் பாராட்டியதை வாழ்நாளில் மறக்க முடியாது என்கிறார்.

இதுவரை 6 நூல்களைப் படைத்துள்ளார்.

கால்நடைகள்

ஜவியவன்

அரைமணி நடந்தால் ஆம்பூர். அதுவரை சமாளித்தால் போதும். அப்புறம் ஆட்டு வியாபாரி பாடு ஆட்டுக்குட்டி பாடு. ஒப்படைத்து விட்டுத் துண்டை உதறித் தோளில் போடலாம்.

ஆனால் தோளின் மீது ஆட்டுக்குட்டி துடிக்கிற துடிப்பைப் பார்த்தால் ஆம்பூர் வரை தாங்கும் என்று தோன்றவில்லை.

"டேய் குமரேசா! எதிரிலே லாரி வருது. ஆடுங்களை மடக்கி ஒட்டு" என்று ஓட்டிச் செல்லும் மந்தையின் பின்னாலிருந்து கத்தினான் சிவராமன்.

குமரேசன் திரும்பிப் பார்த்து, "யோவ் மாமு; ஒம் பின்னாலே பஸ் வருது" என்று இடக்காகக் கூவினான்.

சிவராமன் திரும்பிப் பார்த்தான். எங்கோ அரை கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு பஸ் வந்தது. குமரேசன் வெறுப்பேற்றுகிறான் என்று புரிந்தது.

'இந்த அகடவிகடக்காரனோடு மந்தை ஓட்டிட்டுப் போறதே தப்பு' என்று பொருமிக்கொண்டே அன்று விடிந்த நாளை, விழித்த முகத்தை இன்னொரு தரம் சபித்தான் சிவராமன்.

பொய்கைச் சந்தையிலிருந்து பேரணாம்பட்டுக்கு ஓட்டிச் செல்லும் மந்தை அது. பச்சகுப்பம் ரெயில்வே கேட் சாத்தியிருந்தால் இந்த விபத்து நேர்ந்திருக்காது.

நூற்றியோரு உருப்படிகள் கேட்டைக் கடந்து விட்டன.

எதிரில் வந்த லாரியைப் பார்த்துப் பதறி இந்த வெள்ளாட்டுக்குட்டி மட்டும் வந்த வழியே பின்னால் திரும்பி மிரண்டு தண்டவாளத்தில் இடறித் தடுமாறுவதற்குள் பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் வந்து விட்டது.

அவ்வளவுதான். ஆட்டுக்குட்டி 'க்ளோஸ்' என்று கண்களை இறுக மூடிக் கொண்டான் சிவராமன்.

கண் மூடும்போது ஏனோ மனைவி செல்லம்மா ஞாபகம் வந்தது. எரவாணத்தில் பீங்கான் தட்டையும் அலுமினிய கிளாஸையும் அவள் செருகிய நினைவு வந்தது.

கண்ணைத் திறந்து பார்க்கும்போது பிருந்தாவன் எக்ஸ்பிரஸின் கடைசிப் பெட்டி போயிற்று. தண்டவாளத்துக்குச் சற்று தூரத்தில் இந்த வெள்ளாட்டுக் குட்டி மேமே என்று பயத்தில் கதறுவது கேட்டது.

"கெட்டி உசிருய்யா." கேட்கீப்பர் மட்டுமல்ல; ஆட்டுக்குட்டி உயிர் தப்பிய அதிசயம் பார்த்த அத்தனை கூட்டமும் வியந்தது.

"மாமு... காலு முறிஞ்சிருச்சு" என்று குமரேசன் கத்தினான்.

உயிர் போயிருந்தால் பிரச்னையில்லை. தவறு தன் மேலில்லை என்று வியாபாரியிடம் சாதித்திருக்கலாம். தப்பித்ததுதான் தப்பு.

தப்பித்துக் கால் நொண்டியாகி சிவராமன் தோளில் ஏறி பத்து நிமிஷம் அவன் நடப்பதற்குள் அது தலையைத் தொங்கப் போட்டு விடுவேன் என்று துடியாய்த் துடித்தது.

வழியில் உயிர் போனால் செத்த ஆட்டுக்குட்டியைச் சுமந்துபோய் வியாபாரிக்குப் பதில் சொல்ல வேண்டும். விலை நூறு சொல்வானோ நூற்றைம்பது சொல்வானோ...

சிவராமன் மனக்கணக்கு போட்டான். ஓட்டி வந்து சேர்க்க உருப்படிக்கு ஐந்து ரூபாய். நூற்றியோரு ஆடுகளுக்கு ஐநூற்று ஐந்து. சரிபாதி குமரேசனுக்கு.

மந்தைக்குப் பின்னால் குட்டி செத்தால் கிரயத்தில் சரிபாதி தர குமரேசன் ஒப்புக் கொள்ள மாட்டான். எப்படி முன்னால் போகும் ஆடு செத்தால் சிவராமன் ஒப்புக்கொள்ள மாட்டானோ அப்படி!

மத்தியஸ்தத்தில் நூறு ரூபாய் என்று கிரயம் படிந்தால் மிஞ்சுவது நூற்றி இருபத்தியிரண்டரைதான். அதை வைத்துத் தான் ஒரு வாரம் ஓட்ட வேண்டும்.

சிவராமன் பல் கடித்தான்.

'மந்தைக்குப் போற நாளுன்னு தெரிஞ்சும், சிறுக்கி மவ இறைச்சி தின்னுருக்கா பாரேன்' என்று உள்ளுக்குள் குமுறிக் கனன்றான். அதுதான் அச்சானியம் என்று அவனுக்குப்பட்டது.

சிவராமன் சுத்த சைவம். முட்டை கலந்திருக்கும் என்பதற்காக ரொட்டிக்கடை கேக்கு, ஐஸ்கிரீம் எல்லாம் விலக்குபவன். அவன் பரம்பரையே அப்படி. செல்லம்மாள் அசைவம். வம்பே அதில்தான்!

"மாமு. நீ ஓட்டிட்டுப் போற மந்தையே பெங்களூர் பம்பாய்

ஹோட்டல்களிலே பிரியாணி கைமாவாத்தான் மாறப் போவுது. நீ என்னமோ பிகு பண்ணிக்கிறே" என்று மடக்கு வான் குமரேசன்.

அவன் ஒரு பகாசூரன். ஊர் ஊராகத் தின்பான். ஹோட்டல் ஹோட்டலாகக் கண்ட மாமி சத்தையும் வாங்கி வயிற்றில் திணிப்பான். ஒரு சந்தையி லிருந்து ஒரு மந்தை ஓட்டிப் போவதற்குள் தின்றே ஐம்பது ஒழித்துவிடுவான்.

"வாயில்லா ஜீவனுங்களை ஓட்டிப் போறோம். இது அடுக்காது மச்சி" என்று எச்ச ரிப்பான்.

"நான் வாயுள்ள ஜீவனாச்சே! என்ன மாமு பண்றது?" என்று வாயடைப்பான்.

"உன்னைத் திருத்த முடியாது".

சிவராமனுக்கு ஒன்று நிச்சய மாய்த் தெரியும்.

குமரேசனை மட்டுமல்ல; உலகில் ஓர் ஆட்டுக்குட்டியைக் கூடத் திருத்த முடியாது. கம்பு வீசி நாலு விளாசு விளாசலாம். ஆட்டையோ மாட்டையோ.

சொரணையுள்ளது ஒழுங்காக ஒதுங்கும். கொஞ்ச நேரத்துக்கு இந்த ஆட்டுக்குட்டி மாதிரி புரியாத வகையறா சமயத்தில் டேக்கா கொடுத்து இப்படி மாட்டிக்கொள்ளும்.

செல்லம்மா சிவராமனின் சைவத்துக்கு மதிப்புக் கொடுக்காமல் இல்லை. இறைச்சி சமைத்து வரும்போது சாப்பிட வென்று ஒரு தனித்தட்டு, தண்ணீர் குடிக்கத் தனி டம்ளர் வைத்திருந்தாள்.

வீட்டுப் பாத்திரங்களோடு அது கலந்துவிடக் கூடாதென்று தனியே சாதி விலக்கம் செய்த மாதிரி அவற்றை எரவாணத்தில் செருகி வைத்திருந்தாள்.

◆ **29.2.** சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது ஏலகிரி மலை. மார்ச் தொடங்கி ஜூன் முடிய முக்கிய சீசன். 14 ஹேர்பின் வளைவுகள். உச்சி 14. கி.மீ. தூரம். ஜோலார்பேட்டை சந்திப்பிலிருந்து 21 கி.மீ. தூரம். சென்னையிலிருந்தும் பேருந்து வசதியுள்ளது. தங்க வசதிகள் உள்ளன. மைக்ரோ ரிப்பீட்டர் ஸ்டேஷன், கான்வென்ட், முருகன் கோயில், மங்கலம் ஏரி, அரசின் பழத்தோட்டம், புங்கனூர் ஏரியில் போட்டிங் என ஏராளமான பொழுது போக்கிடங்கள் இங்குள்ளன.

◆ முன்பு சோழசிங்கபுரமாயிருந்தது இப்போது சோளங்கிபுரமாகி உள்ளது. இங்கிருந்து 3 கி.மீ. தூரத்தில் மலை உச்சியில் உள்ளது யோக நரசிம்மர் கோயில். இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் சோளங்கி மலை மீதுள்ள கடிகைக்கு மான்யம் வழங்கியதாகக் கூறுகிறது திருவல்லம் கல்வெட்டு.

◆ திருப்பத்தூருக்கருகில் தெக்குப்பட்டில் சந்தனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது.

கோடையிடி குப்புசாமி விடுதலைக்காகப் பெரிதும் பாடுபட்டவர். பலமுறை சிறை சென்றவர். வேலூர்க்காரர். கோடையிடிபோல் மேடைகளில் முழங்கியவர். ராஜாஜி, சத்தியமூர்த்தி, காமராஜர் ஆகியோருக்கு மிகவும் நெருக்கமானவராயிருந்தவர்.

கணவன் தொழில், அவன் சுபாவம் தெரிந்தவள்தான் செல்லம்மா.

சந்தைகளிலிருந்து ஆட்டையோ மாட்டையோ மந்தைகளாக ஓட்டிக்கொண்டு கால் நடையாகவே ஊருக்கு ஊர் சேர்க்கப் போனாலும் வழியில் எங்கும் சாப்பிட மாட்டான் என்று அவளுக்குத் தெரியும்.

அதற்காகவே கட்டுச்சோறு கட்டித் தருவாள். ஒருநாள் பயணமென்றால் ஒரு பொட்டலம். இரண்டு நாளுக்கு இரண்டு பொட்டலம். பய பக்தியோடு கவுச்சித்தீட்டு பட்டு விடக் கூடாது என்று குளித்து முழுகிவிட்டுத்தான் சமைப்பாள்.

செல்லம்மாவின் கை மணம் ஊருக்கே தெரியும். முக்கியமாகக் 'குமரேசனுக்கு. அந்த பகாசூரன் வழியில் கண்ட 'கர்மாந்திரங்களை'யெல்லாம் வாங்கி வயிற்றில் நிரப்பிக் கொள்வதோடு நிற்காமல் சிவராமன் சோற்றுப் பொட்டலம் பிரித்ததும் "மாமு... பொட்டலம் பிரிச்சிட்டியா?" என்று கூப்பாடு போடுவான்.

தலையைத் தலையை அடித்துக் கொண்டு "வந்து தொலை" என்று சலிப்பாக அழைப்பது தவிர சிவராமனுக்கு வேறு விதியில்லை.

இரண்டு முழுங்கு முழுங்குவதற்குள் "மாமு... நீ ஏன் சைவப்பூனையா இருக்கேண்ணு இப்பத்தான் தெரியுது" என்பான்.

"நான் சாப்பிட ஆரம்பிச்சா கறி விலை ஏறிடும்".

"இல்லே... எக்கா இப்படி சமைச்சுக் குடுத்தா நீ ஏன் சைவமா இருக்கமாட்டே?"

"ஒனக்கு இந்தச் சாப்பாடு போடறதே தகாதுடா மச்சி".

"நீ கூடத்தான் எக்கா கைல சாப்பிடறதே தகாது"

குமரேசனுக்குச் செல்லம்மாவின் குடும்ப சங்கதியே தெரியும்.

"என்ன பண்ணித் தொலைக்க! தாலியக் கட்டிட்டுப் பண்டாரப் பரதேசியாவா போயிட முடியும். எவ கையிலோ சாப்பிட்டுத்தானே தீரணும்."

"பண்டாரம் பரதேசியெல்லாம் சிக்கன் மட்டன்னு வெளுத்து வாங்குது இந்தக் காலத்திலே. ஐட்டம் ஐட்டமா கேட்டு முளுங்குது."

இவனுக்குப் பேச இடம் விடுவதே தப்பு.

குமரேசனைத் திருத்த முடியாது. அவன் தொழில் கூட்டாளி. செல்லம்மாவைத் திருத்த முடிகிறதோ இல்லையோ! தடுக்கலாம்.

இப்படி மந்தை ஓட்டிச் செல்கிற நாளுக்கு முந்தியோ அன்றோ கறி சாப்பிடக் கூடாது என்று கட்டுப்பாடு பண்ணி வைக்கலாம்.

சாலையில் ஆட்டுமந்தை மும்மூன்றாகப் பிணைக் கயிறு போட்டு ஊர்வலம் போகிற மாதிரி தலையைத் தலையை



ஆட்டிக் கொண்டு நெடுகச் செல்வது போல் நினைவுத் தொடர் ஓடுகிறது.

காரும் பஸ்ஸும் லாரியும் வேனும் அந்தக் கால்நடைகளைக் கடந்து செல்கின்றன. ஒரு வருஷமா இரண்டு வருஷமா இப்படிப் பத்து வருஷமாக சிவராமனுக்கும் குமரேசனுக்கும் கால்நடைதான்.

கால்நடையில் கால்நடைகளோடுதான் காலம் கழிந்து கொண்டிருக்கிறது. தாயிடமிருந்து குட்டியைப் பிரித்து, குட்டியிடமிருந்து தாயைப் பிரித்து ஒரு மந்தையிலிருந்து ஒரு மந்தையைப் பிரித்து மனுஷர்களுடைய நாக்கு ருசி என்ற மகாமசானத்தை நோக்கி விரட்டிக் கொண்டேதான் காலம் போகிறது.

"எதுக்கு இப்படி நடையா நடந்து மாயணும்? இந்தத் தொளிலை விட்டுத் தொலையுங்களேன்" என்று பலதரம் செல்லம்மா சொல்லிப் பார்த்துவிட்டாள்.

அதுவும் ஆறேழு வருஷம் வயிற்றில் பிள்ளைப்பூச்சி இல்லாமல் கோயில் குளம் சுற்றித் தவிதவித்தபின் வயிற்றில் உண்டானதற்கு அப்புறம் இந்தப் புலம்பல் அடிக்கடி.

"இது குடும்பத்துக்கு அடுக்காதுங்க".

"ஆமா... இவ பெரிய ஞானி. கண்டுட்டா. மொதல்லே நீ கறி திங்கறத விடுவியா சொல்லு..."

"அது வேறங்க. இது வேறங்க".

"ஒன்ன மாதிரி ஆளுங்களுக்குத் தாண்டி ஒட்டிக்கிட்டு போறேன்... இது கொன்ன பாவமும் இல்லே... தின்ன பாவமுமில்லே".

"தாய்கிட்டேருந்து குட்டியைப் பிரிச்ச பாவம் இல்லியா?"

"எந்தப் பாவமும் கலக்காம ஒரு தொளில் செய்ய முடியாதுடீ இந்தக் காலத்துலே."

பாவமென்பதற்காகச் சிவராமன் இந்தத் தொழிலை வெறுத்ததில்லை. தான் வெறும் கருவி என்று அவனுக்கு நன்றாய்த் தெரியும். நடக்கிற கஷ்டம்கூட முதலில் வெறுத்து இப்போது பழகிவிட்டது.

அதேசமயம் நாலு காசு வருகிற தொழில் என்பதற்காகப் பாவ புண்ணியம் பார்க்காமல் ஒரு காரியம் செய்ய அவனால் முடியாது.

பத்து நிமிஷம் நடந்திருப்பான் சிவராமன். அதற்குள் மந்தையின் முன்வசத்திலிருந்து "மாமு.. ஆட்டுக்காரரு மோட்டார் சைக்கிள்ளே வந்துகிட்டிருக்காரு" என்று கூவினான்.

சிவராமன் நிமிர்ந்து பார்த்தான்.

ஆட்டு வியாபாரிதான். மோட்டார் சைக்கிளை அவன்தான் ஓட்டிக்கொண்டு வந்தான். பின்னால் யாரோ லுங்கி உடுத்திய ஆள். வண்டி வேகமாக வந்து குமரேசன் அருகில் பிரேக் போட்டு நின்றது.

வியாபாரி என்னமோ கேட்டிருக்க வேண்டும். தூரம் அதிகம். காதில் விழவில்லை.

குமரேசன் கையை நீட்டித் தன்னைக் காட்டுவது தெரிந்தது. தன்னையா?'' தோள் மேலிருக்கும் ஆட்டுக் குட்டியையா?

ஆட்டுக்குட்டிக்கு என்ன ஆச்சு என்று கேள்வி கேட்கப் போகிறானோ? என்ன பதில் சொல்வது?

தோளில் ஆட்டுக்குட்டி தலை சாய்ந்த மாதிரி இருந்தது. அவன் கழுத்துப்பட்டையில் அதன் காதும் மூக்கு ஈரமும் உரசின. உயிர் போய் விட்டிருக்கும்.

மந்தையைக் கடந்து பின் வரிசைக்கு மோட்டார் சைக்கிள் வர நெடு நேரமாவது போல் அவனுக்குப் பட்டது.

"சரி... கிரயம்தான் கட்டிக் கொடுக்க வேண்டும். அதில் விடாப்பிடியாக இல்லையென்றால் இந்த வாரக்கூலி இளைத்துவிடும்"

ஆட்டு வியாபாரி இளைஞன் தான். நேராக வந்து சக்கென்று பிரேக் பிடித்து சிவராமன் அருகில் நிறுத்தினான்.

"என்ன சிவராமா... நூற்றியோர் உருப்படி... ரெண்டு ஆளு போதுமாண்ணு கேட்டேன். போதும்னே. இப்படிக் கோளாறிலே வந்து முடிச்சுட்டியே"

"என் தப்பு இல்லீங்க தம்பீ! கேட்டை கிராஸ் பண்ணிட்டேன். இந்த சத்ராவதி எதிர்ல வந்த லாரியைப் பார்த்து மெரண்டு பின்னாலே திரும்பி லைன்ல பூந்துடுச்சி".

"எல்லாம் எனக்குத் தெரியும்! நீ கேட்டைத் தாண்டி மேடு ஏர்றதுக்குள்ளே என்க்கு நியூஸ் வந்துடுச்சி".

"யாரு சொன்னது?"

"எத்தினிபேரு ரோட்ல வர்ல. போகட்டும். குட்டி உசிரு பூடுச்சா... இருக்கா பாரு".

"போயிடுச்சு தம்பீ" என்று வருத்தமாகச் சொன்னவாறே தோள் சுமையை இறக்கினான் சிவராமன்.

தரையில் விட்டவுடனே "மே ஏ ஏ ஏ ஏ" என்று கத்தியவாறே அவனை ஆட்சேபிப்பதுபோல் எழுந்து நின்றது ஆட்டுக்குட்டி.

அவனுக்கு வயிற்றில் பால் வார்ப்பதுபோல் ஒரு தெம்பு வந்தது.

அந்த சுலைமான் வண்டியை விட்டு இறங்கி வந்து தரையில்

கிடந்த ஆட்டுக்குட்டியைப் புரட்டிப் பார்த்தான்.

கால் உடைந்திருந்ததால் வலி தாளாமல் அது மே ஏ ஏ ஏ ஏ என்று ஈனமாகக் கத்திற்று.

அந்தக் குரல் கேட்டுப் பின் வரிசையில் பிணைக்கயிறு மாட்டியிருந்த மூன்று ஆடுகளில் ஒன்று "மே ஏ ஏ ஏ" என்று கத்திக்கொண்டு வரிசையைத் தள்ளி முந்திவரப் பார்த்தது.

"அடிக் கசமாலக் களுதே" என்று கம்பை வீசியவாறு வரிசை கலைந்தால் ஏற்படக் கூடிய சீர்குலைவை உத்தேசித்து சீறிப் பாய்ந்தான் சிவராமன்.

"அது தாய் ஆடா இருக்கும்" சொன்னது சுலைமான்.

"விட்டுத் தள்ளு. வெலை சொல்லு."

"உசிரு இருக்கறதால வாங்கிக்கறேன்."

சுலைமானுக்கும் வியாபாரிக்கும் பேரம் படிந்து சட்டென்று பணம் கைமாறியது. சிவராமனுக்குப் பெரிய நிம்மதி. மந்தை ஓட்டிய கூலி பிழைத்தது.

மந்தையை ஆம்பூருக்கு ஓட்டிச் சென்று ஒப்படைக்கும் போது அதை விடப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

"இந்தா சிவராமா... பிடி கும ரேசா" என்று கூலி கொடுத்த பின்பு ஆளுக்கொரு பொட்டலத்தை நீட்டினான் வியாபாரி.

"என்னது?"

"ஆம்பூர் பிரியாணிய்யா. தமிழ்நாட்டிலேயே பேர் வாங்கின சமாசாரம்"

நீட்டிய கையைக் கூசிய வாறே பின்னால் இழுத்தான் சிவராமன்.

"ஆட்டுக் குட்டியைக் கால் உடைஞ்சும் தோள்லே தூக்கி

'மணிமாலை'



திலகவதி ராமய்யா
சமூக சேவகி

இம்மாவட்ட உணவுப் பொருள் வழங்கல் நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் ஒரே பெண் உறுப்பினர் இவர். இந்தியக் குழந்தைகள் நலச் சங்கம் - தமிழ்நாடு உழைக்கும் சிறுவர் நிவாரணத் திட்டத்தின் செயலாளராக உள்ள இவர், இராப் பகல் கருதாது பாடுபடும் ஒரு சமூக சேவகி. ஓய்வு பெற்ற காவல்துறை அலுவலரான இவருடைய கணவரின் முழு ஒத்துழைப்பைத் தன் ஆனந்தக் கண்ணீரால் மெய்ப்பிக்கிறார் இவர்.

வேலூருக்கடுத்த காந்தி நகரில் 10 ஆண்டுகளுக்கு முன்பே மகளிர் மன்றத்தை ஒன்றரை லட்சத்தில் நிறுவினார்.

ரோட்டரியின் PHF விருதைப் பெற்றவர். 'இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சோஷியல் சைன்ஸ் அண்ட் ரிசர்ச்' நிறுவனம் 'பெஸ்ட் சிட்டிஸன்' பட்டத்தை இவருக்கு அளித்திருக்கிறது.

இதுவரை 21 தடவைகள் இரத்த தானம் செய்துள்ளார்.

பீடி சுற்றும் தொழிலாளர்களின் குழந்தைகள் நலனுக்காக மிகவும் பாடுபடுகிறார்.

இத்தொழிலில் கொத்தடிமை வலையில் சிக்கித் தவிக்கும் பெண் குழந்தைகளை மீட்பதில் தீவிரம் காட்டுகிறார்.

வீட்டு வசதி வாரிய அமைச்சர் டி.எம்.செல்வகணபதி இவருடைய மகள் பாப்புவை மணம் செய்து கொண்டிருக்கிறார்.

வந்தியே, அதுக்கு! அதனால் தான் நல்ல வெலை போச்சு. வாங்கிக்க".

"வாங்கிக்க மாமு... எக்கா உண்டாயிருக்கா. நீ துண்ணலேண்ணா போவுது. கொண்டு போய்க்குடு. ஒன்னைப் பாவம் புடிச்சுக்காது"

தானே வாங்கிப் போய் கொடுப்பதா? சிவராமனுக்கு உடம்பு அருவருத்தது.

"அவரு கையால வாங்க மாட்டாரு. பெரிய சைவரு" என்று வியாபாரி கையிலிருந்த பொட்டலத்தை வாங்கிச் சிவராமன் தோள் பையைப் பிரித்து அதனுள் போட்டான்.

"கூலியிலே களிச்சிட்டேண்ணு நெனக்காதே! இது எக்ஸ்ட்ரா" என்று அவன் கையில் எண்ணாமல் வைத்திருந்த நோட்டுக்களைச் சுட்டிக் காட்டிச் சொன்னான் வியாபாரி.

ஊருக்குப் போனதுமே ஒரு செத்த பெருச்சாளியை வால் பிடித்துத் தூக்குவது போல் பையை நுனிவிரல்களால் பற்றி "செல்லம்மா... அதுக்குள்ளே பிரியாணிப் பொட்டலம் இருக்கு. எடுத்துக்க" என்றான்.

"எதுக்கு?"

"ஒனக்குதான்! வளியிலே ஒரு குட்டி ஆட்டைக் காப்பாத்தி கொண்டாந்ததுக்காக வியாபாரி குடுத்தாரு".

"எனக்கு வேணாம்".


"வேணாமா?"

"ஆமா. நான் நேத்தியோட கறி சாப்பிடறதை உட்டுட்டேன்!"

"என்னடி கதை வுடறே?"

"நான் தின்னுக்கிட்டிருந்தா எனக்குப் பெறக்கற புள்ளையும் தின்னும். சைவப் பரம்பரையை நான் கெடுக்கற பாவம் வேணாம்!" என்றாள்.

அமுதசுரபியின்
'முக்கனி'-திட்டம்



ஸ்ரீராம் டிரஸ்டில் ரூ.3000/- டெபாஸிட் செய்து 6 வருடங்களில் இரட்டிப்பாக ரூ.6000/- பெறுங்கள்.

44 வருடங்களாகத் தமிழகத்தில் தொடர்ந்து வெளிவரும் "அமுதசுரபி" தமிழ்ப் பெருமக்களால் விரும்பிப் படிக்கப்படும் தமிழ் மாதப் பத்திரிகை.

இயல், இசை, நாடகத்துறையின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் ஸ்ரீராம் நிறுவனங்களின் ஓர் அங்கமான ஸ்ரீராம் டிரஸ்ட், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பணிபுரிய 'அமுதசுரபி'யை வெளியிடுகிறது.

அதன் தொடர்பாக வாசகப் பெருமக்களுக்கு இனிய பல நல்ல பலன்களை அளிக்கவே இந்த முக்கனித் திட்டம்.

முக்கனி போனஸ்:

1. ஒவ்வொரு மாதமும் "அமுதசுரபி" மாத இதழ் சந்தா முதலீடு செய்த உங்களுக்கோ அல்லது நீங்கள் விரும்பும் அன்பருக்கோ அனுப்பப்படும்.

   ஆறு வருடத்திற்கு, வருடா வருடம் "தீபாவளி மலர்" பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

   நீங்கள் முதலீடு செய்தவுடன் உங்களுக்கு (அன்பளிப்பாக) 8 கிராம் எடையுள்ள பூஜையில் வைப்பதற்கேற்ற வெள்ளிப் பதக்கம் அளிக்கப்படும்.


உங்கள் முதலீட்டிற்கு, ஸ்ரீராம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (Shriram Investments) முழு உத்திரவாதம் அளிக்கிறது.

சந்தா முதலீட்டுத் திட்டத்தில் (டெபாஸிட்) முதலீடு செய்பவர்களுக்கு :

1. தமிழ் அன்பர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அளிக்கப்படும் டெபாஸிட் இது.
2. ரூ.3000/-ம் டெபாஸிட் தொகை ஆறு ஆண்டுகள் முடிவடைந்தவுடன் ரூ.6000/-ம் ஆகத் திருப்பித் தரப்படும்.
3. டெபாஸிட் தொகையை டிராப்ட்டாகவோ, செக்காகவோ "ஸ்ரீராம் டிரஸ்ட்" பெயருக்கு கிராஸ் செய்து Account Payee எனக் குறிப்பிட்டு எழுதப்படல் வேண்டும்.
4. டெபாஸிட்டுகளைத் தனியாகவோ கூட்டுக் கணக்காகவோ அளிக்கலாம். திரும்பப் பெறும்போது முதலில் குறிப்பிட்டுள்ள பெயருக்கோ அல்லது எழுத்து மூலம் தெரிவிக்கப்படுபவருக்கோ டெபாஸிட் தொகை அளிக்கப்படும்.
5. ஆறு ஆண்டு காலத்திற்குப் பிறகே டெபாஸிட் தொகை (இரட்டிப்பாக) திருப்பி அளிக்கப்படும்.

கலையும், நிதியும் கலந்து அளிக்கும் ஸ்ரீராம்.

தமிழ் எழுத்துச் சீரமைப்பின் அவசியம்



கி. தனவேல்
எம்.ஏ., பி.எல்.,

தமிழ் மொழியை 'உயர் தனிச் செம்மொழி' என்று சொல்லிக் கொள்வதோடு நாம் நிறைவடைந்து விடுகிறோம். மொழியைச் செம்மைப்படுத்தவும் உலக அரங்கில் நமது மொழியை உரிய இடத்தில் அமர்த்தவும் தீவிர நடவடிக்கை எதையும் நாம் எடுக்கவில்லை. வளர்ந்து வரும் அறிவியல் உலக நடைமுறைக்கேற்ப நமது மொழியைச் செம்மைப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். இதில் நாம் உடனடியாகச் செய்ய வேண்டியது எழுத்துச் சீரமைப்பேயாகும்.

தமிழ் எழுத்துச் சீரமைப்பு என்பது நெடுங்காலமாக அறிஞர் பலரால் வலியுறுத்தப்பட்டு வந்த போதிலும் பெரும்பான்மை மக்களிடத்தில் இக்கருத்து இன்னும் வலிமை பெறாமல் உள்ளது.

1935 இல் தந்தை பெரியார் நடைமுறைப்படுத்திய எழுத்துச் சீர்திருத்தம் அரை நூற்றாண்டுக்குப்பிறகு 1978 இல் தமிழக அரசால் ஏற்கப்பட்டுள்ளது. இதை எழுத்துச் சீரமைப்பின் முதல் கட்டம் எனலாம்.

அதிலும் அய், அவ் (ஐ, ஔ) எழுத்துகளின் மாற்றங்கள் ஏற்கப்படவில்லை. இதை மறு பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம். இகர, ஈகார எழுத்துகளின் மேல் விலங்குகளை எழுத்தோடு ஒட்டாமல் பக்கத்தில் போடுவதால் சீர்மை ஏற்படும். உகர, ஊகார எழுத்துகளுக்கு ஜுரம், ஜூலைக்குப் போடுவதுபோல் பக்கக்குறிகளைப் போட்டு எழுதினால் தமிழ் கற்கும் குழந்தைகளுக்கும், பிற மொழியாளர்களுக் பெருஞ்சுமை குறையும். (எடுத்துக்காட்டு :- கு-கூ, சு-சூ, கூ-கூ, சூ-சூ).

இக்கருத்துகளைக் கொடுமுடி சண்முகன், ஐ. மகாதேவன், டாக்டர். வா.செ. குழந்தைசாமி முதலிய அறிஞர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.

தற்போதுள்ள தமிழ் தட்டச்சுப் பொறியில் கூட்டல் குறி (+), பெருக்கல் குறி (x), சமன் குறி (=), ஆச்சரியக்குறி (!), அரைப் புள்ளி (;), விகிதக் குறி (:) ஆகியன இல்லை.

இவற்றில் ஆச்சரியக் குறி, அரைப்புள்ளி, விகிதக்குறி, அடிக்கோடு குறி ஆகியவற்றைத் தட்டச்சில் உள்ள வேறு சில குறிகளின் சாவிகளை இருமுறை தட்டி உருவாக்குகிறார்கள். இதில் ஆச்சரியக் குறியை உருவாக்க பின்தள்ளும் சாவியைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

தமிழக அரசு 1978 இல் கொண்டுவந்த எழுத்துச் சீரமைப்புக்குப் பின்பு, தட்டச்சில்

'மணிமாலை'



கலைமணி
மாவட்ட உதவி மக்கள் தொடர்பு அலுவலர்


வெளியுலகத்தில் அதிகம் பழகிக் கொண்டிருக்கும் இவர் இயல்பாகவே சங்கோஜி. இதே மாவட்டத்துக்காரர். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

கல்லூரி வாழ்க்கையின்போது அரசியல், பொதுவாழ்வு, மக்கள் தொடர்பு போன்றவற்றில் அதிகம் ஈடுபட்டதாலேயே இத்துறைக்கு வந்து சேர்ந்ததாய்க் கூறும் இவர் பொறுமையும், பொறுப்பும் மிக்கவர்.

அனுபவசாலியான இவர் அதிகம் பேசாதவர். அதிகம் செயலாற்றுபவர்.

எந்த நேரத்திலும் பிறருக்கு மனங்கோணாமல் ஓடிச் சென்று உதவி புரிபவர்.

'கலைமணி அண்ணாச்சி' என்றே எல்லோராலும் இவர் செல்லமாய் அழைக்கப்படுகிறார்.



தற்போது உள்ள ஞூ.ரூ.ஞு.ட ஆகிய நான்கு குறிகள் பய னில்லாமல் உள்ளன. இந்த நான்கு குறிகளையும் தட்டச்சுப் பொறியிலிருந்து நீக்கிவிட்டால் வேறு நான்கு குறிகளைப் புதிதாகச் சேர்க்க இடம் கிடைக்கும்.

தட்டச்சின் மேல்வரிசையான எண் வரிசையில் உள்ள ஸ,ஜ,ஸ்ரீ ஆகிய வடமொழி எழுத்துகளை முறையே ரூ.ஞு.ஞூ ஆகிய இடங்களுக்கு மாற்றி அதனால் ஏற்படும் காலி யிடங்களில் +, x, ! ஆகிய குறி களை அமைக்கலாம். ட குறியை அகற்றி அந்த இடத்தில் = குறியை அமைக்கலாம்.

இவ்வாறு செய்வதன் மூலம் தற்போது பட்டியல்கள் மற்றும் புள்ளி விவரங்களைத் தமிழில் தட்டச்சு செய்யும்போது ஏற் படும் வேலைச்சுமை மிகவும் குறையும். தட்டச்சு செய்யும் பணியும் எளிதாகும். இந்த மாற்றங்களை நாம் உடனடி யாகச் செய்தாக வேண்டும். ⁂



நால் மனிதர்கள் 13

சுஜாதா ஃபிலிம்ஸ் லிட்.,நிறுவனமும்,
அமுதசுரபி வெளியீட்டாளர்கள்
ஸ்ரீராம் டிரஸ்டும் இணைந்து நடத்திய
போட்டியில் ரூ. 5,000 பரிசு பெற்ற நாவல்

பாப்ரியா

ராஜப்பாவிற்குக் 'காரைக்குடி' வாழ்க்கை அப்படியொன்றும் பிரமாதமானதாகத் தோன்ற வில்லை. சின்னாளபட்டியைவிடத் தேவலாம் என்றால் 'தேவலாம்' என்ற வார்த்தை அரை வயிறு கால்வயிறு என்று கஞ்சி குடித்துக் கொண்டிருந்தவர்களுக்கு வேண்டுமென்றால் தேவலாம் என்ற அர்த்தத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

ஆனால்–

ராஜப்பா போன்ற பணக்காரர்களாக இருந்து சூழ்நிலைகளால் நடுத்தரமாகிவிட்ட ஜனங்களுக்கு நிச்சயம், காரைக்குடியில் கௌரவத்தை விட்டுவிட்டு வாழ்க்கை நடத்த முடியாது என்பது மட்டும் உண்மை.

பெயருக்குத்தான் அதெல்லாம் வீடுகள், போய் நேரில் பார்த்தால் நிச்சயம் கண்கலங் காமல் இருக்கவே முடியாது.

அந்தச் சின்ன வீட்டுக்குள் 'குழி' வெட்டப் பட்ட தறி... அதனுடன் சேர்ந்த தொழில் சம் பந்தப்பட்ட ராட்டை... போணி உருளைகள்... சிட் டங்கள் என்று அடை பட்டுக் கிடக்கும் ஒரு மூலையில்.

மற்றொரு மூலையில் பெயருக்கு ஏதோ ஒரு தகரப் பெட்டி, பற்கள் உதிர்ந்த ஓலைப் பாய் ஒன்றோ இரண்டோ எண்ணைப்பிசிறும் புழுதியும் சேர்ந்து வழுவழுப்பான தலையணை என்று சொல்லக்கூடிய திண்டு. உட்புறம் போனால் சாப்பாட்டுச் சாமான்கள். தட்டு முட்டுச் சாமான்கள் இதுதான் இருக்கும்.


சாயப் பட்டறையிலிருந்து வெளியேறும் கழிவு நீர்களையும் பாத்திரங்கள் விளக்கிக் கழுவி விடும் அழுக்கு நீரும் தேங்குவதால் 'கொசுக்கள்' மொய்க்கும் ஜலதாரையைச் சேர்ந்தாற்போல ஒட்டிக் கட்டப்பட்டிருக்கும் வீட்டுத் திண்ணை... இதையெல்லாம் 'கந்தக பூமி' என்று சொல்லக் கூடிய காரைக்குடிக்கு வெயில் காலத்தில் மட்டுமே நெசவாளிகளுக்குத் திருப்தியாக இருக்கின்ற விஷயம்.

'மழை' என்று வந்துவிட்டாலோ கேட்கவே வேண்டாம்.

தொழிலும் இருக்காது; தூக்கமும் இருக் காது; பலத்த மழையுடன் காற்று அடிக்கும் போதெல்லாம்.

தானே போய் சேலைக்கு வேண்டிய சாயம் போட்ட நூல்களை வாங்கிக் கொண்டு வந்து, வீட்டில் ராஜம்மாவுடன் பெண் பிள்ளைகளுட னும் சேர்ந்து ஆளுக்கொரு வேலையாய் எடுத்துக்கொண்டு, வாரத்திற்கு நான்கு சேலை கள் முதல் ஆறு சேலைகள் வரை நெய்து கொண்டுபோய் 'மொத்தச்சரக்கு' கொள்முதல் செய்பவர்களிடம் கொடுத்துவிட்டுப் பணத்தை வாங்கிக் கொண்டு வரும்போது.

கொஞ்சம் திருப்தி ஏற்பட்டாலும், அந்தத் திருப்தி கொஞ்ச நேரத்தில் மனசை விட்டுப் போய்விடும். எந்தக் காலத்தில் பணத்தை இனி மேல் 'சேகரம்' செய்து வட்டியும் முதலுமாய் சின்னாளப்பட்டியில் முதலாளியிடம் கொடுத்து 'வீட்டை'த் திருப்ப முடியும் என்ற கவலைதான் இதற்குக் காரணம்.



ஊர் ஜனங்களைப் பற்றிக் கவலை அதிகமாக இருந்தாலும் இதுபோன்ற நியாயமான கவலை வரும்போதுதான் ராஜப்பாவிற்கு எதையோ பறிகொடுத்தது போல இருக்கும்.

இந்த வீட்டுப் பிரச்னையைத் தவிர அடுத்து கண்முன் வந்து நிற்பது தன் பெண்களின் எதிர்காலம் பற்றிய விஷயம்.

இந்த இரண்டிற்கும் ஒரு 'தீர்வு இருக்கிறதென்றால் தன்னுடைய மகனின் படிப்பும் அதற்குப் பின் வேலை மூலம் வரப் போகும் வருமானமும்தான். இருந்த ஒரே வீட்டையும் முதலாளியிடம் 'ஒத்திக்கு' வைக்கும்போதுகூட,

தன் தம்பிகள் லேசுபாசாக தனக்குப் பயந்து கொண்டே வேண்டாமென்று தடை சொன்னது கூட ஞாபகத்துக்கு வந்தது.

அந்தத் தடையையும் மீறி, நாளைக்கு ஏதாவது யாருக்காவது இந்தக் குடும்பத்தில் வேண்டாத விஷயமோ வேண்டிய விஷயமோ வந்தாலும், தன்னுடைய மகனால் செய்ய வேண்டிய காரியத்தை நன்றாகவே செய்து முடிக்க முடியும் என்ற நம்பிக்கைதான் இதற்கெல்லாம் காரணமாக அமைந்தது. இந்த நம்பிக்கையெல்லாம் பொய்யாகி விடாமல் இருக்கவேண்டுமென்றால், தன்னுடைய மகனின் எதிர்காலம் நன்றாக அமைய வேண்டும் என்பதில்தான் இப்போது அதிகமாகக் கவலைப்பட்டார் ராஜப்பா.

இதுமாதிரி கவலைப்படும் நேரங்களில்தான் தனக்கு வாழ்க்கையின் அனுபவங்கள் இன்னமும் போதாது என்று நினைத்துக் கொள்வதுண்டு.

இப்படி ஒருநாள் கவலைப்பட்டது மாதிரி திண்ணையில் உட்கார்ந்திருந்தபோதுதான் வந்து விசேஷமான ஒன்றைச் சொன்னார். சிநேகிதர் சொன்ன விஷயம் அவருக்குத் தெரிந்துபோன ஒன்றுதான், ஏற்கனவே கேள்விப்பட்ட விஷயமும்தான்.

ஆனால், இந்த முறை இந்த விசேஷத்தைப் பற்றி நினைக்கும்போது, சின்னாளப்பட்டியிலிருந்து 'பசிக்கும் பஞ்சத்துக்கும்' பூதலூருக்கு ஓடிப்போன - ஜனங்களை எல்லாம் 'பத்து பதினைந்து நாட்களுக்குக் காரைக்குடிக்கே அழைத்து வந்து விடலாமா என்ற தவிப்பு வந்துவிட்டது ராஜப்பாவிற்கு. எப்படியும் மீறிப் போனால் பதினாறு நாட்கள் செட்டிமார் வீட்டில் கல்யாணத்திற்கே 'கறி வகையறாகவே' இருக்கும் சிநேகிதன் சொன்ன மாதிரி.

சாயங்காலம் ஆறுமணிக்கு மேல் பிரபலமான பாகவதர்களைக் கூப்பிட்டு வந்து கச்சேரி வைப்பதும், திருவிழா மாதிரி விசேஷம் கொண்டாடுவதும் அதே சமயத்தில் ஊர் சொல்லி விருந்து வைப்பதும், இந்த மாதிரியான நேரத்தில் 'ஏழைபாழைகள்' என்று சாப்பாடு போடுவதும் பழக்கம்.

ராஜப்பா வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு தன் இரண்டு பெண்களும் இன்னமும் வீடு வந்து சேராத வருத்தத்தில், வீதியில் வருவோரையும் போவோரையும் பார்த்துக் கொண்டிருந்தார். ஆண்களும் பெண்களுமாய் குழந்தைளுமாய் கூட்டம் கூட்டமாய் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்தனர்.

எல்லோரும் வடக்குத் தெருப்பக்கமாக இருந்த 'கொப்புடையம்மன் கோயிலுக்'குப் போய்வந்தபடி இருந்தனர். அவரைப் பொறுத்தவரை சின்னாளப்பட்டியிலிருந்த போதும் சரி, வேறெந்த ஊருக்குப் போனாலும் சரி கோயிலுக்குப் போய் சாமி கும்பிடும் சம்பிரதாயம் பற்றியெல்லாம் நினைத்துப் பார்த்ததேயில்லை.

'சித்திரை விழா' சமயத்திலும், 'வழிமறித்து சாமி கும்பிடும்' சமயத்திலும் சரியே ஊர் பஞ்சாயத்துத் தலைவர் என்ற முறையில் என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் பிறர் தன்மீது குற்றம் சொல்ல முடியாதபடி செய்து கொடுத்துவிட்டுச் சின்னச் சின்னக் காரியங்களுக்காக நம்பிக்கையாக வேறு சில ஆட்களை நியமித்து விட்டு வீடுவந்து சேர்ந்து விடுவார்.

ஜனங்களுடனே கூட இருந்து 'வடம்' பிடிக்கிற விஷயத்திலிருந்து கடைசி வரை இருந்தே ஆக

வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை, ஊர் ஜனங்கள் சொல்லும்போதுகூட, தனது தனித்தன்மையைக் காட்டுவதற்குத் தயங்கியதே இல்லை.

ராஜப்பாவின் தனி நினைவுகளில் சின்னாளப்பட்டியிலும் அதைச் சுற்றிச் சிறிய சிறிய கிராமங்களில் நடைபெறும் 'சித்திரைத் திருவிழா' வந்தது. மறுபடியும் வீதிப்பக்கமாய் கூர்ந்து பார்த்தார். இருட்டிய பிறகு தெரு விளக்குகளின் அடர்த்தியில்லாத வெளிச்சங்களில் தனக்குப் பக்கமாய் வந்தவர்களைத் தவிர மற்றவர்களைச் சரியாக அடையாளம் காணமுடியாமல் இருந்தார்.

பொதுவாக -

இதுமாதிரி வேலை இல்லாத நேரத்தில் இப்படித் திண்ணையில் அமர்ந்து கொண்டு போவோர் வருவோரையெல்லாம் பார்ப்பது மட்டும் எதிர்காலத்தில் போராட்டங்கள் கண் முன்னே விரிந்து போயின. அவரது நினைவுகள் திறப்பது போல, மூன்று வீட்டைத் தள்ளியிருந்த வெள்ளிங்கிரி செட்டியார் ராஜப்பாவின் ஊர் சிநேகிதன் காரைக்குடிக்கு வருவதற்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தவர் வந்து என்ன பலமான யோசனை என்று தன் தொண்டையைச் செருமிக் கொண்டே கேட்ட போது நிதானத்திற்கு வந்தார் ராஜப்பா.

"ஒண்ணுமில்லேப்பா, பழைய ஞாபகமெல்லாம் வந்திச்சு, அப்படியே ஊரைப் பத்தி நெனச்சிப் பாத்தேன். பொழுது அது பாட்டுக்குப் போவுது. கோயிலுக்குப் போனவங்களை இன்னும் காணலே, அவங்ளைப் பாத்துக்கிட்டுத்தான் அப்படியே உட்காந்துட்டேன்".

அவருக்கு 'காரைக்குடிக்கே' வந்த பின் மனத்தில் ஏற்பட்ட புது விஷயம்.

ஏற்கனவே காரைக்குடியில் நெசவு செய்து கொண்டிருந்த சிநேகிதர்களுடன் ஆரம்பத்தில் ஊரைச் சுற்றிப் பார்க்கப் போனதுடன் சரி, பிறகு சிநேகிதர்கள் எப்படி வற்புறுத்திக் கூப்பிட்டாலும் போவதில்லை. இருபத்து ஐந்து வருஷங்களுக்கு முன் வந்த போது இருந்த 'காரைக்குடி' அவ்வளவு பெரிய மாற்றம் எதையும் கொண்டிருப்பதாக அவருக்குப் படவில்லை.

எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் சரியே, பிறந்த நினைவுகள் அவருக்கு வராமல் இருந்ததில்லை. நல்லது கெட்டது எது நடந்தாலும் அதேபோல 'நடந்த பழைய சம்பவங்களை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வார். காரைக்குடியின் சூழ்நிலைகள் எந்தவொரு புதிய மாற்றத்தைத் தனக்குள் ஏற்படுத்தவில்லையென்றால், தன் பெரிய பெண்ணின் 'சடங்கான' விஷயத்தை ராஜம்மா எடுத்துச் சொல்லும்போது

"ஓ... அப்படியா சங்கதி, வாயேன் அப்படியே காந்தி மைதானம் பக்கம் போயிட்டு 'ஆனந்தபவன்லே' காப்பி சாப்பிட்டுட்டு வரலாம்" என்று சிநேகிதன் வெள்ளிங்கிரி கூப்பிட்ட போதுகூட வரவில்லையென்று ராஜப்பா மறுத்து விட்டார்.

"ஆமாம்... இப்படியே காலத்தைப் போக்கிடலாம்னு நெனச்சிக்கிட்டியா என்ன?" என்ற வெள்ளிங்கிரியின் கேள்விக்குச் சாதாரணமாய் ஒரு சிரிப்பைச் சிரித்து வைத்தார் ராஜப்பா.

"அப்படியே வச்சிக்கவே, என்னைப் பத்தி நான் நெனச்சி ரொம்ப நாளா ஆச்சி வெள்ளிங்கிரி. உனக்குத் தெரியாத விஷயம் ஒண்ணுமில்லே. இது நேத்து இன்னிக்கு என்னோட வாழ்க்கையிலே நடக்கிற விஷயமா நெனச்சிக்க முடியலே. எனக்கு விபரந்தெரிஞ்ச நாளிலே இருந்து நடந்துவர்ற விஷயம்.

என்னவோ அப்படி ஓர் அமைப்பு எனக்கு அமைஞ்சிப் போச்சு. இதுக்காக நான் வருத்தப்பட்டலே. ஏன்னா, இந்த மாதிரி விஷயங்கள்தான்

என்னை மனுஷனா ஆக்கி வந்திருக்கு. ஆசா பாசம் குடும்பம் உறவுங்க இதையெல்லாம் மீறிப்போய் ஒரு பொறுமையான தன்மைதான் நல்ல மனுஷனை உருவாக்குங்கற பெரியவங்க வாக்கு எனக்கு வாத்தியாரா இருந்து வந்திருக்குன்னு நெனச்சிப் பாக்குறேன்.

சில சமயத்துலே எனக்கு இதெல்லாம் புதிரா படுது. சிலசமயம் இதுதான் வாழ்க்கைங்கறது என்று புதிய மாதிரி தோணுது. மனுஷனை மனுஷனா பக்குவப்படுத்தற விஷயங்க தன்னைச் சேர்ந்த மனுஷங்களோட மட்டுந்தான்ங்கறது ஒரு வகையிலே மட்டுந்தான் சரின்னு படுது. மிச்சம் மீதியெல்லாம் அவனை அலைக்கழிக்கிற சம்ப வங்களையும் அதுக்கு அவன் மனசு தர்ற எடத்தையும் பொறுத்துதான்னு நான் நினைக்கிறேன். எல்லாமே நல்லதுக்குத்தான்னு நெனச்சிட்டு இருந்த காலம், ஒரு தனிப்பட்ட மனுஷனுக்கு வேணுமின்னா மனசை தேத்திக்கவே பழமொழியா இருக்கலாம்.

ஆனாக்க, ஜனங்க சமூகம் அதோட வாழ்க்கைப் பிரச்னைங்கறப்போ, பாதிக்கப் படற ஜனங்களா பாத்து ஒரு தீர்க்கமா முடிவு எடுக்கலைன்னா 'எல்லாம் நல்லதுக்குத்தான் னுங்கற பழமொழி, அவங்க வாழ்க்கையோட ஒத்துவராத பழசான வார்த்தை ஆயிருமில்லயா... இப்படி இதைப்பத்தித்தான் நான் நெனச்சிகிட்டிருக்கேன்".

"அப்ப அந்த ஊருக்கு வந்தப்பறமும் பொறந்த மண்ணோட வாழ, உன் மனசை அலைக்கழிச்சிட்டிருக்குன்னு சொல்லு".

"ஆமா... என்னோட மனசை அலைக்கழிக்கறதுல்லே, சொந்தம் பந்தம் கூட பொறந்தவங்க, கட்டின பெண்டாட்டி, குழந்தைங்கன்னு இவங்கெல்லாம் அதிகம் பாத்தியப்படலே.

"ஊர் ஜனங்க தான் காரணமா இருக்காங்க, இதுலே எனக்கு எப்போதுமே சந்தோஷம்தான்".

"சரி, ராஜப்பா, ஊரு இருக்கற இருப்பைப் பத்திதான் நான் உன்கிட்டே வெவரமா தெரிஞ்சுக்கணும்னு நெனச்சேன். 'சோத்துக்கு தண்ணிக்குன்னு பஞ்சம் வரது நம்பவூரு பொறுத்த வரைக்கும் இன்னிக்கு நேத்து இல்லை. பாட்டன் முப்பாட்டன்னு பரம்பரையா எப்படியோ வருஷத்துக்கு ஒரு தடவையாச்சும் அப்போவே வந்துருக்குன்னு வீட்லே பெரியவங்க சொல்லக் கேட்டிருக்கேன். இப்படி 'தொழில் நெருக்கடி' இந்த மாதிரி கடுமையா வந்திருக்கறது இந்த வாட்டித்தான்ங்கறது எனக்குப் புரியுது. என்ன தான் சொல்றாங்க நம்ப ஊரு மாஸ்டர் வீவருங்க?"

"என்ன சொல்றாங்க, காரத்துக்கும் புளிக்கும் உப்பில்லேன்னு'. நெனச்சா ரொம்ப கஷ்டமா இருக்கு வெள்ளிங்கிரி. அவங்களை நம்ப நெசவுக்காரங்களா பாத்து திருத்த முடியும்ங்கற நம்பிக்கையும் எனக்கு இல்லே, அதே சமயம் அவுங்களா பாத்து நம் கஷ்டப்படற நெசவுக்காரங்களுக்கு 'மாத்துத் தொழில்' ஏதாச்சும் அமைச்சித் தர மாதிரியும் இல்லே"!

சடப்புடன் ஒருவித விரக்தியுடன் பேசிவிட்டு, வீட்டுத் திண்ணையில் மேற்கூரைப் பக்கம் பார்த்துவிட்டுக் கடவாயைத் தடவிவிட்டுத் துண்டை எடுத்து முகம் துடைத்துக் கொண்டார் ராஜப்பா. இருட்டில் முகம் எந்தவிதச் சலனத்தையும் காட்டியதாகத் தெரியவில்லை. அவருடைய மனத்தின் அதிர்வுகளையும் அபிலாஷைகளையும் அவர் பேசிய பேச்சு மட்டும் வெளிக் காட்டிக் கொண்டிருந்தது. மனம் விட்டு எல்லா விஷயங்களையும் யாரிடமாவது பேசினால் நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்தவருக்கும் வெள்ளிங்கிரி செட்டியாரிடம், பேச்சுக் கொடுத்துக் கொஞ்சம் மாற்றப்பட்டிருக்கிற விஷயம் தெளிவாகத் தெரிந்தது.

மனதிலிருந்து பாரத்தை இறக்கி வைத்தது போலப் பெருமூச்சு விட்டார். அடுத்தபடியாக வெள்ளிங்கிரி கேட்ட கேள்விகளுக்குப் பின்னால் தான் 'ஊரின் தலைவிதி'யே மாற்றப் பட்டிருக்கிற விஷயம் தெளிவாக தெரிந்தது.

ஏற்கனவே இது விபரம் பற்றி நினைத்திருந் தாலும், ஜனங்கள் ஊரைவிட்டு ஊர் சென்று பிழைக்கப் போகிறார்கள் என்ற கவலையும் அதேசமயம் தான் பஞ்சாயத்துத் தலைவராக இருக்கும் காலத்தில் என்று நினைக்கும் போதுதான் அவருக்கு மனம் துக்கப்பட்டது. வெள்ளிங்கிரி ஊர் விவகாரம் இருந்த நிலையைப் பற்றிக்கேட்கத் தொடங்கியவுடன் துக்கம் அவரது தொண்டையை மேலும் இறுக்கிவிட்டது.

"என்ன நான் பாட்டுக்கு கேட்டிட்டிருக்கேன், வெவரமா ஏதாச்சும் சொல்லுவேன்னு பாத்தா, தலையும் இல்லாம வாலும் இல்லாம 'விடுகதை' மாதிரி ஒண்ணை மட்டும் சொல்லிட்டு கற்பனையிலே கோட்டைக் கட்டறது மாதிரி பலமா யோசிச்சிட்டிருக்கிறேயே... அப்படி என்ன விஷயமோ?... சொன்னா நானும் தெரிஞ்சுக்கலாமே... சொல்லு... நேரமுமாச்சிலே... நீ பாத்துகிட்டிருக்கோ உங்க வீட்டு ஆளுங்களும் வந்திடுவாங்க".

"இல்லே... அதெல்லாம் ஒண்ணுமில்லே, பணம் மனுசனை எப்படியெல்லாம் வித்தியாசப்படுத்திக் காட்டுதுன்னு நெனைச்சேன்,

அதுவும் நம்ப ஊரு மாஸ்டர் வீவருங்கன்னு...., இருக்காங்கப்பாரு வெள்ளிங்கிரி, அவங்க ளோட ஆசை இருக்குதே... அப்பப்பா... சொல் லத் தீராது போ."

"எரியுற வூட்லே தீ எடுக்கற ஆசாமிள்ளா போயிட்டாங்க. அதை என்னான்னு சொல்றது."

"அந்த என்ன அப்படியோர் ஆசை அவுங்களுக்கு? வெளியூர்லே ஆர்டர் வாங்கி சரக்கு அனுப்பி சம்பாதிக்கிறதெல்லாம் போதா தாக்கும்?"


"அந்த நியாயமில்லாத ஆசையைக் கேட்டா நீகூட மனசு எரிஞ்சுப் போவே வெள்ளிங்கிரி.

"ஜனங்க படற கஷ்டத்தைப் பயன்படுத்தி கிட்டு, வீடுகளையும், காலி இடங்களையும் அவங்கவுங்க பெரிய மனுஷங்க சேத்துவச்ச இதெல்லாம் 'வட்டி' குறைச்சலாப் போட்டு தர்றோம் ஒத்திக்குத் தரதா இருந்தான்னு ஆசை காட்டி மோசஞ் செஞ்சிட்டிருக்காங்க".

"அப்புறம்?"

"அதுவும் பாரு... அதிலே... சுத்துவட்டாரத் திலே இருந்து தேவமாருங்க அவுங்க இவுங் கன்னு வந்து இதையெல்லாம் சூழ்நிலையைப் பயன்படுத்தி வாங்கிட்டா பின்னாலே ஊருக்குள்ளே நம்ப ஜாதிங்க பலவீனமா போயி அவுங்க ஆதிக்கம் ஆயிரும்னு வேறு பச்சா தாபமாய் பேசி ஜனங்ககிட்டே, சாணக்கியத் தனமா நடந்துக்கறாங்க. ஏற்கனவே 'நூலுக்கு பட்டுக்குன்னு' பிரிட்டிஷ்காருங்க கொடுத்த ரேஷன் அட்டையிலே ஆயிரம் தில்லுமுல்லு செஞ்சி ஒரு தறி இரண்டு தறின்னு வச்சிருக் கவுங்க வயித்துலே எல்லாம் அடிச்சிட்டாங்க... இப்போ இப்படி வேறே..."

"என்ன... ரேஷன் அட்டை வாங்கறதுலேயும் தில்லுமுல்லா...? இதைப்பத்தி சின்னாளப் பட்டிக்கோ எழுவனம்பட்டிக்கோ போயிட்டு வந்தவங்க யாரும் சொல்லக் கேக்கலியே... ஆச்சரியமா இருக்கு. 'தொழில் முடக்கடின்னு' மட்டும்தானே மேம்போக்கா சொல்லி கிட்டாங்க... இப்படியொரு விஷயம் இதுக்குப் பின்னாடி இருக்கா என்ன?"



வைரவரிக் கவிதைகள்

தாலியின் விலை

ஆயுள் கைதிக்குச்
சிறைமாற்றம்
'திருமதி'
பட்டத்துடன்

— குமார கணேசன்

பெண் எழுச்சி



வில்லாக வளைந்தது
போதும் பெண்ணே!
அம்பாக என்று
அவதரிக்கப் போகிறாய்?

— கருமலைப் பழம்நீ

"வெள்ளிங்கிரி ஒன்னு சொல்றேன், பாரு. மனசாட்சியில்லாமே நடந்துக்கற விஷயத்துலே என்னைக்குமே எனக்குச் சம்மதம் இருக்காது. இது உனக்குத் தெரியும். உன்மாதிரி என்கிட்டே சின்ன வயசிலிருந்து பழகறவங்களுக்கும் தெரியும்.

ஊர்லே தொழில் நெருக்கடி வந்திருச்சி. இதுக்கு ஏதாச்சும் மாத்துவழி உடனடியா செஞ்சாகணுமேன்னுதான் முதல்லே எல்லா பணக்கார முதலாளிங்களும் நெனச்சாங்க. கூட்டம் கூட்டிப் பேசினாங்க. மதுரையில்தான் நூல் சப்ளை செய்ற 'கிடங்கி' இருந்திச்சி. இதைப் பரிபாலனை செஞ்சிகிட்டிருந்தவங்க எல்லாருமே ஏகதேசமா வெள்ளைக்காரங்கதான்.

நம்ம ஊரு பணக்காரனுங்க எல்லாம் சேந்து அதிலேயும் முக்கியமா அஞ்சாறு பேத்தை வச்சி 'கமிட்டி' போட்டு ஒரு மகஜர் கொண்டு போய் கொடுத்தாங்க மதுரையிலே இருக்கிற வெள்ளைக்காருங்ககிட்டே. அவுங்க அதைப் படிச்சுப் பாத்துட்டு, சரி நீங்க போங்க நாங்க நேர்லே வந்து நிலைமையைப் பார்த்துட்டுத் தகுந்த ஏற்பாடு செய்றதா உறுதி கொடுத்திருக்காங்க.

இதுலே என்ன வேடிக்கைன்னா, போனவங்க அத்தனை பேருமா அவுங்கவங்க தறியிலே நெசஞ்ச 'புட்டா' போட்டது தாழம்பூ கோர்வை இப்படி அழகா நல்ல விகின் கலர்லே சேலைங்க அன்பளிப்பா ஆபிசர்ங்ககிட்டே கொடுத்துட்டு வந்திருக்காங்க. ஆனா விவகாரமே இங்கேதான் ஆரம்பிச்சிச்சு. நானும் 'பஞ்சாயத்துத் தலைவர்னு' கௌரவத்துலே கூடவே போயிருந்ததிலே எனக்கு மட்டுந்தான் இந்த விஷயம் பூராவுமே தெரியும். நாங்க எல்லாம் ஊருக்குத் திரும்பி பதினைஞ்சு நாளு கழிச்சி மதுரையிலிருந்து அவங்க வந்தாங்க ஊரு இருக்கற நிலைமையைப் பாத்துக்க. அதுக்கு முன்னாலே ஒன்று ரெண்டுன்னு தறி வச்சிகிட்டிருந்தவங்களுக்கு சுத்தமா நூலோ பட்டோ கெடைக்கலே.

சில பணக்காரங்க என்னா செஞ்சாங்கன்னா நூலு பட்டு பாவுன்னு இதையெல்லாம் நெய்றவனுக்குக் கொடுத்துட்டு அவனுக்கு. 'கூலியே' வேறே அழணுமே... என்ன செய்யறதுன்னு' 'ஏடக்குடா கணக்கு' போட்டுட்டு லாபம் எந்தப்பக்கமோ அதுதான் பிரதானம்னு நெனச்சி பட்டு பாவு நூலுன்னு ஏற்கனவே சொன்னேன் பாரு, ஒன்று ரெண்டு தறிக்காரருங்க அவுங்களுக்குப் புத்திசாலித்தனமாக விஷயம்தான். ஏன்னா தறிக்காரனுக்கு 'ஷாப்பிக்கு' இவ்வளவு அப்படின்னு கூலி கொடுத்தே ஆகணும். அதுக்குப் பின்னாலே உற்பத்தியான சேலைங்களை வெளியூருக்குக் 'கடனுக்கு' அனுப்பிச்சி பின்னாலே ரெண்டு மாசம் மூணு மாசம்னு கழிச்சி பணம் பாத்துக்கறதைவிட இது தேவலாம் தானே!

இரண்டு மூணு தறி வச்சிருக்கவங்க பாவம், என்ன செய்வாங்க...? ஊடையோ கூடையோ எச்சோ கம்மியோ குடும்பமே பட்டு பாவை உலர்த்துதலிலே இருந்து எல்லா விஷயங்களையும் கஷ்டப்பட்டு நாலு சேலை நெசஞ்சி திண்டுக்கல்லு... வெள்ளோடு... வீரப்பன் சத்திரம், இங்கே எல்லாம் சுத்தி விக்கலைன்னா மதுரைப் பக்கமா நிலக்கோட்டை... சித்தையன் கோட்டை, கொடைரோடுன்னு 'தலைசுமையாய்' கட்டிக்கொண்டுபோய் ரொக்கத்துக்கு வித்துட்டு வர்றதுக்குள்ளே...

எப்படி... நீயே கொஞ்சம் நெனைச்சிப்பாரு ஊரு எந்த அளவுக்கு மோசமா போயிருச்சின்னு? நீ அங்கே இருந்தப்போல்லா இந்த மாதிரி இல்லேப்பா...., காலே தலைகீழா மாறிப் போச்சி. ஜனங்க செத்துப் பொழைச்சிட்டிருக்காங்கன்னு எந்த முதலாளிங்களும் மனசார நெனைக்கலையேன்னுதான்... என்ன ஊரு என்ன பணக்காரனுங்க நெனைக்கத் தோணுது போப்பா:"

சடப்புடன் கைவிரல்களில் சொடக்கு போட்டுக் கொண்டார் ராஜப்பா, தாடையைச் சொறிந்து விட்டுக் கொண்டார். கொட்டாவி வருவதைத் தடுக்க முடியாததுபோல வாயைத் திறந்து வெளிவிட்டார். பின், வெள்ளிங்கிரி செட்டியாரின் முகத்தைப் பார்த்தார். அவர் திண்ணையின் கீழ் விழுந்திருந்த 'நிலவின்' வெளிச்சத்தைப் பார்த்துவிட்டு ராஜப்பாவைப் பார்த்தார். கண்களில் ஏதோ சோகம் தேங்கியது போல இருந்தது.

தொடரும்...

கங்காபுரிக் காவலன்

களில் தழும்பு ஏறிவிட்டன. உங்கள் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருக்க யாரும் கட்டுப்படுத்த மாட்டார்கள். என்றார்.

24. இராஜேந்திரன் வேண்டுகோள்

தஞ்சை மாளிகைக்குத் தன்னை, இராச ராசன் அழைத்து வந்ததன் காரணம், வீரமாதேவிக்குப் புரிந்துவிட்டது.

அவரும் மற்றவர்களைப் போல சந்தேக எண்ணத்தை மனத்தில் விதைத்து வளர்ப் பவர் என்பது புரிந்து விட்டது.

தன்னைத் தவிர மற்றவரிடம் பேசு வதோ, அன்பு செலுத்துவதோ கூடாது எனும் சிறுமதி அவருக்கு எப்போதும் உண்டா, இப்போதுதான் தோன்றியதா என்று அவளுக்குத் தெரியவில்லை.

மாளிகையில் இரண்டாவது சாமத்தில் தொடங்கிய அவர்கள் விவாதம் விடி வெள்ளி முளைக்கும் வரையிலும் தொடர்ந் தது.

கலைக் கோயில் ஒன்றை எழுப்பும் எண்ணம் இராசேந்திரனுக்கும், அவ ளுக்கும் சேர்ந்தே தோன்றியது. ஆனால் இப்போது அவருள்ளத்துப் பொறாமைத் தீ கலை ஆர்வத்தைத் தீய்த்துவிடும் போலி ருக்கிறதே!

அவர் ஏன் இன்னும் என்னைப் புரிந்து கொள்ளவில்லை? அவள் கடைசியாக அவர் மார்பில் புதைந்து விம்மினாள்.

"நான் மறுபடியும் கொள்ளிடக் கரை கிராமத்திற்கே சென்று விடுகிறேன். அமைதி இழந்து; தங்கள் நம்பிக்கையையும் இழந்து சோழ இளவரசி என்ற நிழல் பெய ருடன் வாழ்வதைவிட, கிராமத் தாமரையாக மன அமைதியுடன் இருப்பதையே விரும்பு கிறேன்" என்றாள்.

இராசேந்திரன் அவள் முகத்தை நிமிர்த் தினார். உதடுகளில் குறும்புப் புன்னகை யுடன், "நல்ல யோசனை வீரம்மா; நாம் இரு வருமே கிராமத்திற்குப் போய்விடுவோம். அரசருக்கான வீண் ஆடம்பரம், கட்டுப்பாடு எல்லாம் இல்லாமல் வாழ்வோம். ஐம்பது ஆண்டுகளாக நான் ஊர் உலகம் சுற்றி விட்டேன். வாளும் வேலும் பிடித்துக் கரங்

"சஞ்சலமா, எனக்கா? என்னைப் பார்த் துச் சொல்லுங்கள். உங்கள் மனம் குழம்பி விட்டது. அடித்தளச் சேறு இதயத் தடா கத்தில் நிறைந்து விட்டது. கலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவர் மனத்தில் மாசு படிய இடமே இல்லை" வீரம்மாள் அழுத்தந் திருத்தமாகக் கூறி னாள். பிறகு தொடர்ந்து, "உங்கள் மனத் தில் சந்தேகம் தோன்றக் காரணம் என்ன? காட்டுப் பகுதிகளில் நான் தனியே இருந்த தால் தவித்துப் போன தங்கள் மனத் தாபம் அவ்வாறு மனத்தை மாற்றி விட்டதா?" என்று கேட்டாள்.

"நீ தனியே இல்லை, வீரம்மா".

"ஆம்; தனியே இல்லை. செதுக்கப்பட்ட சிற்பங்கள் துணையாக இருந்தன. சிற்றுளி எழுப்பும் நாதம் துணையாக இருந்தது".

"நாதம் எழுப்பும் சிற்பியும் துணையாக இருந்தான்" – அரசர் இவ்வாறு சொல்லி விட்டு வீரமாதேவியைக் கூர்ந்து நோக்கி னார்.

அவரது விழியைச் சந்தித்த வீரம்மாள், "ஆமாம், சிற்பி மாணிக்க சேகரன் அந்தக் காட்டுப் பகுதியில் இல்லாவிட்டால் வாழ்க் கையில் தோல்வி கண்டிருப்பேன்" என் றாள்.

"வாழ்க்கை எனும் வசந்தத்தை வீண டிக்க விரும்பியது நீதான். நீ எடுத்த முடிவுதான் அதற்குக் காரணம்".

"நீங்கள் சொல்வது புரிகிறது. என் இளமையையும் அழகையும் கண்டு என்னை விரும்பி ஏற்றீர்கள்..."

"உன் கலைத் திறமையையும் கண்டு தான்."

"உம்; அப்படியே வைத்துக் கொள்ளுங் கள். அந்தக் கலைத் திறமையை மேலும்

விக்கிரமன்

வளர்க்க உதவியவர்கள் நீங்கள். தக்க ஆசிரியரை நியமித்து நாட்டியக் கலையில் மேலும் புலமை பெறச் செய்தீர்கள்."

"சிற்பக் கலையிலும் நீ ஆர்வங் கொண் டாய்".

"ஆமாம், நம் இருவருக்குமே அந்த ஆர் வம் இருப்பதால், அதைப் பயன்படுத்த முடிவு எடுத்தோம்."

"என்னைவிட உனக்கு ஆர்வம் அதிகம் என்பதைக் கண்டு கொண்டேன். அதை வளர்ப்பதற்காக அந்தக் காட்டுப் பகுதி யைத் தேர்ந்தெடுத்தேன்."

"தஞ்சைப் பெரிய கோயிலைவிடச் சிறந்த ஒன்றை நிர்மாணிக்க வேண்டும் என்ற தங்கள் கலை ஆர்வத்தைப் புரிந்து கொண்ட நான், அதை நிறைவேற்ற முற் பட்டேன். என் முயற்சி தவறாகி விட்டது."

"தவறாகவில்லையே! மிக அரிய சிற் பங்கள் தோன்றியுள்ளன."

"தாங்கள் அதைப் பாராட்டுவதாகத் தெரியவில்லை".

"சிற்பங்களைப் பாராட்டுகிறேன். ஆனால்..?

"சொல்லுங்கள் -"

வீரமாதேவி நேருக்கு நேர் கேட்ட போது அவள் பார்வையின் கூர்மையும் சொற் களின் வலிமையும் அந்த மாவீரனால் தாங்க முடியவில்லை.

"சொல்லுங்கள், சக்கரவர்த்திகளே, சொல்லுங்கள். சிற்பியைப் பிடிக்க வில்லை; அப்படித்தானே?"

"இல்லை, இல்லை - மாணிக்க சேக ரனை மதுரையிலிருந்து நான்தான் வர வழைத்தேன். அவனிடமிருந்து மேலும் அரிய பெரிய படைப்புகளை எதிர்பார்க் கிறேன். ஆனால்..."

"சொல்லுங்கள், அரசே, சொல்லுங்கள். சிற்பியைப் பிடிக்கிறது. என்னைப் பிடிக் கிறது. ஆனால் சிற்பி என்னுடன் பழகு வதில்தான் உங்கள் மனத்தில் முள் குத்து கிறது."

இவ்வாறு அவள் சொன்னவுடன், இராசேந்திரன் அதிர்ச்சியடைந்தவராய், அவளை நோக்கினார்.

'அவ்வாறு நினைக்கவில்லை; அவ்வாறு சந்தேகப்படவில்லை' என்று சொல்ல வேண்டும்போல் தோன்றியது.

தன் மனத்தில் எழுந்த ஐயப்பாட்டைக் கணத்தில் தெரிந்துகொண்டுவிட்ட அவள் கூரிய மதியைப் பாராட்டத் தோன்றியது.

தஞ்சைக்கு நிகரான கலைக் கோயில் அமைப்பதில் பெரிதும் ஆர்வங் கொண் டிருப்பதால்தானே சிற்பியுடன் அவள் நெருங்கிப் பழக நேர்ந்தது. அதைத் தவ றாக நினைத்துவிட்டோமே. நம் சந்தேகப் பேய் இன்னும் சிறிது காலம் மனத்தில் குடி கொண்டிருந்தால் எவ்வளவு பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கும். பொறாமையால் சிற்பியை அழித்து இருப்போம். வீரமாதேவிக்குக் கடுந்தண்டனை வழங்கியிருப்போம். ஐயோ, கீழ்த்தரமான நரிக் குணம் எவ்வாறு என் னுள்ளத்தில் ஏற்பட்டது?

இராசேந்திரன் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை வீரம்மாள் கண்டாள். தாம் தவறு செய்துவிட்டோம் என்ற உணர்வு அவருக்கு மெல்ல மெல்ல ஏற்படுகிறது என்பதை உணர்ந்தாள். அபாண்டமாகக் குற்றச்சாட்டை வெளியிட்டு விட்டோம் என் பதை அவர் உணர்வதாக அவள் புரிந்து கொண்டாள். அதனால் அவர் கண்ணைக் கசக்குவதையும் கண்டாள்.

இனியும் அவரைச் சோதனை செய்யக் கூடாது என்ற எண்ணத்தில் அவர் கன் னத்தை மெல்லத் தடவி, அவர் விழிகளை மெல்ல வருடி அவரது கரத்தை எடுத்துத் தன் கன்னத்தில் வைத்துக் கொண்டு, "அரசே தங்கள் மனத்தில் சந்தேகம் ஏற் பட்டது நியாயம்தான். உங்கள் உள்ளத்தில் நீறு பூத்திருக்கும் தீயைக் கொழுந்து விட் டெரியுமாறு நான் நடந்து கொண்டது தவறு தான்; இனித் தங்களை விட்டு நான் பிரிய மாட்டேன்" என்றாள்.

"எந்தக் கானகப் பகுதி தங்கள் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்டாக அமையும் என்று நான் நினைத்தேனோ, அந்த இடம் நம்மிருவரிடையே பிளவை ஏற்படுத்தும் என்ற நிலைக்கு அழைத்துச் செல்லும் என்றால் மீண்டும் நான் அங்கே செல்ல மாட்டேன். இது உறுதி" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினாள்.

ஒரு கணம் இராசேந்திரன் திகைத்தார். வீரமாதேவியின் உறுதிப்பாட்டில் அவருக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. சொன்ன சொல்லை அவள் மீற மாட்டாள் என்பது அவருக்குத் தெரியும். கலைக் கோயில் அமைப்பதற்காகக் காட்டுப்பகுதிக்குச் சென்ற வீரம்மாள் அங்கே இனி செல்ல மாட்டேன் என்று உறுதி பூண்டு விட்டாள் என்றால் தன் இலட்சியம் என்னாவது? இராசேந்திரன் ஒரு கணம் குழம்பினார்.


அவர் திகைப்பதைக் கண்ட வீரம்மாள், "என் உறுதியில் கடுமை இருக்கிறதா?" என்று கேட்டாள்.

"காட்டுப் பகுதிக்குச் செல்லமாட்டேன் என்று நீ எடுக்கும் முடிவினால், நம் இருவருடைய இலட்சியங்களுக்கும் இடையூறு வந்துவிடாதா?" இராசேந்திரன் கேட்டார். சிறு குழந்தைபோல் அவர் அன்புடன் கேட்ட கேள்வி வீரம்மாள் மனத்தை நெகிழ வைத்தது.

"என் இலட்சியத்தை ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டேன்" என்றாள் வீரமாதேவி.

"கானகப்பகுதியில் நிர்மாணிக்க இருக்கும் கலைக் கோயில் என்னாவது?"

"உங்கள் இலட்சியம் எதுவோ அதுவே என் இலட்சியம். உங்கள் புகழ் காலா காலத்திற்கு அழியாமல் இருப்பதற்கான எல்லாவிதப் பணிகளிலும் ஈடுபடுவதே என் வாழ்க்கையின் குறிக்கோள். நீங்கள் எப்



தத்த பீடாதிபதி ஜகத்குரு பரமபூஜ்ய ஸ்ரீகணபதி சச்சிதானந்தா ஸ்வாமிஜி அவர்களின் 50 ஆவது வயது நிறைவு விழாவினை (பொன் விழா) மிகச் சீரும் சிறப்புமாக அண்மையில் 5.6.92 முதல் 14.6.92 முடிய 10 நாட்களுக்குக் கோலாகலமாகக் கொண்டாடியது "ஸ்ரீகணபதி சச்சிதானந்தா அவதூத தத்த பீடம், மைசூர்".

தினசரி பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பக்தர்கள் குழுமியிருந்த ஆசிரமம், வேத கோஷம், ஹோமம், சிறப்புப் பூஜைகள், தத்தாத்ரேயர் ஆலய புனருத்தாரண மகா கும்பாபிஷேகம், தலைசிறந்த இசை வல்லுனர்களின் இசை நிகழ்ச்சிகள், பல மொழி நூல்கள் வெளியீடு, காஸட்டுகள் வெளியீடு, இந்தியாவைச் சேர்ந்த பல



மாநிலக் கலை நிகழ்ச்சிகள், வாண வேடிக்கைகள் இவைகளுடன் 10 நாட்களும் விழாக் கோலம் பூண்டு பக்தர்களைப் பரவசமூட்டியது என்றால் மிகையாகாது. பல நூறு வெளிநாட்டுப் பக்தர்கள் இவ்விழாவினில் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

உலகெங்கிலுமுள்ள ஞான போத சபைகள், தத்த யோக கேந்திரங்கள் பங்குபெற்ற 19 ஆவது மாநாடு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் தலைமையில் 13.6.92 அன்று நடைபெற்றது.

தினசரி நடைபெற்ற இசை நிகழ்ச்சிகளில் குறிப்பிடத் தக்கவை, வீணை சிட்டிபாபு, வயலின் டி.என்.கிருஷ்ணன், வயலின் டாக்டர் எல்.சுப்பிரமணியம், மாண்டலின் ஸ்ரீனிவாஸ், பாட்டு ஸ்ரீ கே.வி. நாராயணஸ்வாமி ஆகியோர் வழங்கியவையாகும்.

எல்லா நிகழ்ச்சிகளுக்கும் சிகரமாக அமைந்தது 14.6.92 அன்று மாலை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் நிகழ்த்திய "பிணி தீர்க்கும் இசை நிகழ்ச்சி" (MUSIC FOR MEDITATION AND HEALING).

படிக் கட்டளையிடுகிறீர்களோ அப்படியே நடப்பேன். அதற்காக என் உறுதியையும் மாற்றிக் கொள்ளச் சித்தமாக இருக்கிறேன்" என்று வீரம்மாள் கூறியவுடன் இராசேந்திரன் திடுக்கிட்டார்.

அவளுடைய விழிகளில் புலப்பட்ட அழியாத அன்பைக் கண்டு அவர் மெய் சிலிர்த்தார்.

நான் கட்டளையிட்டபடியே நடப்பேன் என்கிறாளே. நாம் கட்டளையிட வேண்டாம்; அன்பாகக் கேட்போம், இரண்டாண்டுகள் ஓடி மறைந்தும் தன் இளமையின் தாபத்தை அடக்கி வைத்திருக்கும் அவள் போக்கை மாற்றிக் கொள்ளுமாறு கேட்போம்!

"வீரம்மா! உனக்கு வேதனை தருமாறு நான் ஏதாவது கூறியிருந்தால் அதைப் பொருட்படுத்தாதே" என்று கூறியவாறு அவள் கரத்தைப் பற்றினார். "உன்மீது எனக்குச் சந்தேகம் வரவில்லை. ஆனால், பொறாமை ஏற்பட்டது என்பது உண்மை" என்றார். பேசிக் கொண்டிருக்கும்போதே அவர் கரம் அவள் இடையைப் பற்றியது.

"பொறாமையா?" - வீரம்மாள் விழிகள் அகல மலர்ந்தன.

"ஆமாம்! உன் எழிலைக் கண்டு பொறாமை; உன் இளமையைக் கண்டு பொறாமை".

"தங்களுக்குப் பொறாமை ஏற்பட நியாயமில்லையே. இளமை என் வயதுக்கு ஏற்றது. அதில் புதுமை இல்லை. நான் ஓர் அழகி என்று கருதுவது உங்கள் மனத்தையும் விருப்பத்தையும் பொறுத்தது. என்னை நீங்கள் உரிமையாக்கிக் கொண்ட பிறகு நான் பூரணமாக உங்களிடம் இணைந்துவிட்ட பிறகு நீங்கள் என்மேல் பொறாமைப் பட என்ன இருக்கிறது? நான் அழகி என்று நீங்கள் வர்ணித்தால் நீங்கள் பேரழகர். உங்கள் பாட்டனார் சுந்தர சோழரின் மறு பிறவி என்று உலகம் புகழ்கிறது. மன்மதனாகிய நீங்கள் என்மீது பொறாமைப்படக் காரணமில்லை" - வீரம்மாள் அவர் கரங்களில் துவண்டாள். பேச்சுத் தடைப்பட்டது.

"இல்லை வீரமாதேவி - நினைத்துப்பார்! உன் அழகுக்காக மட்டுமன்று; உன்னிடமுள்ள கலைப் புலமைக்காகவும்தான் நான் உன்மீது விருப்பங் கொண்டேன். ஆசை நாயகியாக உன்னை அந்தப்புரத்தில் அமர்த்தவில்லை. இளவரசியாக ஏற்றுக் கொண்டேன். எனக்கு மட்டுமே உன்

நாட்டியக் கலை பயன்பட வேண்டும் என்று விரும்பினேன். அதற்கு மாறாக நீ மற்றவர் எதிரே ஆடும்போது எனக்குப் பொறாமை ஏற்படாமல் இருக்குமா?"

அவருடைய நெருக்கத்தில் இருந்து விடுபட முயன்றுத் தோல்வியடைந்த வீரம்மாள் நெளிந்தவாறு "உங்கள் தந்தை எதிரே ஆடும்போதும், உங்களுடைய அருமை பட்டத்து அரசி, இளவரசிகள் எதிரே ஆடும் போதும் பொறாமைப்படவில்லையா?"



அங்கே சில நொடிகள் மௌனம். வீரம்மாள் திணறியவாறு, "என்னைப் பேச அனுமதியுங்கள். என் அழகும், இளமையும், கலையும் உங்களுக்கு மட்டுமே என்று நான் முடிவு செய்ததனால்தான், உங்கள் திருக் குமரன் தண்டனைக்கு ஆளானான் என்பதை மறந்து விட்டீர்களா? நாட்டு நகரத்தில் வசித்தால் காமப்பார்வைகள் என் உடலை மொய்த்து, என்னைக் கருக்கிவிடும் என்று காட்டிற்கு வந்துவிட்டேன். அங்கே நீங்களும் நானும் மட்டும் தங்கியிருந்து கலையாட்சி புரிய வேண்டும். என் ஆசை; ஆசையன்று, கோரிக்கையை நிறைவேற்றுவீர்களா?" வீரம்மாள் அவரது அணைப்பிலிருந்து தன்னை முற்றிலுமாக விடுவித்துக் கொண்டு, சற்று விலகிநின்று, கலைந்திருந்த தன் மேலாடையை விரைவாக சீர்திருத்த முயலும்போது இராசேந்திரன் மீண்டும் அவள் கரத்தைப் பற்றி இழுத்த போது அவள் அவர் மடியில் வீழ்ந்தாள்.

இராசேந்திரன் வார்த்தைகளில் தெளிவு குறைந்து தடுமாற்றம் நிறைந்திருந்தது. அந்த மாவீரனின் உடலில் மெல்லிய நடுக்கம். "ஒரு கோரிக்கை என்ன, ஒன்பது கோரிக்கையை நான் நிறைவேற்றுவேன். உன பிடிவாதத்தைச் சற்றுத் தளர விட்டால்..." என்று வார்த்தைகள் தடுமாறப் பேசினார். அண்மைக் காலத்தில் அவர் மது அருந்தி அவள் பார்த்ததில்லை.

மீண்டும் அவர் மடியிலிருந்து எழ முற்பட்டவள், "பேரரசரே! நான் பிடிவாதம் பிடிக்கிறேனா? இன்னொரு முறை அப்படிச் சொல்லாதீர்கள்; மமதைக்கும், கர்வத்திற்கும், பிடிவாதத்திற்கும் அப்பாற்பட்டவள் நான். ஒருவேளை நான் இன்றும் உங்கள் அரவணைப்பில் குழந்தையாக இருந்து செல்லமாகச் சிணுங்கிப் பிடிவாதம் பிடித்திருந்தால் என்னைப் பொறுத் தருளுங்கள்; அந்தப் பிடிவாதத்தைச் சுட்டிக் காட்டினால் நான் என்னை மாற்றிக் கொள்கிறேன். சோழப் பேரரசர் எதிரே பிடிவாதம் பிடித்து வென்றவர்கள் என்று யாராவது இருக்கிறார்களா?" - இப்படிச் சொல்லிக் கொண்டே அவள் அவர் அருகே அமர்ந்தாள்.

"இருக்கிறாள், இருக்கிறாள். இதோ என் எதிரே இருக்கிறாள். தேவலோக மங்கை போல் அமர்ந்திருக்கிறாள்" என்று கூறி அவர் நகைத்தவாறு அவளைப் பார்த்த பார்வையில் காதல் மயக்கம் பொங்கி வழிந்தது.

வீரம்மாள் திடுக்கிட்டாள். "சுவாமி, இது என்ன வார்த்தை? என் பிடிவாதத்தைச் சுட்டிக் காட்டுங்கள்; உடனே திருத்திக் கொள்கிறேன்" என்றாள்.

"வீரமாதேவி! நீ இந்த நாட்டின் அரசிகளுள் ஒருத்தி. என் மனத்துக்கு இசைந்தவள். கலையும், வீரமும், அறிவும் மிகுந்த ஒரு வீரனை உன்னால் பெற்றுத் தர முடியும். இன்னும் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நாட்டை ஆளும் சக்தி படைத்த ஆண்மகனை உன்னால்தான் சோழ நாட்டிற்கு அளிக்க முடியும். உன் சபதத்தை மறந்து, பிடிவாதத்தை வீசி எறிந்து விடு; என் கோரிக்கையை, ஆசையை நிறைவேற்றுவாயா? வா, என் அருகே வா வீரமாதேவி" என்று பேசியவாறு இராசேந்திரன் தன் வலிமை முழுவதையும் செலுத்தி வீரம்மாளை அணைக்க முயன்றார்.

(தொடரும்)

பூமி..!



மலரும்
மூடுபனி சூழ்ந்த
மலையும் நதியும்
இயற்கையின் சுவடுகள்.

மனிதனின்
விரல் நுனியிலிருந்து
வானம் தொடக் கை நீட்டும்
விஞ்ஞானம்.

'ஓசோனா' அடுக்குகள் கிழிந்து
தேய்ந்த சக்தியாய் வரும்
சூரியக் கதிரோடு
விளையாடும்!

மனித குலத்திற்கு
இயற்கையே தாய்!

ஆலைகள் கக்கும்
விஷப் புகைக்கு மேலே - அது
கோபுரமாய் மலைச் சிகரத்தை
உயர்த்தும்!


காட்டுத் தோப்பிலிருந்து
பாடும் பொன் வண்டு பிடித்து வரும்
பெண்கள்.

நாட்டைக் காடாக்கி
அணுகுண்டு வீசிய தீக்கண்கள்.
இங்கே தாய்மையே தெய்வீகம்!


ஆயுதமே கைகளானால்
பூமி அழியும்!
கைகளே ஆயுதமானால்
அது... மறுபடியும் மறுபடியும்


வசந்தப் பூக்களால்
அலங்காரம் செய்து
கொள்ளும்!

கவியரசு
நா. காமராசன்



சுவாமி மலை சித்திரங்கள்





ஓவியங்கள்: அமரர் சில்பி


அந்தம்மா கொள்ளை அழகு, சார்!
ஆமா, கோயில் நகைகளைக் கொள்ளையடிச்சு போட்டிருக்காங்க! அதான் கொள்ளை அழகு! அவர் கோயில் அறங்காவலர்!


ஐயோ! கோயில்லே திருட வந்தது தப்பு!


• சாமி புறப்பாடுங்களா?
• அட இல்லீங்க!.. சாமி சிலையை இப்படி மேளதாளத்தோட கடத்திக்கிட்டுப் போறாங்க!


அம்மா! உனக்குக் காணிக்கையாக ஒரு பவுன் உண்டியல்லே போடறேன்! உன் கோயில்லே திருடும்போது ஆபத்து வராம என்னைக் காப்பாத்து!

கொள்ளை அழகு


பேட்டை ரௌடிங்களைச் சுத்தி சுத்தி வந்த நீங்க, இப்ப கோயில்லே சாமியைச் சுத்தி சுத்தி வர்றீங்க! கோயில் காவல் டேடி!

தமிழில் தவறுகளை அறிவோம்

மூத்து கண்ணப்பர்

சந்திப் பிழைகளைச் சிந்திப்போம்

(ஒற்று மிகுதலும் மிகாமையும்)

சென்ற மாத இதழில், வேற்றுமை உருபுகள் (2,3,4,5,6,7) இரு சொற்களுக்கிடையில் மறைந்திருந்தால் அச்சொற்றொடர்கள் வேற்றுமைத் தொகைகள் என்று வழங்கப்படும் என்பதையறிந்தோம்; அவ்வாறு இரு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபுகள் அல்லாத பிற சொற்களும் மறைந்திருக்கும்; அவை வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை என்று வழங்கப்படும் என்பதையும் அறிந்தோம். அவற்றுள் பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத் தொகை, உவமைத் தொகை ஆகியவற்றின் விளக்கத்தையும், எடுத்துக்காட்டுகளையும் அறிந்தோம். இவற்றுள் இருபெயரொட்டுப் பண்புத் தொகை, உவமைத்தொகை ஆகியவற்றில் வல்லெழுத்து (க்,ச்,த்,ப்) மிகும் என்றும் கண்டோம். இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில்தான் ஒற்று மிகும். பண்புத் தொகையில் பெரும்பாலும் மிகாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து தொகையில் இரு பெயரொட்டுப் பண்புத் தொகை, உவமைத் தொகை ஆகிய இரண்டனைத் தவிர ஏனைய வினைத்தொகை, உம்மைத் தொகைகளில் வல்லெழுத்துகள் மிகா. இவற்றுக்குரிய விளக்கங்களையும், எடுத்துக்காட்டுகளையும் வலிமிகா இடங்கள் என்னும் தலைப்பில் காண்போம். அதற்குமுன் இன்னும் சில இடங்களிலும் வலிமிகும். அவற்றையும் அறிதல் வேண்டும்.

அவை :

25) அத்துணை, இத்துணை, எத்துணை - இவற்றிற்குப் பின் மிகும்.

(அத்துணை என்றால் அவ்வளவு என்பது பொருள். பிறவும் அவ்வாறே)

(எ-டு)

அத்துணை + பரிவு = அத்துணைப் பரிவு

இத்துணை + காலம் = இத்துணைக் காலம்

எத்துணை + தொலைவு = எத்துணைத் தொலைவு?

26) அற்றை, இற்றை, எற்றை

(அற்றை - அன்றைக்குரிய அல்லது அன்று ; பிறவும் அவ்வாறே)

அற்றை + திங்கள் = அற்றைத்திங்கள்

இற்றை + திங்கள் = இற்றைத்திங்கள்

எற்றை + செயல் = எற்றைச்செயல்?

'அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவின்
இற்றைத் திங்கள் இவ் வெண்ணிலவின்' –
புறம் : 112

என வருவது காண்க.

27) ஒரு நிலை மொழியின் ஈற்றில் 'ம்' என்னும் எழுத்து வருமானால் அது மறைந்து வருமொழியின் முதலிலுள்ள எழுத்தின் இன எழுத்துக்குரிய (க்,ச்,த்,ப்) வல்லெழுத்துத் தோன்றும்.

(எ-டு) பழம் + தோட்டம் = பழத்தோட்டம் : மனம் + குறை = மனக்குறை; பணம் + பை = பணப்பை. இவற்றை வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகவும் கொள்ளலாம்.

இனி, வலி மிகா இடங்களையும் அறிவோம்.

வலிமிகா இடங்கள்

1) வினைத் தொகையில் மிகா :

வினைத்தொகை என்றால் வினைச் சொல்லின் வேர்ப் பகுதி - அதாவது பகுதி, நிலைமொழியாகவும், அதனை அடுத்து வரும் வருமொழி, பெயர்ச் சொல்லாகவும் வரும். பகுதியாகிய வினைச் சொல்லில் முக்காலத்தைக்

காட்டும் வினைமுற்று விகுதி மறைந்திருக்கும். வினைச் சொல் முக்காலத்துக்கும் பொதுவாகத் தோன்றும். அவ்வினைச் சொல்லை விரித்தால்தான் அது முக்காலத்துக்கும் பொதுவாய் உள்ளமை தெளிவாகும்.

(எ-டு) சுடுசொல் : இதில் 'சுடு' என்பது வினைச்சொல். எந்தக் காலத்தையும் தெளிவாகக் குறிக்கவில்லை. இதில் காலம் தொக்கி (மறைந்து) நிற்கிறது. இதனை விரித்தால் 'சுட்ட சோறு' என்று இறந்த காலத்தையும், 'சுடுகின்ற சோறு' என்று நிகழ்காலத்தையும் 'சுடும் சோறு' என்று எதிர் காலத்தையும் காட்டும். இவ்வாறு வரும் சொற்றொடர் வினைத்தொகையாம்.

இத்தகைய வினைத் தொகையில் வல்லெழுத்து மிகா. இயல்பாகவே இருக்கும்.

நடு + கல் = நடுகல்; விடி + காலை = விடிகாலை; செய் + தொழில் = செய்தொழில். இவை மேலும் சில எடுத்துகாட்டுகள்.

2) உம்மைத் தொகையில் மிகா: நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் 'உம்' என்னும் சொல் தொக்கி அல்லது மறைந்து நிற்கும்.

(எ-டு) மா + பலா =மா பலா; கிளி + புறா = கிளி புறா; சேரர் + சோழர் = சேரர்சோழர். இத்தொடர்களில் 'உம்' என்னும் சொல் மறைந்திருக்கிறது. (மாவும் பலாவும்; கிளியும் புறாவும்; சேரரும் சோழரும்)

3) அது, இது, எது மிகா :

(எ-டு) அது + செய் = அது செய்;இது + பார் = இது பார்;எது + சிறிது = எது சிறிது?

4) அவை, இவை, எவை - இவற்றின் பின் மிகா.

(எ-டு) அவை + பறந்தன = அவை பறந்தன; இவை + சிறந்தன = இவை சிறந்தன; எவை + கண்டன = எவை கண்டன?

5) அன்று, இன்று, என்று மிகா :

(எ-டு) அன்று + காண்போம் = அன்று காண்போம்; இன்று + போ = இன்று போ; என்று + தருவாய் = என்று தருவாய்?

6) அத்தனை, இத்தனை, எத்தனை - மிகா :

(இவை எண்களின் அளவைக் குறிப்பன. அத்தனை மரங்கள், இத்தனை செடிகள்) (எ.டு) அத்தனை + படங்கள் = அத்தனை படங்கள்; இத்தனை + பெயர்கள் = இத்தனை பெயர்கள எத்தனை + சொற்கள் = எத்தனை சொற்கள்?

முக்கியக் குறிப்பு அப்படி, இப்படி, எப்படி; அத்துணை, இத்துணை, எத்துணை; அவ்வகை, இவ்வகை, எவ்வகை ஆகியவற்றின் பின்தான் வல்லெழுத்துகள் மிகும். அத்தனை, இத்தனை, எத்தனை - என்னும் எண்ணிக்கையின் அளவைக் குறிக்கும் சொற்களின் பின் வல்லெழுத்து மிகக் கூடாது. இதைப் பலர் உணராமல் வல்லெழுத்துச் சேர்த்தே எழுதுகிறார்கள். இத் தவற்றினை நன்றாய் உணர்தல் வேண்டும்.

7) அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு - மிகா :

(எ-டு)

அவ்வாறு + கருதுக = அவ்வாறு கருதுக

இவ்வாறு + செய்க = இவ்வாறு செய்க

எவ்வாறு + கண்டாய் = எவ்வாறு கண்டாய்?

8) அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு - மிகா :

(எ-டு)

அவ்வளவு + பேர் = அவ்வளவு பேர்

இவ்வளவு + காலம் = இவ்வளவு காலம்

எவ்வளவு + தரம் = எவ்வளவு தரம்?

9) ஒரு, இரு, சில, பல, அறு, எழு - மிகா :

(எ-டு) ஒரு + கால் = ஒருகால் (ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்)

இரு + படங்கள் = இரு படங்கள்

சில + தகவல்கள் = சில தகவல்கள்

பல + கலைகள் = பல கலைகள்

குறிப்பு : பல + பல = பலப்பல; சில + சில = சிலச்சில. இவ்வாறு இரண்டு சொற்கள் சேர்ந்து வருங்கால் மிகும்; தனித்து வருங்கால் மிகா.

அறு + சுவை = அறுசுவை

எழு + கடல் = எழுகடல்

10) வினையெச்சத்துடன் 'படி' என்னும் சொல் இணைந்து வரும் தொடரின்பின் மிகா : வரும்படி + சொல் = வரும்படிசொல். கண்டபடி + கூறு = கண்டபடிகூறு. சொல்லுகின்றபடி + செய் = சொல்லுகின்றபடி செய்.

குறிப்பு : அப்படி, இப்படி, எப்படி : என வரும் சொற்களுக்குப் பின்னர் மட்டுமே வல்லெழுத்து மிகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இவற்றை முன்னரும் அறிந்திருக்கிறோம்.

11) ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, ஒன்பது - இச்சொற்களின் பின் மிகா :

(எண்களில் 'எட்டு', 'பத்து' என்னும் இரு சொற்களின் பின்னர் மட்டுமே மிகும். ஏனையவற்றுக்குப் பின் மிகா : காரணம் அவை இரண்டும் வன்றொடர்க் குற்றியலுகரங்கள். வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின் மிகும் என்று முன்னர் அறிந்து கொண்டது நினைவிருக்க வேண்டும்).

(எ-டு)

ஒன்று + செய் =ஒன்று செய்

இரண்டு + தரம் = இரண்டுதரம்

மூன்று + பேர் = மூன்றுபேர்

நான்கு + கால் = நான்குகால்

ஐந்து + பிள்ளைகள் = ஐந்துபிள்ளைகள்

ஆறு + தலைகள் = ஆறுதலைகள்

ஏழு + கன்னியர் = ஏழுகன்னியர்

ஒன்பது + கற்கள் = ஒன்பது கற்கள்

12) இரண்டாம் வேற்றுமைத் தொகையில் மிகா : இது நினைவில் ஆழப் பதிய வைத்துக் கொள்ள வேண்டிய ஒன்று. இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் இவ்வுருபு (ஐ) மறைந்து நின்றால் அது இரண்டாம் வேற்றுமைத் தொகை.

(எ-டு) பூச்சி + கொல்லி = பூச்சி கொல்லி என இயல்பாகவே வரும். 'பூச்சி கொல்லி' என்பதை விரித்துப் படித்தால் 'பூச்சியைக் கொல்லி' (பூச்சி + ஐ = பூச்சியை) என வரும். 'பூச்சி' என்னும் நிலை மொழிக்கும் 'கொல்லி' என்னும் வருமொழிக்கும் இடையில் 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கி (மறைந்து) உள்ளது. ஆதலால் இது இரண்டாம் வேற்றுமைத் தொகை. எனவே, இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகவில்லை. 'பூச்சியைக் கொல்லி' என்றால் அதில் வல்லெழுத்து மிகும். காரணம் 'பூச்சியை' என்பதில் இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' வெளியே தெரிகிறது. உருபு வெளியே தெரிந்தால் அப்போது மிகும். மறைந்திருந்தால்தான் (தொகையில்) மிகக் கூடாது. இதை உணராமல் பலர் வல்லெழுத்துப் பெய்து எழுதுவார்கள். இரண்டாம் வேற்றுமைத் தொகைக்கு மேலும் சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

எடுத்துக் காட்டுகள் :

வேலி + கட்டு = வேலி கட்டு; ஓலை + கிழி = ஓலை கிழி; யானை + பார் = யானை பார்; கீரை + பறி = கீரை பறி; வேலை + செய் = வேலை செய்.

தமிழ் படி; நீர் பருகு; வாய் திற - பிறவும் இவ்வாறே.



'சிவாலி கல்ச்சுரல் சொசைட்டி ஆஃப் இந்தியா' - பம்பாய் ஆதரவில் 13.6.92 அன்று 'ஸ்ரீபரத நாட்யாலயாவின்' கலைமாமணி ஸ்ரீமதி மாலதியின் பிரதம மாணவி செல்வி சந்தியாவின் நடன நிகழ்ச்சி மியூசிக் அகடெமி மினி அரங்கில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் கலந்து கொண்டு செல்வி. சந்தியாவின் முக பாவம், லயசுத்தம், அங்க சுத்தம் ஆகியனவற்றைப் பாராட்டினார்.



உயர உயர கிரேன்

தற்போது தென்னகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் மார்க்கெட் பிடித்துள்ள கிரேன் பாக்கு, இத்துணை பிரசித்தி பெற்றிருப்பதற்கு முக்கிய காரணம் எப்போதும் சீரான முறையில் உள்ள அதன் தரமான தயாரிப்புதான்.

வளமான பாக்கு (கமுகு) மரங்களிலிருந்து பாக்கை வெட்டி எடுத்து, தயாரிப்பில் கிராம்பு, இலவங்கம், மிளகுடன் சேர்த்து, கிரேன் பாக்கு தயாரிக்கப்படுகிறது. மருந்து மூலிகைச் சேர்ப்பு இதில் முக்கியமாகக் கருதப்படுகிறது.

'கிரேன்' பாக்கின் மூல சூத்திரதாரி - கர்மயோகி திரு ஜி. சுப்பாராவ் அவர்கள்.

1952ஆம் வருடம். இளைஞரான திரு. ராவ் ஓர் இலட்சியத் தொழில் தொடங்க எண்ணினார். கையில் இருந்த மூலதனமோ நூறு ரூபாய்தான். உள்ளத்திலோ அசாத்தியமான உறுதி. அப்போது 5 சேர் பாக்குக் கொட்டைகளை (இன்றைய அளவு 1.4 கிலோ) வாங்கித் தொழிலை ஆரம்பித்தார் திரு. ராவ்.

இவரது இலட்சியக் கனவு இன்று நனவாகும்படி ஓர் ஆல விருட்சமாக வளர்ந்துள்ளது கிரேன் நிறுவனம்.

1957இல் ஒருசில ஆயிரமே இருந்த விற்பனை இப்போது (1991 ஆண்டுக் கணக்குப்படி) 22 கோடி ரூபாயாக விற்பனை உயர்ந்துள்ளது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

பாக்கு வர்த்தக உலகில் தம்முடன் இணைந்துள்ள ஏஜெண்டுகள், சம்பந்தப்பட்ட விற்பனைப் பகுதிகள் (நெட் ஒர்க்) (தற்சமயம் 500,000 விற்பனைப் பகுதிகள்) முக்கியமாகப் பல்லாயிரக்கணக்கான சுவைஞர்களான வாடிக்கையாளர்களை திரு. ராவ் அவர்களின் 'நம்பர் ஒன்' நேரிடைத் தொடர்பு பெற்றாற்போலவே இப்பணி நடைபெறுகிறது. இது இவரது வியாபார சாதனை; வெற்றி.

25,000 சதுர அடிப் பரப்பில், 900 ஊழியர்களுடன், விஸ்தாரமாக அமைந்துள்ளது கிரேன் தொழிலகம்.


கால ஓட்டத்திற்கு ஏற்ப, பல வண்ண டிசைன்களுடன் கூடிய பாலி பேக்குகளில் விற்பனை தொடங்கியதில் முதன்மை பெறுவது இவர்கள் நிறுவனமே என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனை உழைப்பு, சாதனை, உயர்வில் திரு. ராவ் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து செயலாற்றுபவர், இவரது புதல்வரும் தொழிலகத்தின் சேர்மன்-நிர்வாக இயக்குநருமான திரு. ஜி.வி.எஸ்.எல் காந்தா ராவ் அவர்கள்.


திரு. காந்தா ராவ் தந்தையை மிஞ்சிய தனயராகச் செயலாற்றுகிறார். இப்போது 'விராட் கிரேன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்' என்ற அமைப்பில் சாதா பான் மசாலா, குட்கா, பழ மசாலா, சுபாரி வகை உற்பத்தி தொடங்கி மார்க்கெட் செய்ய இருக்கிறார்கள். 20 கோடி ரூபாய் திட்டத்தில் உருப்பெறுகிறது இத் தொழிலகம். உள்நாட்டுத் தேவைகளுடன், வெளிநாடுகளிலிருந்தும் இப்போது வந்து குவியத் தொடங்கியிருக்கும் ஆர்டர்களுக்கும் (முக்கியமாக மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து ஆர்டர்கள்) ஈடு செய்து சப்ளை செய்ய உள்ளனர். இதனால் கணிசமான அளவுக்கு அந்நியச் செலாவணியும் நாட்டுக்குக் கிடைக்கும்.

திரு. காந்தாராவ் உற்சாகத்துடன் கூறுகிறார் : "விராட் கிரேன் தொழிலகம்' இன்னும் 3 வருடத்தில் 150 கோடி ரூபாய்க்கு வர்த்தகத்தைப் பெருக்கும் விதத்தில் திட்டங்களைச் செயலாற்றப் போகிறோம்". தந்தையின் ஈடுபாடு தனயனிடம் மிகப் பொருத்தமாகவே உள்ளது. இவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பது நன்றாகவே புலனாகிறது.

'கிரேன்' உயரத்துக்கு இட்டுச் செல்லும் சாதனமாகும். 'உயர உயர' என்பது இலக்கு. இதனால் உலகெங்கிலுமுள்ள தாம்பூலத்திற்குக் கொண்டாட்டம்தான்!



ஜி.வி.எஸ்.எல். காந்தா ராவ்



துர்கா தேவி சரணம்

புவனேச்வரிதாசன்

டெல்லியில் கிரேட்டர் கைலாஷ் என்ற பகுதி. பணக்காரர்கள் மட்டுமே இருக்கக் கூடிய இடம். பல லட்சக் கணக்கில் பணம் இருந்தால்தான் இந்த இடத்தில் பங்களா கட்டிக்கொண்டிருக்க முடியும். குறைந்தது மூன்று கார்களாவது வைத்துக் கொண்டிருப்பார்கள். மிகவும் வசதியான இடம் என்று சொல்லுவார்களே அதுபோல இதுவும் ஓர் இடம் என்று சொல்லலாம்.

இப்பகுதியில் சகல விதமான வசதிகளோடு வசிப்பவர் ஹாபெட் என்ற பஞ்சாபிக்காரர். இவரது மனைவி ஊர்மிளோடும், ஒரே ஒரு செல்லப் பெண் ரிதீகாவுடன் நிறைந்த வளமோடு வசித்து வருகிறார். குறை என்பதே கிடையாது. எதுவும் தங்களிடம் இல்லை என்ற அளவிற்குச் செல்வம் நிறைய அமையப் பெற்று வாழ்ந்து வருகிறார்.

திரு ஹாபெட்டும் ஊர்மிளும் கடவுள் நம்பிக்கை நிறைந்த, பல கோயில்களுக்குத் தான தருமங்கள் வழங்கி அதனால் மனநிம்மதி அடைந்து வாழ்ந்து வரும் சிறந்த தம்பதிகள். ராம பக்தியும் கிருஷ்ண பக்தியும் இயல்பாய் அமைந்திருந்ததால் பிரதி சனிக்கிழமை தோறும் ராம பஜனையும், கிருஷ்ண பஜனையும் மாலை வேளைகளில் மணிக்கணக்கில் மனமுருகி, நெக்குருகப் பாடுவார்கள், சங்கீதம் இசைப்பார்கள். அதனால் கிருஷ்ண பரமாத்மா தம்முன் தோன்றி அருளுவதாய் அவர்களுக்குத் தோன்றும். துளசிமாலையைத் தம்பதிகள் இருவரும் கழுத்திலே போட்டுக் கொண்டு, சந்தனக் கீற்றினை நெற்றியில் இட்டுக் கொண்டு, பக்தி ரசம் ததும்ப கிருஷ்ணனைத் தியானம் செய்து, பகவத் கீதையைப் பாராயணம் செய்வார்கள்.

கிருஷ்ணனின் திருவடி சேவையில் மூழ்கி அதிலேயே திளைத்துவிடுவார்கள். ஆரத்தி மட்டும் அரைமணி நேரத்திற்கு மேல் பாடுவார்கள். ஆரத்தி பாட்டா அது? இல்லை கிருஷ்ணனின் வைகுண்டத்திற்கு அழைத்துச் செல்லும் தேவாம்ருத கானம். பக்தி இசை இங்கே பரவசத்தால் மயிர்கூச்சரியப் பண்ணும்படி செய்யும். தம்பதிகள் இருவரும் இப்படி ஒருங்கே அமைவது கடினம். அதுவும் பக்தி வழிபாடு செய்வது அதைவிடக் கடினம்.

திரு ஹாபெட்டுக்குக் குறை நேர்ந்தது. என்ன குறை? இருதயத்திலா? இல்லை, தலையிலா? கைகால்களிலா? இல்லை, முதுகில் - என்ன வாயிற்று? முதுகில் ஒரு கட்டி. எலுமிச்சம்பழ அளவிற்கு வலது பக்கத்தில். அது என்ன வீக்கமா? இல்லை வேறு ஏதாவது நரம்பு முறுக்கிக் கொண்டதா? எதுவும் தெரியவில்லை. எக்ஸ்ரே எடுத்தாகிவிட்டது. ஸ்கேன் எடுத்தாகிவிட்டது. எதுவும் தெரியவில்லை. எல்லாம் நார்மல்தான். பிறகு என்ன ஹாபெட்டுக்கு? கட்டியை மறைக்க முடியாது. சர்ட் போட்டாலும் சரி, கோட் போட்டாலும் சரி. முதுகில் கட்டியின் தடயம் வெளியில் தெரியும். காரை ஓட்டிக் கொண்டு போகும்போது கார் சீட்டில் சாய்ந்துக் கொண்டு போக முடியாது. இதெல்லாம் போதாதென்று தாங்க முடியாத வலி. பொறுக்க முடியாத வேதனை. சொல்ல முடியாத துக்கம். மல்லாந்து படுக்க முடியாது. எவ்வளவு நேரம்தான் பக்கவாட்டில் படுப்பது? நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்தாலும் நின்றாலும் கட்டியில் நரம்பு இழுப்பதுபோல் தோன்றும். உயிர் போகும் வலி. ஒரு நாளா, இரண்டு நாளா இந்த அவஸ்தை? வேண்டவே வேண்டாம் இந்தத் துக்கம். ஹாபெட்டின் மனைவி மனத்தில் ஆறாத புண் இது.

இந்த வேதன்ன இரண்டு வருடமாக உள்ளது. அறுபது வயதில் இப்படியா? வெளியில் சென்றால் கட்டியை எவ்வளவு மறைத்தாலும் அது தெரியும். எல்லோரும் என்னவென்று கேட்பார்கள். கல்யாணத்திற்கும், வெளிவாசலுக்குச் சென்றாலும் என்ன பதில் சொல்வது? எப்படி விளக்குவது? தெய்வமே கதி. இதற்கு நிவாரணம் ஓரிரு நாளில் தெரிய வந்தது.

டெல்லியில் டிபென்ஸ் காலனியில் திருவல்லிக்கேணி பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகள் பூஜை நடத்தருள எழுந்தருளிய சமயத்தை ஹாபெட்டின் மனைவி ஊர்மிள் அறிந்திருந்தாள். பரமஹம்ஸ ஸ்வாமிகளின் மகிமையையும், யோகமாயா புவனேஸ்வரியின் லீலா மகிமையையும் தெரிந்திருந்தாள். விரைந்துச் சென்று விளக்கினாள். ஸ்வாமிகளிடத்தில் தன் கண்ணான கணவனின் சொல்லொணாத் துயரமான முதுகில் வந்த கட்டியைக் காண்பித்து அழுதே விட்டாள். கணவன் ஆயிற்றே. ஜன்ம பந்தம். அதுவும் விசுவாசமிக்க கணவ



னாயிற்றே. ஊர்மிளின் சோகத்தை ஸ்வாமிகள் உணர்ந்து "பயமே வேண்டாம். துர்க்கையின் திருநீற்றுச் சாம்பல் ஒன்று போதும். கருணா கடாக்ஷி அவள்! அந்தத் திருநீற்று சாம்பலைத் தினமும் ஹாபெட்டின் முதுகில் காலையில் நல்லெண்ணெயில் குழைத்து, "ஓம் துர்காம் தேவிகும் சரணமஹம் ப்ரபத்யே" என்ற மந்திரம் கூறித் தடவிக் கொண்டு வா. மூன்று வாரம் போதும். இருந்த இடம் தெரியாமல் கட்டி மறையும். வேதனை பறந்து போகும்.

"குணமானவுடன் பரத்வாஜ ஆச்ரம யோகமாயா புவனேஸ்வரிக்கு நீ செய்ய வேண்டியது. தங்கத் திருமாங்கல்யம் சாத்த வேண்டும். இதுதான் அம்பிகையின் திருவாக்கு" என்று ஸ்வாமிகள் மந்திரம் ஜபித்து, ஹாபெட்டின் குறை தீர வேண்டிக் கொண்டு துர்க்கையின் திருநீற்றுச் சாம்பலைக் கொடுத்தருளினார்.

ஊர்மிளுக்குப் பக்தியும் நம்பிக்கையும் அதிகம். அருளிய மந்திரத்தை ஜபித்துக் கொண்டே, பஸ்மத்தை நல்லெண்ணெயில் குழைத்துத் தடவிக் கொண்டு வந்தாள். மூன்று வாரம் ஆனது. கட்டி கரைந்தபாடில்லை. வலி நின்றபாடில்லை. நான்காவது வாரமும் தொடர்ந்தாள். ஐந்தாவது வாரத்தில் கொஞ்சம் கொஞ்சமாய்க் கட்டி கரைய ஆரம்பித்தது. வலி இருந்த இடம் தெரியவில்லை. வேதனை யாருக்கு இருந்தது? எங்கு சென்றது இந்த வலி? இது என்ன இந்திர ஜாலமா? மாயமா? புவனேஸ்வரி நடத்திய அருளாடல், அம்பிகையின் கருணை வீச்சு ஊர்மிளின் பக்திக்குக் கிடைத்த பரிசு.

சித்ரா பௌர்ணமி நினைவுக்கு வந்தது. ஐந்து பவுனில் திருமாங்கல்யத்தைச் சாற்றினாள். இல்லை இல்லை தன்னையே திருமாங்கல்யமாய் அர்ப்பணித்தாள். கண்ணீரில் ஸ்வாமிகளின் பாதத்தில் நன்றியைத் தெரிவித்தாள். ஸ்வாமிகளின் திருவுருவப் படத்தைத் தொழாமல் எங்கும் வெளியில் செல்வதில்லை. ஹாபெட்டின் காரில் புவனேஸ்வரி ஸ்வாமிகளின் படம் தொங்கிக் கொண்டிருக்கிறது. ஹாபெட்டின் இதயத்தில் ஸ்வாமிகளின் திருமுக மண்டலம் நிழலாடிக் கொண்டிருக்கிறது.

அதிசயம்... ஆனால் உண்மை!

கண்ணனுக்குக் காது வலி. எங்கெங்கோ போய் என்னென்னவோ சிகிச்சை செய்தும் குணமாகவில்லை.

அருளானந்த சாமி என்று ஒருவர். சித்த வைத்திய சிரோன்மணி.

அவர் சொன்னார், குற்றாலத்தில் செண்பகாதேவிக் குளத்துப் பக்கம் இருக்கும் கர்ணாமிர்தக் கொடியின் சாற்றைக் காதில் பிழிந்தால் காதின் எந்த நோயும் தீர்ந்து விடும் என்று.

ஒரு நிபந்தனை. அந்தக் கொடியின் சாறு பிழிந்தவுடனே சுடவைத்துப் பின் ஆறவைத்து வெது வெதுப்பாக இருக்கும்போதே காதில் விடவேண்டும்.

ராதாகிருஷ்ணனையும் சுரேஷ் பாபுவையும் துணைக்கு அழைத்துக் கொண்டு ஒரு நாள் புலர் காலைப் பொழுதில் மலை ஏறினான் கண்ணன்.

ராதாகிருஷ்ணன் சில தாள்களை உடன் கொண்டுவர, சுரேஷ்பாபு ஸ்பிரிட் விளக்கு, பரிசோதனைக் குழாய், தீப்பெட்டி எல்லாவற்றையும் எடுத்துவந்தான்.

கர்ணாமிர்தக் கொடி எப்படி இருக்கும் என்று அருளானந்தர் சொல்லியிருந்ததால் செண்பகாதேவிக் குளத்து வடகரையில் அந்தக் கொடியை எளிதாகக் கண்டு பிடித்துவிட்டார்கள்.

அவசர அவசரமாக ஒரு பெரு மரத்தின் அடியில் ஸ்பிரிட் விளக்கைப் பற்ற வைத்துப் பரிசோதனைக் குழாயில் சாற்றை விட்டு அந்த விளக்கு ஜ்வாலையில் காட்ட, சூடேறிய வேகத்தில் சாறு பொங்கி வழிய பரிசோதனைக் குழாயைக் கீழே விட்டுவிட்டான் சுரேஷ்பாபு.

அது ஒரு கல்லில் பட்டுச் சில்லுச் சில்லாக உடைந்து விட்டது.

கண்ணனுக்கு மிக வேதனையாகிவிட்டது.

இவ்வளவு கஷ்டப்பட்டு மலைக்கு வந்து கொடியைக் கண்டுபிடித்துச் சாறும் பிழிந்து கடைசியில் வெண்ணெய் திரளும்போது தாழி உடைந்த கதையாக – சாற்றைக் காயச்சும்போது டெஸ்ட் டியூப் உடைந்துவிட்டதே!

மறுபடி கீழே போய் வேறொரு சோதனைக் குழாய் எடுத்துவந்து – அது 'இன்றைக்குள் நடக்கக் கூடியது அல்ல... என்று முடிவுக்கு வந்தான் கண்ணன்.

ராதாகிருஷ்ணன் சிரித்தான்.

தன் கையில் இருந்த தாளில் மைக் கூடுபோலச் செய்தான்.

அதில் புதிதாக கர்ணமிர்தக் கொடியின் சாறு பிழியச் சொன்னான்.



"என்ன செய்யப் போகிறாய்?" சுரேஷ் கேட்டான்.

"இந்தக் காகிதக் கூடில் சாற்றைச் சுடவைக்கப் போகிறேன்" என்றான் ராதா.

"பைத்தியமா உனக்கு? காகிதக் கூட்டிலாவது சாற்றைச் சுட வைப்பதாவது? இதைவிட உள்ளங் கையில் வைத்துச் சுடவைக்கலாம்" என்றான் சுரேஷ்.

"ஏன் பாறைக் குழியில் சாறு ஊற்றி சுற்றிலும் விறகு போட்டுச் சூடாக்கினால் பாறை சூடாகி

கணக்கு வேடிக்கை 98765432 1

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 – இதில் 8ஐ வெளியே எடுத்து விடவும்.

மீதி 1, 2, 3, 4, 5, 6, 7, 9.

வெளியே எடுத்த 8ஐக் கொண்டு இந்த 1, 2345679 ஐப் பெருக்கவும். விடையைப் பாருங்கள்.

12345679 X8=98765432 என்று வரும். வேடிக்கையாக இல்லை!

காயத்ரி,
காரைக்குடி.



பெரியோர் பொன்மொழிகள்

தங்கள் குழந்தைகளுக்கு அதிகமாக செல்வத்தைத் தேடி வைத்து, அவர்களை ஒழுக்கமுள்ளவர்களாகப் பயிற்சி அளிக்காமல் விட்டுவிடுதல், தங்கள் குதிரைகளை உயரமாக வளர்த்து அவைகளைப் பயன் படுத்தாமல் நிறுத்தி வைப்பது போன்றதாகும்.

-- சாக்ரட்டீஸ்

மற்றவர்கள் உனக்கு என்ன செய்யக் கூடாது என்று நினைக்கிறாயோ அதை நீயும் மற்றவர்களுக்குச் செய்யாதே.

-- கன்பூசியஸ்

ஏணியின் உச்சிப்படியை அடைய வேண்டும் என்றால் அதன் கீழ்படியிலிருந்துதான் தொடங்க வேண்டும். வாழ்க்கையிலும் அப்படித்தான்.

-- பித்தகோரஸ்

ஒரு மனிதனின் வாழ்க்கையில் நன்மை செய்தலே உண்மையான இன்பம் அளிக்கும் செயல்.

-- ஸர். பிலிப் சிட்னி

உத்தம குணங்களை உடையவன் எல்லோரையும் உத்தமராகவே கருதுகிறான்.

-- ஸ்காட்

தொகுப்பு : அருப்புக்கோட்டை ஆனந்தி.

சாறும் சூடாகி விடாதா?" என்று கேட்டான் கண்ணன்.

"அதெல்லாம் ஒன்றும் தேவையில்லை. முதலில் இந்தக் காகிதக் கூட்டில் சாறு பிழியுங்கள்" என்று சொல்லிவிட்டு மற்றவர்கள் செய்ய வேண்டும்என்று காத்திராமல் தானே பிழிந்தான் ராதா.

ஸ்பிரிட் விளக்கைப் பற்ற வைத்து அந்தச் சாறு ஊற்றிய காகிதக் கூட்டை மிக ஜாக்கிரதையாகக் கைசுடாமல் பிடித்துக் கொண்டு விளக்கு ஜ்வாலையில் வைக்க அந்தச் சாறு சற்று நேரத்திற்குள் சூடாகிப் பொங்கியது. பொங்கியது கொட்டிவிடும் முன்பே அந்தக் கூட்டைப் பத்திரமாகக் கீழே வைத்து சூடு தணிந்ததும் கண்ணனின் காதில் வார்த்தான் ராதா.

"இது எப்படிச் சாத்தியம்! காகிதம் நெருப்பில் எரியக் கூடியது அல்லவா? அது எப்படி சாற்றைச் சுடவைக்க உதவியது? மந்திரமா?" கண்ணன்கேட்டான்.

"ஆம்" என்றான் ராதா பெருமிதத்தோடு.

"இந்தச் சாற்றை மட்டுந்தான் காகிதக்கூட்டில் காய்ச்சலாமா இல்லை தண்ணீரையுமா?"

"தண்ணீரையும்தான்" என்று சொல்லிக் கொண்டே வேறொரு காகிதக் கூடு செய்து அதில் செண்பகாதேவி நீரை ஊற்றிக் காய்ச்சிக் காட்டினான் ராதா.

சுரேஷுக்கும் கண்ணனுக்கும் ஆச்சரியம் தாங்கவில்லை.

"ப்ளீஸ் ராதா... தாள் எரியாமல் இருக்க என்ன மந்திரம் போட்டாய் என்று எங்களுக்கும் சொல்லேன்" என்று சுரேஷ் கெஞ்ச - ராதா சிரித்துக்கொண்டே, "பொறுமை



இருக்கும் மனத்தை எந்தப் புறச் சூழலும் எரிக்காது. அதே போலத் தான் திரவ பதார்த்தம் இருக்கும் தாளை வெளி நெருப்பு எரித்துக் கருக்காது" என்றான் ராதா.

சுரேஷ்பாபு மீதி இருந்த தாளை விளக்கில் காட்ட, அது திகுதிகு எனப்பற்றி எரிந்தது.

மறுபடி ஒரு கூடு செய்து அதில் தண்ணீரை ஊற்றி ஜ்வாலையில் வைக்க தாள் கூடு எரியாமல் அதிலிருந்த தண்ணீர் மட்டும் கொதித்தது.

கண்ணன் மனத்திற்குள் சொல்லிக் கொண்டான்.

'பொறுமை இருக்கும் மனத்தைப் புறச்சூழல் சுருக்காது. திரவம் தாங்கி நிற்கும் தாளை சாதா நெருப்பு எரிக்காது'.

'சபாஷ்' என்று ஆனந்தக் கூத்தாடினான் கண்ணன்.

மு. பாலசுப்பிரமணி


பின் குறிப்பு

சந்தேகம் கொண்டவர்கள் காகிதக் கூடு செய்து அதில் நீரைவிட்டு விளக்கு ஜ்வாலையில் காட்டிப் பார்க்கவும்.

நீர் சூடாகும் - தாள் எரியாது.

16-8-1992 முதல் 15-9-1992 வரை

உங்கள் ராசி பலன்



கிரக மாறுதல்

26-8-1992 முதல் கன்னி - சுக்கிரன், 30-8-1992 முதல் சிம்ம - புதன், 1-9-1992 முதல் மிதுன - செவ்வாய், 11-9-1992 முதல் கன்னி - குரு, 15-9-1992 முதல் கன்னி - புதன்.

16-8-1992 அன்று கிரக பாதசாரம்:

சூரியன் - மகம் 1, சந்திரன் - பூரட்டாதி 4, செவ்வாய் - ரோகிணி 4, புதன் - பூசம் 3, குரு - உத்திரம் 1, சுக்கிரன் - பூரம் 2, சனி - திருவோணம் 4, ராகு - மூலம் 2, கேது - மிருகசீரிஷம் 4.

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம் முடிய)

5 இல் உள்ள கிரகங்கள் உங்கள் அறிவாற்றலை வெளிப்படுத்துவார்கள். எண்ணங்கள் ஈடேற வழி பிறக்கும். நல்லவர்களின் தொடர்பால் நலம் பெற்று வருவீர்கள். தெய்வப்பணிகளிலும், தருமப்பணி களிலும் ஈடுபாடு உண்டாகும். பொருளாதாரநிலை வளர்ச்சி பெறும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்கள் லாபம் தரும். மனத்திற்கினிய சம்பவங்கள் வாழ்க்கையில் இடம்பெறும். மக்கட் பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெறச் சந்தர்ப்பம் கனிந்துவரும். அதிகாரிகளால் பாராட்டப் பட முடியும். அரசுப்பணியாளர்களுக்கும், அரசியல் வாதிகளுக்கும் செழிப்பான பாதை புலப்படும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் நற்பெயர் பெறுவார்கள். பதவி உயர்வு, ஊதிய உயர்வு, இட மாற்றம் ஆகியவை கிடைக்கப்பெறவும் வாய்ப்புண் டாகும்.

காடு, மலை, வனாந்தரங்களில் பணியாற்று வோர் தங்கள் நோக்கம் ஈடேறப்பெறுவார்கள். சினிமா, சங்கீதம், நாடகம், நாட்டியம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெளிச்ச மான சூழ்நிலை உதயமாகும். இந்நிலை 26 ஆம் தேதி வரை நீடிக்கும். அதன்பிறகு சுக்கிரபலம் குறைவதால் முன்னேற்றத்திற்குத் தடை உண்டாக லாம். வியாபாரிகளுக்கு மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. மாணவர்கள் வெற்றிநடை போடு வார்கள். செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் கூடுவதால் துணிச்சலான காரியங்களில் ஈடுபாடு கூடும். போட்டிப் பந்தயங்களில் வெற்றி பெற வாய்ப்புண்டாகும். இயந்திரப் பணியாளர் களும், இஞ்சினீயர்களும் செழிப்புப் பெறுவார்கள். செப்டம்பர் 11 ஆம் தேதி முதல் குரு 6 ஆமிடம் மாறுவதால் உடனடியாக யாதொரு சங்கடமும் ஏற் பட்டுவிடாது. ஆகஸ்ட் 17,18,23,24,25,26,30 செப்டம்பர் 1,9,11,13,14 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

ரிஷபம் : (கிருத்திகை 2 ஆம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2 ஆம் பாதம் முடிய)

முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் நீங்கள் எதிலும் விழிப்புடன் ஈடுபடுவது அவசியமாகும். அலட்சியப் போக்கைக் கைவிடுவது நல்லது. பேச்சில் நிதானம் தேவை. பிறமொழி, மதக்காரர்களை நம்பி எக்காரியத்திலும் ஈடுபடவேண்டாம். பொருளாதாரநிலை சீராக இராது. வியாபாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகை யாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் நூதனமான திட்டங்களைத் தீட்டி வைத்துக் கொள்ளலாம். செப்டம்பர் மாதத்தில் அத்திட்டங்கள் நிறைவேற வழிபிறக்கும். பயணத்தின் போதும், இயந்திரங் களில் பணியாற்றும்போதும் பாதுகாப்பு அவசியம். அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. நெருங்கிய நண்பர்கள் மூலமாக ஓரிரு நன்மை களைப் பெற வாய்ப்புண்டாகும்.

நிலம், மனை, வீடு, வாகனங்களால் அளவோடு பயன் உண்டாகும். நிறுவன, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சம் காண்பார்கள். அரசுப் பணியாளர்களுக்கு மாமூலான வரவேற்புக்குக் குறைவிராது. 26 ஆம் தேதி முதல் உடல்நலனில் அக்கறை செலுத்துவது அவசியமாகும். 30 ஆம் தேதியிலிருந்து எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் துறை களைச் சேர்ந்தவர்கள் உற்சாகம் கூடப் பெறு வார்கள். மாதம் முழுவதும் செவ்வாயின் சஞ்சாரம்

பாலஜோசியர் வித்வான் வே. லட்சுமணன்

சீராக இல்லாததால் வீண் சண்டை, சச்சரவுகளில் ஈடுபடாமல் இருப்பது அவசியம். குடும்பத்தாரிடம் பக்குவத்துடன் பழகிவந்தால் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகாமல் தப்பலாம். செப்டம்பர் 11 ஆம் தேதி முதல் குருபலம் கூடுவதால் சங்கடங்கள் என்பவை விலகி, தெளிவான சூழ்நிலை உருவாகும். அந்தஸ்தும், மதிப்பும் உயரும். பண நடமாட்டம் சீர்பெறும். ஆகஸ்ட் 17,18,23,24,25,26,30 செப்டம்பர் 1,3,9,11,13,14 தேதிகள் சிறப்பானவை. தென் கிழக்குத்திசை நலம் தரும். சிம்ம ராசிக்காரர்கள் அளவோடு உதவுவார்கள். 1,5,6 எண்கள் ஓரளவு அதிர்ஷ்டமானவை.

மிதுனம் :(மிருகசீரிஷம் 3 ஆம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3 ஆம் பாதம் முடிய)

குரு, சனி, செவ்வாய் ஆகியோரது பலம் திருப்தி கரமாக இல்லாததாலும், ஜன்மத்தில் கேதுவும், 7இல் ராகுவும் சஞ்சரிப்பதாலும் உங்கள் அபி லாஷைகள் ஈடேறக் குறுக்கீடுகளும், தடைகளும் இருந்துவரும். எக்காரியத்திலும் முழுமையான வெற்றியை அடைய முடியாமல் போகும். எதிரி களின் கரம் வலுத்திருக்கும் நேரமிது என்பதால் யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழகாமல் இருப்பது அவசியம். சோர்வுக்கு இடம் தராமல் கடுமையாக உழைத்துப் பாடுபட்டால் ஓரளவு நன்மை பெற முடியும். வீண் சண்டை, சச்சரவு களில் பிரவேசிக்கலாகாது. வழக்கு, வியாஜ்ஜியங் களில் அனுகூலமான போக்கைக் காண்பதரிது. அதிர்ஷ்ட வாய்ப்பை எண்ணிக் கைப்பொருளை வீணாக்க வேண்டாம். பயணத்தின்போது பாது காப்பு அவசியம். இயந்திரப் பணியாளர்களும், இஞ்சினீயர்களும் தங்கள் பொறுப்புணர்ந்து காரியமாற்றுவது நல்லது.

விபத்துக்கு இடமுண்டு என்பதால் எக்காரியத் திலும் நிதானத்துடனும், பொறுமையுடனும் ஈடுபடு வது அவசியமாகும். 2இல் உள்ள புதன் பேச் சாற்றலை வெளிப்படுத்துவார். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் ஓரிரு நன்மைகள் உண்டாகும். சூரிய பலம் கூடியிருப்பதால் எதிர்ப்புகளைச் சமாளிக்கக்கூடிய சக்தி பிறக்கும். நல்ல தகவல் கிடைக்கப்பெறவும் வாய்ப்புண்டு. சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் அளவோடு வளர்ச்சி பெறுவார்கள். 30 ஆம் தேதி வரையிலும் கணிதம், விஞ்ஞானம், வியாபாரம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் சீரான முன்னேற்றம் இருந்துவரும். அதன்பிறகு ஓரிரு பிரச்னைகள் உருவாகும். செப்டம்பர் 11 ஆம் தேதி முதல் செய்தொழிலில் இதுவரையிலும் இருந்து வந்த பிரசனைகள் குறைவடைய ஆரம்பிக்கும். ஆகஸ்ட் 17,18,23,24,25,26,30 செப்டம்பர் 3,5,6,11,13,14 தேதிகள் சிறப்பானவை. கீழ்த்திசை நலம் தரும். கடக, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,5 எண்கள் அதிர்ஷ்டமானவை.



நாட்டிய இளம் தாரகை குமாரி ஆர். மதுமதியின் நடன நிகழ்ச்சி சமீபத்தில் சென்னை மியூசிக் அகாடமி அரங்கில் நடைபெற்று ரசி கர்களின் பாராட்டுதலைப் பெற்றது. குரு கலைமாமணி, நாட்டிய ரத்னா திருமதி. கே.ஜே.சரசா அவர்களிடம் ஆழ்ந்த பயிற்சி பெற்று பத வர்ணங்கள், அடவுகள், கீர்த் தனங்கள் முதலியவற்றைப் பரிமளித்து ஆடினார் மது மதி.

வளரும் கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் பம்பாய் ஷிவாலி' ஆர்ட்ஸ் & கல்சுரல் சொசைட்டியார் குமாரி மது மதியின் நாட்டியத்திற்கு ஏற் பாடு செய்து ஊக்கமளித் திருப்பது குறிப்பிடத்தக்கது.

சுதந்திரத்திற்கு விடுதலை!

பால. இரமணி



வன்முறை
செய்யலாம்...
வரைமுறை
கிடையாது!

கொலை
செய்யலாம்...
தடை
கிடையாது!

கொள்ளை
அடிக்கலாம்...
கேள்வி
கிடையாது!

கற்பும்
அழிக்கலாம்...
கவலை
கிடையாது!

சதிகள்
புரியலாம்...
சட்டம்
தடுக்காது!

சிநேகிதம்
கெடுக்கலாம்...
இடைஞ்சல்
இருக்காது!

இவையெல்லாம்
செய்வதற்கு
இன்றைய பெயர்
சுதந்திரமாம்..!

சுதந்திரப்
போக்குகள்
இப்படிப்போனால்
'விடுதலை' ஒன்றை
விரைந்தே
தருவோம்!

அந்த
விடுதலைதான்
வீடுகள்தோறும்
வெளிச்சம் தரும்!

கடகம் : (புனர்பூசம் 4 ஆம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)

குரு, செவ்வாய் ஆகியோரது பலம் கூடியிருப்பதால் உங்கள் வாக்குவன்மையும், செயல்திறமையும் வெளிப்படும். எடுத்த காரியங்களில் திறம்பட ஈடுபட்டு வெற்றி வாய்ப்பைப் பெறுவீர்கள். பெரியவர்களும், தனவந்தர்களும் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்குவார்கள். பொருள் வருவாய் கூடும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கும் காரணம் உண்டு. ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்கள் லாபம் தரும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிகழ்ச் சந்தர்ப்பம் கூடிவரும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் பாராட்டுகளுக்கு உரியவர்களாவார்கள். அரசுப் பணிகள் ஆக்கம் தரும். மக்கட்பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெற வாய்ப்புண்டு.

செய்தொழில் வளர்ச்சி பெறும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் முன்னணிக்கு உயருவார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் அளவோடு வளர்ச்சி பெறுவார்கள். வியாபாரம் செழிப்படையும். நூதன முயற்சிகள் கூடிவரும். பயணம் பயன்படும். வெளிநாட்டுத் தொடர்பால் அனுகூலத்திற்கு இடம் உண்டு. 30 ஆம் தேதி முதல் எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சம் காண்பார்கள். நிறுவன., நிர்வாகத் துறையினருக்குச் சுபிட்சம் கூடும். செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் செவ்வாய் விரயம் பெறுவதால் ஓரிரு இடர்ப்பாடுகளைச் சந்திக்க வேண்டிவரும். வீண்செலவுகளோ, பொருள் இழப்போ உண்டாகும். 11 ஆம் தேதி முதல் குரு 3ஆமிடம் மாறினாலும் உடனடியாக யாதொரு சங்கடத்தையும் உண்டுபண்ண மாட்டார். ஆகஸ்ட் 17,18,23,24,25,26,30 செப்டம்பர் 1,3,5,9,13,14 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத்திசை நலம் தரும். சிம்ம, தனுசு, ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,4,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம் முடிய)

செவ்வாயும், சனியும் பலம்பெற்று உலவுவதாலும், சூரியன் ஆட்சி பலம் பெற்றிருப்பதாலும் உங்கள் ஆற்றல் வெளிப்படும். எதிர்ப்புகளைக் கடந்து வாழ்வில் வெற்றி காண்பீர்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல தீர்ப்பை எதிர்பார்க்கலாம். அரசு விவகாரங்கள் நற்பயன் அளிக்கும். அந்தஸ்தும், மதிப்பும், புகழும் கூடும். முக்கியப் பொறுப்புகள் வகிப்பதற்குரிய சூழ்நிலை உதயமாகும். தொழிலாளர்கள், விவசாயிகள் இயந்திரப் பணியாளர்கள், இஞ்சினீயர்கள் ஆகியோர் செழிப்பான பாதையைக் காண்பார்கள். நிலபுலங்களால் அனுகூலம் உண்டாகும். கலைத்துறைகளைச்

சேர்ந்தவர்கள் அளவோடு வளர்ச்சி பெறுவார்கள். பெரிய மனிதர்களது சேர்க்கையால் நலம் பெறுவீர்கள். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சாதனை படைப்பார்கள்.

செந்நிறப்பொருட்கள் லாபம் கொண்டுவரும். பொதுநலப் பணியாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் உற்சாகமான சூழ்நிலை உருவாகும். 30 ஆம் தேதி முதல் வியாபாரிகள் மந்தநிலை விலகி, வெளிச்சமான பாதையைக் காண்பார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்களால் பொருள் வருவாய்க்கு இடமுண்டு. நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் வரவேற்பு கூடப் பெறுவார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும், கணிதத்துறையாளர்களுக்கும், மருத்துவர்களுக்கும் மதிப்பு உயரும். காடு, மலை, வனாந்தரங்களில் தொழிலாற்றுவோர் தங்கள் கோரிக்கைகள் ஈடேறப் பெறுவார்கள். 11 ஆம் தேதி முதல் பொருளாதார நிலையில் செழிப்புண்டாகும். குடும்பத்தில் குதூகலம் கூடும். பேச்சுவன்மை பிரகாசிக்கும். ஆகஸ்ட் 20,22,23,24,26,29,30 செப்டம்பர் 1,3,5,9,11 தேதிகள் சிறப்பானவை. தெற்கும், வடமேற்கும் அனுகூலமான திசைகளாகும். ரிஷப, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 7,8,9 எண்கள் நலம் தரும்.

கன்னி :(உத்திரம் 2 ஆம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2 ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் புதன் 11இல் சஞ்சரிப்பதாலும், 10இல் கேது உலவுவதாலும் உங்கள் தேக ஆரோக்கியம், கௌரவம், அந்தஸ்து, புகழ் யாவும் சீராகவே இருந்துவரும். ஓரிரு எண்ணங்கள் ஈடேறவும் வாய்ப்புண்டாகும். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோர் முன்னேற்றம் காணச் சந்தர்ப்பம் கனிந்துவரும். கடல் வாணிபம் செய்வோர் கூடுதலான ஆதாயம் கிடைக்கப் பெறுவார்கள். திரவப்பொருட்களால் லாபம் பெற முடியும். எதிர்ப்புகள் என்பவை ஓரிரு கோணங்களில் ஏற்படுமானாலும் அவற்றைச் சமாளிக்கும் சக்தியும் உண்டாகும். வியாபாரிகள், கணிதத்துறையாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். கலைத்துறையினருக்கு மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. உத்தியோகஸ்தர்கள் பொறுப்புணர்ந்து காரியமாற்றுவது நல்லது.

30 ஆம் தேதி முதல் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். பொருளாதார நிலையில் தொய்வு உண்டாகும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் கூடுவதால் உங்கள் மனத்தில் துணிவும், தன்னம்பிக்கையும் உதயமாகும். எதிர்ப்புகளைக் கடந்து வாழ்வில் வெற்றிபெறச் சந்தர்ப்பம் கூடிவரும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வருவார்கள். 11 ஆம் தேதி முதல் கணவன் மனைவியரிடையே களிப்புறவு கூடும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் ஏற்றம் காண்பார்கள். மக்கள்நலம் சீர்பெறும். நற்கருமங்களில் ஈடுபடும் வாய்ப்புக் கூடிவரும். உடல்நலம், அந்துஸ்து, கௌரவம் எல்லாம் சீராக இருந்துவரும். ஆகஸ்ட் 17,18,22, 23,24,25,26,30 செப்டம்பர் 1,3,5,9,11,13,14 தேதிகள் சிறப்பானவை. வடக்கும், வடமேற்கும் அனுகூலமான திசைகளாகும். மிதுன, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

துலாம் :(சித்திரை 3 ஆம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3 ஆம் பாதம் முடிய)

குருபலம் கூடியிருப்பதால் உங்கள் அபிலாஷைகள் பூர்த்தி அடைந்து வரும். பொருளாதார நிலையில் உயர்வு உண்டாகும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கும் இடமுண்டு. மக்கள் நலம் சீராக இருந்து வரும். கணவன், மனைவியரிடையே களிப்புறவு கூடும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் ஏற்றம் பெறுவார்கள். நல்ல தகவல் ஒன்று வந்து சேரும். அரசியல்வாதிகளும், அரசுப் பணியாளர்களும் உற்சாகமான சூழ்நிலையைக் காண்பார்கள். உயர்பதவி கிடைக்கப் பெற வாய்ப்புகள் கூடிவரும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் நோக்கம் ஈடேறப் பெறுவார்கள். வியாபாரம் அபிவிருத்தி அடையும். கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள். கடல் வாணிபம் லாபம் தரும்.

4இல் சனியும், 8இல் செவ்வாயும் சஞ்சரிப்பதால் எதிலும் விழிப்புடன் ஈடுபடுவது அவசியம். இல்லையென்றால் விபத்தைச் சந்திக்க நேரும். நிலபுலங்கள் சம்பந்தப்பட்ட இனங்களில் தற்சமயம் ஈடுபடவேண்டாம். பெற்றோர் நலம் கவனிக்கப்பட வேண்டிவரும். அலைச்சலைக் குறைத்துக் கொள்வது அவசியம். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் காரியமாற்றுவது நல்லது. செப்டம்பர் 11 ஆம் தேதி முதல் பொருட்செலவு கூடும். உடன்பிறந்தவர்களால் ஓரிரு தொல்லைகளுக்கு ஆட்பட வேண்டிவரும். பேச்சில் நிதானம் தேவை. போட்டிப் பந்தயங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. சனி, செவ்வாய் பிரீதியான காரியங்களில் கவனம் செலுத்தினால் சங்கடங்கள் என்பவை குறைவடையும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்திவருவது நல்லது. ஆகஸ்ட் 17,18,20,24,25, 26,29,30 செப்டம்பர் 1,3,5,9,11,13,14 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, வடக்குத்திசைகள் அனுகூலமானவை. தனுசு, கடக, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,4,5 எண்கள் அதிர்ஷ்டமானவை.

விருச்சிகம் :(விசாகம் 4 ஆம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

சனியும், சூரியனும் பலம் பெற்று உலவுவதால் உங்கள் ஆற்றல் வெளிப்படும். துணிவோடும், தன்னம்பிக்கையோடும் செயற்கரிய காரியங்களில் ஈடுபட்டு வெற்றி வாய்ப்பைப் பெறுவீர்கள்.

எதிர்ப்புகள் என்பவை கட்டுக்குள் அடங்கியிருக்கும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்குத் தென்படும். அரசுப்பணியாளர்களும், அரசியல் வாதிகளும் செழிப்பான பாதையைக் காண்பார்கள். வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஏற்கெனவே வேலையில் உள்ளவர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். அதிகாரி களால் பாராட்டப்படவும் வாய்ப்புண்டாகும். ரேடியோ, வீடியோ, டி.வி. போன்ற இனங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஆதாயம் கூடுதலாகக் கிடைத்துவரும். வன, வனாந்தரங்களில் தொழில் புரிபவர்கள் தங்கள் கோரிக்கைகள் ஈடேறப் பெறுவார்கள்.

கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. பிறர் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்க்க லாகாது. வேளாவேளைக்கு உணவு அருந்த முடியாமல் போகும். பிறமொழி, மதக்காரர்களை நம்பி மோசம் போகவேண்டாம். 30 ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்கு வெளிச்சம் தெரியவரும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்களால் வருவாய் பெற முடியும். செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது அவசியம். பயணத்தின்போதும், இயந்திரங்களில் பணி யாற்றும்போதும் பாதுகாப்புத் தேவை. எதிலும் நிதானத்துடனும், பொறுமையுடனும் ஈடுபடுவது நல்லது. 11 ஆம் தேதி முதல் குருபலம் கூடுவதால் உங்கள் நீண்ட நாளைய எண்ணங்கள் ஈடேற வழிபிறக்கும். மக்கள்நலம், மனைநலம், சகோதர நலம் யாவும் சீர்பெறும். பொருளாதார நிலையில் வளர்ச்சி காணவும் சந்தர்ப்பம் கனிந்துவரும். ஆகஸ்ட் 17,18,22,26,29,30 செப்டம்பர் 1,3,5,9,11,13,14 தேதிகள் சிறப்பானவை. கிழக்கும், மேற்கும் அனுகூலமான திசைகளாகும். மகர, சிம்ம ராசிக் காரர்கள் உதவுவார்கள். 1,8 எண்கள் அதிர்ஷ்ட மானவை.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம் முடிய)

குரு, செவ்வாய் ஆகியோரது பலம் காரணமாக உங்கள் அறிவுத்திறனும், செயல்திறனும் வெளிப் படும். செயற்கரிய காரியங்களில் ஈடுபட்டு வெற்றி வாய்ப்பைப் பெறுவீர்கள். எதிரிகள் ஓடி ஒளி வார்கள். இயந்திரப் பணியாளர்களும், இஞ்சினீ யர்களும் உற்சாகம்கூடப் பெறுவார்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல தீர்ப்பை எதிர்பார்க்கலாம். பொருளாதார நிலை திருப்திகரமாக இருந்துவரும்.

நல்ல தகவல் வந்துசேரும். புனித மார்க்கங்களில் ஈடுபாடு கூடும். தெய்வப் பிரார்த்தனைகள் ஈடேறும். புனித நதிகளில் நீராடவும், மகான்கள், சாதுக்கள் தரிசனம் கிடைக்கப்பெறவும், தரும காரியங்களில் ஈடுபடவும் வாய்ப்புகள் கனிந்துவரும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள்.

நிறுவன, நிர்வாகத்துறையினருக்கு முன்னேற்ற மான சூழ்நிலை உருவாகும். அதிகாரிகள் சந்திப்பு ஆக்கம் தரும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். வியாபாரம் அபிவிருத்தி அடையும். அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. 2இல் சனி வக்கிர நிலை பெற்று உலவுவதால் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் அவ்வப்போது உண்டாகும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. 7இல் உள்ள கேது கூட்டாளி களிடம் பகைமையை உண்டுபண்ணுவார். கணவன், மனைவியரிடையே சிறுசிறு சலசலப்புகள் அவ்வப் போது உண்டாகும். 26 ஆம் தேதி முதல் கலைத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும், பெண்களுக்கும் முன்னேற்றம் தடைப்படும். செப்டம்பர் 11 ஆம் தேதியிலிருந்து உத்தியோகஸ்தர்கள் பொறுப்புடன் செயலாற்றுவது அவசியம். மக்கள்நலனில் கவனம் தேவைப்படும். ஆகஸ்ட் 17,18,22,23,24,29,30 செப்டம்பர் 1,3,5,9,11,13,14 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு தெற்குத்திசைகள் அனுகூலமானவை. ரிஷப, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,9 எண்கள் நலம் தரும்.

மகரம் : (உத்திராடம் 2 ஆம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2 ஆம் பாதம் முடிய)

கோசாரப்படி கிரகநிலை திருப்திகரமாக இல்லாததால் நீங்கள் எதிலும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து ஈடுபடுவது அவசியமாகும். அலட்சியப்போக்கு என்பது அடியோடு கூடாது. நூதன முயற்சிகளை ஒத்திப்போடுவது அவசிய மாகும். அலைச்சலும், உழைப்பும் கூடும். மனத்தில் சலனம் குடிகொள்ளும். எடுத்த காரியத்தை நிறைவேற்ற முடியாமல் தடைகளும், குறுக்கீடுகளும் உண்டாகும். மறைமுக எதிரிகளால் தொல்லைகளுக்கு ஆட்பட வேண்டிவரும். உடல் ஆரோக்கியம் சீராக இராது. மக்கள் நலம், வாழ்க்கைத் துணைநலம், சகோதர நலம் இவற்றில் கவனம் தேவைப்படும். பொருளாதாரநிலை ஏற்றம், இறக்கம் கொண்டதாக அமையும். எதிர்பாராத செலவுகளோ, வீண் இழப்புகளோகூட

ஓவியர் வினு

"ஸ்ரீகாஞ்சிப் பெரியவாள் ஆசியுடன் கடந்த 17 ஆண்டு களாக ஏராளமாய் அச்சாகிப் பூஜைக்குரிய புனிதப் பட மாய்த் திகழும் 'ஜெயஹனு மான்' வண்ணப்படம் என் னால் வரையப்பட்டது. இப் படத்தைப் பூஜித்துப் பெரும் பயனடைந்த பலரும் நேரில் என்னிடம் வந்து மெய்ச் சிலிர்க்கக் குறிப்பிட்டதை என் வாழ்நாளில் மறக்க முடியாது" என்கிறார் பிரபல ஓவியர் வினு.



70 வயதான இவர் 20 ஆண்டு களாக 'கல்கி' இதழில் ஓவிய ராகப் பணியாற்றியவர். இது வரை 56 தொடர்கதைகளுக் கும், 38 படக்கதைகளுக்கும், நூற்றுக்கணக்கான சிறுகதை களுக்கும், ராஜாஜியின் மகா பாரதம், இராமாயணம் தொடர்களுக்கும், ஸ்ரீகாஞ்சிப் பெரியவாளின் 'தெய்வத்தின் குரல்' நூலுக்கும், வாரியாரின் 'கந்தபுராணம்' நூலுக்கும் ஓவி யங்கள் வரைந்திருக்கிறார்.

தொலைக்காட்சியில் வெளி யான பத்மா சுப்ரமணியத்தின் 'நாட்டிய சாஸ்திரா'விற்கும், கிருஷ்ணஸ்வாமி அசோசியேட் டின் 'ஜெய ஜெய சங்கர'விற் கும் பெயிண்டிங் செய்திருக் கிறார்.

வரலாற்றுச் சிறுகதை களிலும், தொடர்கதைகளிலும் இவரது ஓவியங்கள் தனி முத் திரையைப் பதித்திருக்கின்றன.

திருப்பத்தூர் முனிசிபல் பள்ளியில் இவர் படித்தபோது டாக்டர் மு.வ.தான் இவருக்குத் தமிழாசிரியர்.

பாடநோட்டுப் புத்தகங்களில் பாடம் கேட்காமல் ஓவியங்கள் வரைந்ததற்காக டாக்டர் மு.வ. விடம் தண்டனை பெற்றதும், 20 ஆண்டுகள் கழித்து அகிலன் வீட்டில் டாக்டர் மு.வ. இவரை நினைவு கூர்ந்து பாராட்டி யதும் திருப்பத்தூர் வாழ்க்கை யின் அழியாத சித்திரம் என்று கூறும் இவரது வாரிசு பிள்ளைவழிப் பேரன் சந்துரு. 10 வயதிலேயே வரையும் பாங்கு தன்னையே அசத்து கிறது என்று பெருமிதத்துடன் குறிப்பிடுகிறார் ஓவியர் திலகம் வினு.

ஏற்படும். கைப்பொருளைப் பத்திரமாகப் பாது காத்துக் கொள்வது நல்லது.

சோர்வுக்கு இடம் தராமல் கடுமையாக உழைத்துப் பாடுபடுகிறவர்கள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். தொழிலாளர்களும், உத்தியோகஸ் தர்களும் பொறுப்புடன் காரியமாற்றுவது அவசியம். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஓரளவு நலம் பெறுவார்கள். 30 ஆம் தேதி முதல் வியாபாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கணிதத்துறையாளர்கள், நவீன விஞ்ஞானத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக் கெல்லாம் வெளிச்சம் தெரியவரும். செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் கூடுவதால் எதிர்ப்புகள் என்பவை சமாளிக்கப்படும். இயந்திரப் பணிகள் ஆக்கம் தரும். 11 ஆம் தேதி முதல் குரு பலம் கூடுவதால் இதுவரையிலும் இருந்து வந்த இடையூறுகள் விலகி, முன்னேற்றத்திற்கான பாதை புலப்படும். ஆகஸ்ட் 17,18,22,23,24,25,26,30 செப்டம்பர் 3,9,11,13,14 தேதிகள் சிறப்பானவை. வடமேற்குத் திசை அனுகூலமானது. மிதுன ராசிக் காரர்கள் உதவுவார்கள். 6,7 எண்கள் அளவோடு நலம் தரும்.

கும்பம் :(அவிட்டம் 3 ஆம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3 ஆம் பாதம் முடிய)

குருபலம் காரணமாக உங்கள் அறிவுத்திறமை பிரகாசிக்கும். முக்கியஸ்தர்களது தொடர்பால் நலம் பெற்று வருவீர்கள். பணநடமாட்டம் சீராக இருந்துவரும். கொடுக்கல் - வாங்கல் இனங்கள் ஸ்பெகுலேஷன் துறைகள் ஆகியவற்றால் அளவோடு ஆதாயம் கிடைத்து வரும். அரசு விவகாரங்களில் நல்ல திருப்பத்தை எதிர்பார்க்கலாம். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் மதிப்பும், அந்தஸ்தும் உயரப் பெறுவார்கள். வியாபாரம் அபிவிருத்தி அடையும். பயணத்தால் ஒரு எண்ணம் ஈடேறப் பெறுவீர்கள். பிறமொழி, மதங்களைச் சார்ந்த வர்கள் உதவ முன்வருவார்கள். அலுவலகங் களில் பணிபுரிபவர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை இருந்துவரும். குடும்பநலம், மக்கள்நலம், வாழ்க்கைத் துணைநலம் யாவும் சீராக இருந்து வரும்.

4இல் செவ்வாயும், 12இல் சனியும் சஞ்சரிப்ப தால் எக்காரியத்திலும் பதற்றத்திற்கு இடம் தராமல் பொறுமையோடும், பக்குவத்தோடும் ஈடுபடுவது நல்லது. அதன் மூலம் விபத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம். பயணத்தின்போது பாதுகாப்பு அவசியம். பொறியியல், சட்டம், காவல், இராணு வம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப் புடன் செயல்புரிவது நல்லது. தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர் முன்னேற்றம் காண அரும்பாடுபட வேண்டிவரும். ரியல் எஸ்டேட் இனங்களில் தற்சமயம் ஈடுபடவேண்டாம். கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் அடக்கத்துடன் இருப்பது நல்லது. செப்டம்பர் 11 ஆம் தேதி முதல் சங்கடங்கள் என்பவை மேலும் கூடும். நூதன முயற்சிகளில் பிரவேசிக்கலாகாது. யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழகவேண்டாம். ஆகஸ்ட் 17,18,22,23,24,26 செப்டம்பர் 1,3,5,11,13,14 தேதிகள் சிறப்பானவை. சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார் கள். வடகிழக்கு, தென்மேற்குத் திசைகள் அனுகூல மானவை. 3,4, எண்கள் அதிர்ஷ்டமானவை.

இராணிப்பேட்டையில் பாரி நிறுவனத் தொழிற்சாலை உள் ளது. இங்கு உரங்கள், இரசா யனப் பொருள்கள், மண் பாண்ட ஜாடிகள் செய்யப்படு கின்றன. சுமார் 2000 பேர் இங்கு பணியாற்றுகின்றனர்.

மீனம் :(பூரட்டாதி 4 ஆம் பாதம் முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய)

3இல் செவ்வாயும், 11இல் சனியும் சஞ்சரிப்பதால் உங்கள் பராக்கிரமம் மேலோங்கும். எதிர்ப்பு களைக் கடந்து வாழ்வில் வெற்றிநடை போடுவீர்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். தோட்டங்கள், சுரங்கங்கள், ஆலைகள், தொழிற் சாலைகள் ஆகியவற்றில் பணியாற்றுவோர் சுபிட்சம் காண்பார்கள். கறுப்புநிறப் பொருட்கள் லாபம் தரும். பொதுநலப்பணியாளர்கள் வரவேற்பு கூடப் பெறுவார்கள். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். பிற மொழி, மதங்களைச் சார்ந்தவர்கள் உதவ முன்வருவார்கள். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்த வர்கள் சாதனை படைப்பார்கள். அரசியல்வாதிகள் தங்கள் கொள்கைகளுக்கு வரவேற்பு கூடப் பெறுவார்கள்.

அரசுப்பணியாளர்கள் தங்கள் எண்ணங்கள் ஈடேறப் பெறுவார்கள். பொருள்வருவாய் சீராகவே இருந்துவரும். அவ்வப்போது சிறுசிறு செலவுகளும் உண்டாகும். சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை. சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப் புடன் இருப்பது நல்லது. பெண்களால் தொல்லை கள் உண்டாகும். கணவன், மனைவியரிடையே சிறுசிறு பிரச்னைகள் உருவாகும். 30 ஆம் தேதி முதல் வியாபாரிகள் இருட்டிலிருந்து வெளிச்சத் திற்கு வருவார்கள். செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் அலைச்சல் கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். பயணத்தை ஒத்திப்போடுவது நல்லது. 11 ஆம் தேதி முதல் ராசிநாதன் வலுப் பெறுவதால் உங்கள் சுயபலம் கூடும். எண்ணங்கள் ஈடேறச் சந்தர்ப்பங்கள் கூடிவரும். ஆகஸ்ட் 17,18,22,23,24,25,26,30 செப்டம்பர் 3,5,9,13,14 தேதிகள் சிறப்பானவை. தெற்கும், மேற்கும் அனுகூலமான திசைகளாகும். ரிஷப, சிம்ம, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,4,8,9 எண்கள் அளவோடு நலம் தரும்.

25 ஆண்டுகளுக்கு முன் 'அமுதசுரபி'

அர. பிரஹதாம்பாள்

1967 ஆகஸ்ட் மாதம் அமுதசுரபியின் அட்டை ஓவியம் இல்லறம் என்பது என்ன? என்பதை மிக அழகாகச் சித்திரிக்கும் வண்ணம் வண்ணப் பொலிவுடன் காட்சியளிக்கிறது. 'காதலொருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவினும் கைகொடுத்து' என்ற பாரதியாரின் பாடலடியை நினைவுபடுத்தும் வண்ணம் அமைந்திருக்கிறது.

முன்னுரை - அந்த இதழில் இடம் பெற்றிருக்கும் விருந்துகளின் 'மெனு'வாக அமைந்திருக்கிறது.

சௌந்தரா கைலாசம் அவர்களைப் பற்றிய கட்டுரை ஓர் எழுத்தாளருக்குரிய இலக்கணத்தை எடுத்தியம்புகிறது.

'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற பழமொழிக்கேற்ப 20 ஆண்டுகளில் சுதந்திர பாரதம் வளர்ச்சி அடைந்ததற்கு எடுத்துக்காட்டாகத் துர்க்காபூர் உருக்காலைத் தொழிற்சாலையின் புகைப்படம் இந்தியாவின் தொழில் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் விளக்குவதாய் அமைந்திருக்கிறது.

'பல்லவ திலகம்' என்ற சாண்டில்யனின் தொடர்கதை சிறப்பும், கற்பனை வளமும் நிறைந்ததாக அமைந்திருக்கிறது.

'வாரத்திற்கு ஒரு நூல்' என்ற கட்டுரை இந்தியரின் நூல் படிக்கும் ஆற்றலின் இழி நிலையை விளக்குவதாய் அமைந்திருக்கிறது. ஸ்விஸ் குடிமகன் வருடத்திற்கு 2000 பக்கங்கள் படிக்க இந்தியன் 32 பக்கங்களும், உலக மக்கள் தொகையில் 25% பேர் இந்தியாவில் வாழ அதில் 1% பேரே புத்தகம் படிப்பதாகக் கட்டுரை ஆசிரியர் எழுதியிருப்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

'திரிபுரா ரகசியம்' என்ற கட்டுரையின் மூலம் கௌரி விரதம் கடைப்பிடிக்கும் முறை, அதன் பயன் ஆகியவற்றை ஆசிரியர் திரு. சி.வி.ஸ்வாமி சாஸ்திரிகள் அழகுற விளக்கியுள்ளார்கள். ஆன்ம வளர்ச்சிக்கு இக்கட்டுரை பெரிதும் துணை நிற்கிறது.

'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற உயரிய தத்துவத்தை 'வாழ்க்கைப் போராட்டம்' என்ற சிறுகதை தெளிவாக உணர்த்துகிறது.

இன்றைய நிலையிலும் பெருங்கொடுமையாக விளங்குகிற வரதட்சணைக் கொடுமையை திரு. தேவாபிள்ளை அவர்கள் 'வைர ஊசி' என்ற சிறுகதையின் மூலம் உணர்த்துகிறார்.

புதுவை மண்ணின் அற்புதச் சிறப்பைப் 'புதுவைப் பெரியார்கள்' என்ற கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

'தற்பெருமைக்காகச் செய்யப்படும் எப்பணியும் ஆண்டவனை அண்ட உதவாது. பரிபூரண ஆத்ம சமர்ப்பணம், அதாவது ஒருமித்த ஆன்ம அர்ப்பணமே வழிபாடு' என்ற உயரிய கருத்தை 'ஸ்ரீ அன்னையின் உரையாடல்' என்ற கட்டுரை உணர்த்துகிறது.

குடும்பத் தலைவர் ஒருவரின் சீரிய பண்பை விளக்கும் கதையாக அமைந்திருக்கிறது 'அடிமரம்' என்ற சிறுகதை.

'புதிரில் பூத்த பூ' என்ற சிறுகதையின் மூலம் ஆசிரியர் இளங்கோவன் அவர்கள் சிறிய மனக்கோணத்திலேதான் சிக்கலே ஐக்கியமாகிறது என்ற வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குகிறார்.

குறள் வழி வாழ்க்கை என்ற முறையில் ஆசிரியர் ஈஸ்வரி 'மறுபிறவி' என்ற சிறுகதையைக் கொண்டு செலுத்தியிருப்பது அருமை.

உலகில் பெண்கள் ஆண் துணையின்றி வாழ்ந்து விடுவர். ஆனால் ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேல் ஆண்கள் பெண் துணையின்றி வாழ முடியாது என்ற கருத்தினை விளக்குவதாய் அமைந்திருக்கிறது 'துணை' என்ற சிறுகதை.

'சாலையிலே இரண்டு மரம்' என்ற கதையின் மூலம் நல்ல ஆத்மாக்களே ஆலயம் என்ற கருத்தை உணர்த்துகிறார் கதாசிரியர்.

மொத்தத்தில் இந்த இதழ் வாழ்க்கை நெறிப் பெட்டகமாகவே திகழ்கிறது. ∘∘

நம்பிக்கை

வைரவரிக் கவிதைகள்

மணவாளன் எத்திராசு

வெளிச்சம் என்பது
வேறெங்குமில்லை
விரல்களின் அசைவினில்...
விளக்கை ஏற்று
விழிகளில் வெளிச்சம்
விடிகிற வரைக்கும்!





வானத்து நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்று மாய்க் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன.

அந்தக் கிராமமே உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது.

ஆனால்... ஒரு ஓலைக் குடிசையில் மட்டும் காடா விளக்கு எரிந்துக் கொண்டிருந்தது.

அந்தக் குடிசையில் பல சமயம் வானத்து நட்சத்திரமும், சில சமயம் நிலாப் பெண்ணும் முகாமிடத் துடிதுடித்துக் கொண்டிருக்கும்.

இயற்கையின் சிறுசிறு வெளிச்சமும், காடா விளக்கின் பிரகாசமும் அக்குடிசையிலிருக்கும் அத்தனை பொருள்களையும் ஏழ்மையையும் படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருந்தன.

குடிசையிலிருந்த காலி அலுமினியப் பாத்திரங்களைப் போல அக்கிழவியின் வயிறும் காலியாக இருந்தது.

அவள் வாழ்ந்த வாழ்வு என்ன? இப்பொழுது வாழும் வாழ்வுதான் என்ன?

அவள் மனம் சுமார் நாற்பது வருடங்கள் பின் நோக்கின.

ஆத்துவாம்பாடியில்... மாடிவீடு ஒன்று இருக்கிறது என்றால்... அந்த ஊர் நாட்டாண்மைக்காரர் சுந்தரேச நாய்க்கருடையதுதான் அது...!

அவரது ஒரே மகள் கனிமொழிக்கும், அக்கராபாளையும் கிராமத்தில் வசிக்கும் நிலச்சுவான்தாரர் கண்ணனுக்கும் மூன்று நாட்கள் திருமணம் வெகு விமரிசையாக நடந்து முடிந்தது.

மணம் முடிந்த கனிமொழி கணவன் என்கிற கோட்டையுள் நுழையும்போது... குழந்தை என்கிற ஒன்று அவளுக்கு எதிரியாக வந்து முளைத்தது.

குழந்தை யாரென்று அவள் யோசிப்பதற்குள்... கண்ணனின் தாய், "இந்தக் குழந்தை எம் பொண்ணு வயித்திலே பிறந்ததுதாம்மா... அவ அல்ப ஆயுசில் பொர்ட்டுன்னு போயிட்டா... அதற்குப் பின்னாலே மருமகன் இரண்டாவது கல்யாணம் கட்டிக்கினு போயிட்டான். அவர்களுக்கு இடைஞ்சலாச்சேனு இந்தக் குழந்தையைத் தூக்கி வந்து விட்டேன்" என்றாள்.

முதலிரவுக்கு ஆசையோடு வந்த கனிமொழியின் இதயம்

நமை வெல்ல ஒன்றுமில்லை!

— இலக்கியன்

பேருக்குப் பலமதம் பாரத நாட்டினில்
பேசினும் மக்கள் ஒன்றே – உடல்
கூறுக்குள் நரம்புகள் கூட்டமாய் இருந்தாலும்
கூடுடல் ஒன்றுதானே!



பேசிடும் மொழிபல பேதங்கள் சாதியில்
பிதற்றுதல் பாவமன்றோ! – இதை
ஏசினார் காந்தியும் இயேசுவும் புத்தரும்
ஏன்மக்கள் ஏற்க வில்லை?

நாடெங்கும் நாணயம் நமக்காக ஒன்றுதான்
நாநயம் ஒன்றவில்லை! – திரு
நாடெங்கும் எல்லார்க்கும் நன்மைகள் உண்டெனில்
நமைவெல்ல ஒன்றுமில்லை!

சுக்கு நூறாகியது. இருந்தாலும் பெரியவர்களின் மனத்தைப் புண்படுத்தக் கூடாது என்று அக்குழந்தைக்குக் 'கன்னித் தாயாய்' விளங்கினாள்.

மாடிவீட்டுப் பெண் என்று பெருமை பேசிக்கொண்டிருந்த கனிமொழிக்குப் புகுந்த வீட்டில் சாப்பாடு மட்டுமே கிடைத்தது. ஓகோ... என்று இருக்க முடியவில்லை.

மோகனைத் தன்னையே வார்த்து வளர்த்தாள் கனிமொழி; தன் வயிற்றுப் பெண் பாரதியையும் அதிகம் பாராமல்.

மோகனும் நன்கு படித்துப் பெரியவனானான்.

பாரதியை மோகனுக்குத் திருமணம் செய்து வைத்தாள் கனிமொழி. தன் சொத்தையும் வாரிக் கொடுத்தார் கண்ணன்.

அவனை வளர்த்து ஆளாக்கிய கண்ணன் மாமா, பல வருடங்களாக நோயினால் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தார். அவரைச் சென்று பார்க்கக்கூடக் கூசினான். சென்று பார்த்தால் ஏழ்மையில் உழலும் அவருக்கு ஏதாவது பணம் கொடுக்க வேண்டியிருக்குமே...! பாரதியையும் தாய், தகப்பனிடம் அனுப்பவில்லை அவன்.

கண்ணனுக்கு நோய் முற்றவே கிராமத்து டாக்டர்கள் வேலூருக்கு அழைத்துச் செல்லும்படி அறிவுரை கூறினார்கள்....! கனிமொழியும் தனது கணவரை அழைத்துக் கொண்டு தனது மகள் வீட்டுக்குச் சென்றாள். அங்கு...

"இந்தப் பாழாய்ப் போன மனுஷன் எப்போதும் சொந்தக் காரர்களுக்கு வடித்துக் கொட்டியே ஒட்டாண்டியாகப் போறான். பொம்பளப் பேச்சைக் கேட்காத எந்தக் குடும்பம்தான் உருப்படப் போகிறது" என்று பொறிந்து தள்ளிக் கொண்டிருந்தாள் பாரதி.

அம்மாவும் - அப்பாவும் வந்து உட்கார்ந்ததுமே "இல்லை" என்ற பாட்டு. அவர்கள் எதற்கு வந்து இருப்பார்கள் என்று தெரிந்தே திட்டினாள். வைத்தியச் செலவுக்கே வீட்டையும், கொஞ்சமாய் இருந்த நிலத்தையும் விற்றுவிட்டு இப்போது ஒட்டாண்டியாக இருக்கும் கண்ணன், பெற்ற மகளே இப்படித் தன்னைத் திட்டுவதைப் பார்த்து மனம் பொறுக்காமல் அன்று இரவே தனது கிராமத்திற்குச் சென்று தற்கொலை செய்துகொண்டார்.

நினைவலையில் இருந்து மீண்டு, துக்கம் தாளாமல் விக்கி, விக்கி, அழுதவாறே உறங்கிப் போனாள் கனிமொழிக் கிழவி...!

கணவன் இறந்து சுமார் பத்து வருடங்கள் ஓடிவிட்டன. வளர்ப்பு மகனோ... பெற்ற மகளோ ஒப்புக்குக்கூட 'எங்களோடு வந்துவிடு' என்று கூப்பிடவே இல்லை. கூப்பிட்டால் கிழவி வந்துவிடும் என்ற பயம். எப்போதாவது கிழவியைப் பார்க்க தம்பதிகள் வருவார்கள். பத்து ரூபாயை வீசிவிட்டுப் பறந்துவிடுவார்கள்.

ஒருநாள்... மோகனும் - பாரதியும், "வந்துதான் போயேன் வீட்டுக்கு" என்று அழைத்தார்கள். கிழவி எரிமலையானாள். எத்தனை வருடங்களுக்குத்தான் உள்ளத்தைப் பூட்டி வைப்பது?

"ஏண்டா...! எனது இளமையையும் - இன்பத்தையும் அழித்துக் கொண்டு உன்னை வளர்த்தேன் பார், எனக்கு இதுவும் வேண்டும். இன்னமும்

நம்பிக்கை நட்சத்திரம்

மாருதி காரில் பொருத்தப் படுகின்ற 'ஸ்விட்ச்' மற்றும் டி.வி. எஸ். நிறுவனத்திற்காகக் காரில் பொருத்தப்படும் பிரேக் லைட் ஸ்விட்ச், இந்துஸ்தான் போட்டோ பிலிம் கம்பெனிக்குத் தேவைப்படும் பிளாஸ்டிக் உறுப்புகள் போன்றவற்றைத் தயாரித்து விநியோகிக்கிறது காட்பாடித் தொழிற்பேட்டை யில் இயங்கும் உடல் ஊன முற்றப் பெண்கள் தொழிற் கூடம்.

இத் தொழிற்கூடம் வேலூர் ரவுண்ட் டேபிள் நெம்பர்23 எனும் தொண்டு நிறுவனத்தின் சார்பில் நடத்தப்படுகிறது.

கன்வீனர் ஏ.வி. சண்முகம் உற்சாகத்துடன் இந்த நிறு வனத்தைச் சுற்றிக் காட்டு கிறார்.

நடைபெறும் பணிகள் நம் கண்களைப் பனிக்கச் செய் கின்றன.

ஒரு கண் போன பெண்கள். ஒரு கை போன பெண்கள். ஒரு கால் போன பெண்கள். தொழு நோய் சுகமான பெண்கள். 65 பேர். 99% தரமான மெச்சத் தக்க உண்மையான உழைப்பு.

சமூகம் நிராகரித்த, ஒதுக் கிய, மிதித்த இந்த ஊனமுற்ற பெண்களுக்குத்தான் எவ்வளவு நம்பிக்கை. இவர்களின் சம்பாத்தியத்தில்தான் இவர் களுடைய குடும்பங்களே நடை பெறுகின்றனவாம்.

இந்நிறுவனத்தின் முழு வரு மானமும் 65 பேர்களுக்கே தானாம்.

நிறுவனம் ஒரே ஒரு காசைக் கூடத் தொடுவதில்லையாம்.

மாறாக ஆண்டிற்கொரு முறை 2 புடைவைகள், 2 ரவிக் கைகள், 2 நாட்கள் சுற்றுலா ஆகியவற்றை நிறுவன நிர்வாகி கள் ஏற்கின்றனர்.

பல விருதுகளைப் பெற் றுள்ள இந்த நிறுவனம், அப் பழுக்கற்ற தன் அற்புதத் தொண்டின் மகுடமாக 1992 ஆம் ஆண்டிற்கான குடியரசுத் தலை வரின் சிறப்பு விருதைப் பெற் றுத் திகழ்கிறது.



மார்ச் 15 – 1992இல் குடியரசுத் தலைவரிடம் வேலூர் ரவுண்ட் டேபிள் நெ.23இன் தலைவர் பரிசு பெறுகிறார். (National award to outstanding Employer 1992)

வேண்டும். பெற்ற குழந்தையை விட, வளர்த்த குழந்தைக்குத் தான் பாசம் அதிகம் காட்டும் என்பார்கள். எனக்கு இரண் டுமே இல்லாமல் போய் விட்டன. நீ ஒரு துரோகி, என் முகத்திலே விழிக்காதே போய்விடு...." என்று கத்தி னாள்.

அந்த நேரத்தில் "அம்மா" என்றாள் பாரதி...

"வா..ம்..மா... பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்ற பழமொழிக்கு உயிர் கொடுத்து விட்டாய் அல்லவா? போடி போ... எம் முகத்திலே முழிக்காமே போ..." என்று வெறிபிடித்தவள் போல் கத்தி னாள்... கதறினாள்... துடி துடித்தாள்... ஒரேயடியாய்த் துவண்டே போனாள்.



புரட்சிக் கவிஞன் கம்பன்

எஸ்.என்.குப்புசாமி

கம்பன் ஓர் உலக மகா கவி. தமிழ் இலக்கிய உலகிலே கவிச் சக்கரவர்த்தி என்றால், அது கம்பன் ஒருவனையே குறிக்கும். ஒட்டக்கூத்தருக்கும், பரணி பாடிய புகழேந்திப் புலவருக்கும், கவிச் சக்கரவர்த்தி என்ற சிறப்புப் பெயர் இல்லை. கம்பனுக்கு கவிச் சக்கரவர்த்தி என்கிற சிறப்புப் பட்டத்தை மக்கள் தாமாகவே அவனது புலமையைக் கருதி, அவனது காப்பியத்தின் பெருமையை உணர்ந்து, அவனது கவிதா சிறப்பின் மேன்மையை அனுபவித்து, அளித்து கௌரவிக்கப் பட்டதாகவே வரலாறு உணர்த்துகிறது. கம்பனை யாரும் இதுவரை புரட்சிக் கவிஞன் என்று சிறப்பித்து அழைத்ததாக, அறிவித்ததாக சான்றுகள் இல்லை.

கம்பனின் காப்பியம் ஒரு காலம் கடந்த காப்பியமாகும். அது தமிழ் உள்ளளவும், கடல் உள்ளளவும், பார் உள்ளளவும் நிலைத்து நிற்கும்.

ஒரு காலத்தில் கம்ப ராமாயணம், பக்தி இலக்கியமாக அது பூசைக்குரிய நூலாக மட்டிலும் இருந்தது. கர்லப்போக்கில் அதற்கு எதிர்ப்பு கிளம்பிய காலகட்டத்தில் அந்தக் காப்பியத்தின் சிறப்பு முதன்மையான நூல் அது என்பதைக் கற்றவர் உலகத்திற்கு உணர்த்திற்று.

கம்பனின் புரட்சிகரமான சிந்தனைகளை ஆழ்ந்து, ஆய்ந்து அதன் அடிப்படையைப் பின்னணியை நன்கு தெரிந்து கொண்டவரான பாரதி, தமிழ்ப் புலவர்களின் வரிசையில் கம்பனை முதலில் வைத்துச் சிறப்பித்து அறிவிக்கவும் செய்தான் என்பதே உண்மை. புரட்சி என்பதாவது என்ன? காலம் காலமாக நின்று நிலவும் ஒரு சிந்தனைக்கு, வழிமுறைக்கு, படிக்காத வழக்கத்திற்கு, நெறிமுறைக்கு முற்றிலும் மாறுபட்ட புதியதோர் விளக்கத்தின் அடிப்படையில் விளைந்த புதிய சிந்தையின் வெளிப்பாடேயாகும். அந்த வகையில் கம்பராமாயணத்தில் அப்படி என்னதான் புரட்சியாகக் கருத்துகளை கம்பன் படைத்துள்ளான் என சிந்திப்பது நல்ல தெளிவைத் தரும். கம்பன் தன் காப்பியத்தில் அறிவித்துள்ள இலட்சிய நாட்டின் அடிப்படை நிறைவுகள், அவன் வாழ்ந்த காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் உணரப் பெற்று அரசியல் கோட்பாடுகளாகவும் புரட்சி சிந்தனைகளாகவும் மிளிர்கின்றன. அவனது இந்த தீர்க்க உணர்வு, தரிசனம், நம்மை மலைக்க வைக்கிறது. பிற காப்பியக் கர்த்தாக்களினின்றும் இது ஒன்றே அவனைத் தனிமைப்படுத்தி, இனம் காட்டி, மேம்பாடு அடையச் செய்கிறது. இதுவே அவன் பாரதிக்கும் பாரதி தாசனுக்கும் முற்பட்ட புரட்சிக் கவிஞனாக புதுமைச் சிந்தனையாளனாக வெளிக்கொணர்கிறது.

கவிச்சக்கரவர்த்தி கம்பனும், அவனது புரட்சிகரமான சிந்தனைகளின் விளைவாக, ஆதித்த சோழன் காலத்தில் கி.பி. 9ஆம் நூற்றாண்டிலேயே, தான் கனவு கண்ட இலட்சிய அரசு பற்றிய கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளான். தான் கனவு காணும் இலட்சிய நாட்டில் அச்சமின்மை, பேச்சுரிமை, சமத்துவ உரிமை, மத வழிப்பாட்டு உரிமை, யாவர்க்கும் பொதுவான சொத்துரிமை, பெண்களுக்கும் கல்வியறிவு மேன்மை இவை பற்றியெல்லாம் குறிப்பிடுகிறான்.

மேலும் தன் இலட்சிய நாட்டில் எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தி இருந்தனர் என்றும் எல்லோரும் கல்வியறிவு உடையவர்களாய் இருந்தனர் என்றும் அங்கே பொருள் இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை என்றும் கொள்வார் இல்லை கொடுப்பவர் இன்மையால் என்றும், பெண்கள் அவர்கள் இயல்புக்கு ஏற்ற கல்வியும் பொருந்திய செல்வமும் பெற்றிருந்தனர் என்றும் குறிப்பிடுவதோடு, பிறப்பால், செல்வத்தால் யாரும் ஒருவருக்கொருவர் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று பேசப்படும் இழி நிலையும் இல்லை என்றும் காட்டுகிறான்.

கி.மு. 4ஆம் நூற்றாண்டில், அறிஞர் பிளாட்டோ விவரித்த இலட்சிய அரசு, அவனைத் தொடர்ந்து அரிஸ்டாடில்,

இமானுவேல், கால்ட் ஹெக்கல், பிராட்லே போன்றவர்கள் வெளிப்படுத்திய இலட்சிய அரசு, 16ஆம் நூற்றாண்டில் சர் தாமஸ் மூர் – உட்டோபியா என்று விவரித்துக் கூறிய இலட்சிய அரசு சிந்தனைகளுக்குக் கொஞ்சமும் குறையாத – வளமுள்ள கருத்துகளாகக் கம்பன் தன் கற்பனையில் உதித்த இலட்சிய நாட்டில் 9ஆம் நூற்றாண்டில் படைத்துக் காட்டியிருப்பதைக் காணும் போது உண்மையில் இவன்தான் புரட்சிக் கவிஞர்களுக்கெல்லாம் ஒரு முன்னோடி என்று அடித்து ஆணித்தரமாகப் பிரகடனப்படுத்தலாம் அன்றோ!

கம்பன் தன் காலத்தில் சோழ மன்னர்கள் அடிக்கடி போரிட்டு மாள்வதையும் அதன் பின்விளைவுகளையும் நேரில் கண்டவன். அதனால்தான் 'யாரொடும் பகை கொள்ளலன் எனின், போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது' என்று பிரகடனப் படுத்துவதைக் காண்கிறோம்.

முடியாட்சி காலத்திலேயே – குடியாட்சி பற்றி அறியாத நாளில் மக்கள் யாவரும் மன்னர் என்பதாகவும் படைத்திருப்பதைக் காண்கிறோம்.

பண்டையத் தமிழர் சமுதாயத்திலே, பலதார மணம் வேரோடியிருந்தது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற நல்லறம் தமிழ் நாட்டில் வளர வேண்டும், நிலவ வேண்டும் எனக் கருதியவன் கம்பன். 'காதலர் இருவர் கருத்து ஒருமித்த ஆதரவு பட்டதே இன்பம்' என்பதின்படி வாழ வேண்டும் என்பது அவர் விருப்பம். அதற்காகவே – மூல நூலினின்றும் மாற்றி – 'இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்' என்று தன் காப்பிய நாயகன் உணர்த்தியதாகப் பாடுகிறான். இதைப் படித்து மகிழ்ந்த பாரதி – ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பு எனப்படுவது பொது. இருவரும் அனுசரிக்க வேண்டும் என்று பின்னால் முரசம் கொட்டியதைப் பார்த்தோம். எனவே கவிச் சக்கரவர்த்தி கம்பன் ஒரு புரட்சிக் கவிஞனே – இன்றைய நாளில் அறிவிக்கப்படும் புரட்சியாளர்களுக்கெல்லாம் மூத்தவன் முப்பாட்டனுக்கும் முப்பாட்டன்.

◆ பீடித்தொழில் இம் மாவட்டத்தில் அதிகம். குடியாத்தத்தில் தயாரிக்கப்படும் பீடிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

◆ இம்மாவட்டத்தில் இரயில்வே சந்திப்புகள் மூன்று. அரக்கோணம் சந்திப்பு, காட்பாடி சந்திப்பு, ஜோலார்பேட்டைச் சந்திப்பு.

◆ பாலாறு, பொன்னையாறு, கொட்டாறு போன்ற ஆறுகளின் குறுக்கே சிறுசிறு அணைகள் கட்டப்பட்டு இம் மாவட்டத்தில் நீர்ப் பாசன வசதி செய்யப்பட்டுள்ளது.


இம்மாவட்டத்தில் 1876 லிருந்து 1878 வரை கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. பலர் இறந்தனர். அங்கங்கே கஞ்சித் தொட்டிகள் பல திறக்கப் பட்டன.

'மணிமாலை'

பி. அக்பர் பாஷா

வேலூர் – பாராளுமன்ற உறுப்பினர்

1970இல் காங்கிரஸ் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட பி.அக்பர் பாஷா



கெமிஸ்ட்ரி பி.எஸ்.சி. லெதர் டெக்னாலஜி பி.எஸ்.சி. பட்டதாரி. 59 வயது நிரம்பியவர்.

காங்கிரஸ் இயக்கத்தில் ஆம்பூரில் தொடங்கி, மாவட்ட, மாநில அளவில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். லயன்ஸ் மற்றும் பல சேவைச் சங்கங்களின் தலைவராயிருந்தவர்.

தற்போதைய மத்திய 'ஹஜ்' குழுவின் உறுப்பினர். தோல் பதனிடும் மற்றும் ஏற்றுமதிச் சங்கத்தின் பொருளர். அக்பர் லெதர்ஸ் லிமிடெடின் மேலாண்மை இயக்குநர். வாக்மேன் ஷூஸ் கம்பெனியின் பங்குதாரர்.

அந்நியச் செலாவணியை அள்ளித்தரும் தோல் வியாபாரியான இவரிடம் இந்தப் பாராளுமன்றத் தொகுதி அதிகம் எதிர் பார்க்கிறது.

அனைத்து மதங்களையும் அதிகம் மதிக்கக்கூடிய ஒரு நல்ல இஸ்லாமியப் பெரியவரான இவர், முதல்முறையாகப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

மணிமாலை



டாக்டர். ஹகீம் எஸ். அக்பர் கவுஸர்

மறுவாழ்வு மைய மருத்துவர்

'மது. போதை அடிமைகளை மீட்பது எப்படி?' என்ற 300 பக்கங்கள் கொண்ட 200 புகைப்பட விளக்கங்களுடன் கூடிய நூலை எழுதி வெளியிட்டுள்ள இந்த டாக்டர், யூனானி, அக்குபஞ்சர், ஹோமியோபதி, காந்த சிகிச்சை, மசாஜ் போன்ற மருத்துவ முறைகளைப் பற்றித் தமிழ், ஆங்கிலம், உருது ஆகிய மொழிகளில் 500 வியாதிகள் சுகமாக 14 மருத்துவ நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

36 வயது நிரம்பிய வாணியம்பாடியில் வாழும் இவர் ஜேஸிஸின் இளம் அறிஞர் பதக்கம் பெற்றவர்.

அரசு அமைத்த சுகாதாரம் மற்றும் போதை மருந்து ஒழிப்பு கமிஷன் தலைவராகவும், மது போன்ற அடிமைகளை யுனானி சிகிச்சை மூலம் மீட்க இந்திய அரசு நியமித்த 8 நிபுணர்களில் ஒருவராகவும் பணியாற்றியவர்.

தமிழக மது அடிமைகளின் மறுவாழ்வுக் குழுவின் பொதுச் செயலாளராய்ப் பணியாற்றும் இவரால் இதுவரை பல்லாயிரக் கணக்கான மது. போதை அடிமைகள் மீட்கப்பட்டுள்ளனர். பரபரப்பாய்ப் பேசப்படும் 'குடிகாரக் கணவனை மீட்பது எப்படி?' என்ற நூலுக்கும் ஆசிரியரான இவருடைய மனைவி ஹகீம் அப்சர் சயீதாவும் ஒரு டாக்டர்!

மு. சீ. நயினா முகம்மது

முதன்மைக் கல்வி அலுவலர்

பன்னிரண்டு ஆண்டுகள் ஆசிரியராகவும், ஐந்தாண்டுகள் மாவட்டக் கல்வி அலுவலராகவும், மதுரை உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவன இயக்குனராகவும் பணியாற்றிய இவர் ஊட்டி, கன்னியாகுமரி, திருநெல்வேலி போன்ற பல இடங்களில் முதன்மைக் கல்வி அலுவலராகப் பணியாற்றிவிட்டு இம்மாவட்டத்திற்குச் சமீபத்தில் மாற்றலாகி வந்திருக்கிறார்.



நபிகள் நாயகத்தின் 'ஹதீஸ்' தினம் படிக்கும் பழக்கம் கொண்ட இவர், இலக்கியப் பேச்சாளர். அனைத்துச் சமயங்களையும் அதிகம் மதிப்பவர்.

அறிவொளி மாவட்டமாய் இம் மாவட்டம் மாற முழு ஒத்துழைப்பைத் தந்துகொண்டிருக்கிறார்.

இராமநாதபுரம் முதுகுளத்தூர் இவரது பிறந்த ஊர். 'எழுத விரும்புகிறேன். எழுத நேரம்தான் கிடைக்கவில்லை' என்று ஆதங்கப் படுகிறார் ஒரு இந்தி நடிகருக்குரிய தோற்றம் கொண்ட இவர்!



டாக்டர் பத்மா சமரசம்

இருபது ஆண்டுகளாய் 'பத்மா மருத்துவமனை'யை நடத்தும் இவர், அரசு மருத்துவமனையில் 5 ஆண்டுகள் பணியாற்றியவர்.

ரோட்டரி இன்னர் வீல் கிளப் தலைவராயிருந்து கிளப்புக்காக 45,000 சேமித்தவர். இதன் மூலம் செல்வி என்ற தாழ்த்தப்பட்ட பெண்மணி பொறியாளராய்ப் பட்டம் பெற்றிருக்கிறார்.

கோட்டை ரோட்டரி சங்கம் 'வேலூரில் சுத்தமான மருத்துவமனை' என்று இவரது மருத்துவமனைக்குச் சிறப்புச் செய்திருக்கிறது.

சமீபத்தில் இவரது மருத்துவமனையில் சாலம்மாள் என்ற ஏழைப் பெண்ணின் வயிற்றிலிருந்து 'ஓவரின் சிஸ்டாக்டமி' என்ற ஆபரேஷன் மூலம் ஐந்தரை கிலோ கட்டி அகற்றப்பட்டதையும், அப்பெண் நலமாயிருப்பதையும் உருக்கமாய்க் குறிப்பிட்ட இந்த டாக்டர், தன் மகன், மகள் இருவரையும் டாக்டர்களாக்கியிருக்கிறார்.

பிஞ்சு மனம்

நாராயிணி கண்ணகி



கோகுல் வழக்கம்போல் இல்லை.

முதுகில் புத்தகப் பையை மாட்டியதும் 'டாட்டா' சொல்ல ஆரம்பித்தான் என்றால், ஸ்கூல் வேனில் ஏறி – கண்டிப்பாக ஜன்னலோரம் – உட்கார்ந்து, வேன் தெரு முனையில் வளைந்து மறையும் வரை 'மம்மி டாட்டா' என்று சொல்லிக் கொண்டே கையசைப்பான்.

ஆனால் இன்று ராதிகா 'டாட்டா' சொல்லிக் கையசைத்தும்கூட கோகுல் கண்டு கொள்ளவே இல்லை.

காலை உணவின் போது, "இட்லி பூ மாதிரி இருக்கு கண்ணா நாலு சாப்பிடணும்" என்றதற்கு, அவனிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. எப்போதுமே கோகுல் இப்படிப் பட்டு ரோஜாச் செடி போல ஆடாமல் அமைதியாக இருந்ததில்லை. ஒன்றுமே பேசாமல் ஒன்றரை இட்லியோடு நிறுத்திக் கொண்டான்.

ராதிகாவிற்குச் சாப்பிடக் கூட மனம் வரவில்லை.

'அவர்கூட அவனை எதுவும் திட்டவில்லையே. ஹோம் வொர்க் பத்தியும், மனப்பாடம் செய்ய வேண்டிய போயட்ரி பத்தியும் தினசரி கேட்கிறவர், இன்னைக்கு எதுவும் கேட்டு மிரட்டலையே... ஏன், இவனுக்கு என்ன ஆச்சு?'

மனம் மகனைப் பற்றியே அலைந்தது. 'கோகுல் ஸ்கூலில் ஏதாவது செய்து...' நினைத்துப் பார்க்கவே கஷ்டமாக இருந்தது. அழுகை வந்தது.

பக்கத்து வீட்டிற்குப் போய் பிரபு வேலை செய்யும் பாங்கிற்குப் போன் செய்தாள், "உடனே லீவ் போட்டுட்டு வாங்க. உடம்பு சரியில்லை" என்று.

அடுத்த கால் மணி நேரத்தில் பிரபு ஆஜரானான்.

கணவன் உள்ளே நுழைந்ததும் அவன் நெஞ்சில் சரிந்து அழுதாள் ராதிகா.

"ஏய், என்ன ஆச்சு?"

"எல்லாம் உங்களாலதான். ராத்திரி லைட்டை அணைக்கலாம்னா கேட்கவே இல்லை. குழந்தை பார்த்திட்டிருப்பான் போலிருக்கு. காலையில இருந்து 'உம்'மென்று இருந்தான். 'டாட்டா டாட்டா'னு கத்தறவன். இன்னைக்கு டாடாவே சொல்லலை. உடனே



அவன் மனசை மாத்தியாகணும். அவனைக் கூட்டிட்டு வாங்க. எக்சிபிஷன் அல்லது ஏரோட்ரோம் போயிட்டு வரலாம்"

"ஏய்... உண்மையைச் சொல்லட்டுமா? ராத்திரி கோகுல் எதுவும் பார்க்கல, நல்லா தூங்கிட்டுத்தான் இருந்தான். அவன் மூட் அவுட்ல இருந்ததற்குக் காரணம் வேற. நேத்து சாயந்தரம் நான் பாங்க்குக்கு வெளியே நின்னுட்டிருந்தேன். அந்த வழியா ஸ்கூல் வேன் போச்சு. கோகுல் என்ன செஞ்சான் தெரியுமா? என்னைப் பார்த்திட்டு வேன்ல இருந்தே கையை வெளியே நீட்டி 'டாட்டா' சொன்னான். பதறிப்போயிட்டேன். இப்படியும் அப்படியும் லாரியும் பஸ்ஸும் போகுது. கை மாட்டி உடைஞ்சா என்ன ஆகறது? ஸ்கூல் வேனை நிறுத்தி முதுகுல ரெண்டு வச்சேன். 'இனிமே டாட்டா சொன்னா பிச்சுடுவேன்'னு பயமுறுத்தினேன். அவ்வளவுதான் ராதி, நீ... நீ... தப்பா நினைச்சி" கலகலவென்று சிரித்து மனைவியை அணைத்தான்.

"ஏன் நீங்க எனக்கு நேத்தே சொல்லல?"

"சம்பள நாள். மூட் தெரியாதா உனக்கு?"

ஏ. ஆண்ட்ரூஸ்

பொதுச் செயலாளர்
தமிழ்நாடு காங்கிரஸ்
சிறுபான்மைப் பிரிவு





பட்டதாரியான இவர் வேலூரிலுள்ள சி.எம்.சி. மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவில் மேற்பார்வையாளராய்ப் பணியாற்றுகிறார். மருத்துவமனைப் பொதுச் சேவை வாரியத்தின் பொதுச் செயலாளர்.

மாவட்டத்தில் ஏழை, எளியவர்களுக்காக மகத்தான வேலை செய்தவர், செய்து வருபவர்.

காமராஜருக்கு இவரிடத்தில் தனிப்பாசம், மதிப்பு இருந்தது. தந்தை பெரியார் இவரையும் இவரது துணைவியாரையும் தன் இல்லத்திற்கு அழைத்து விருந்து அளித்துப் பாராட்டியிருக்கிறார்.

இவரைத் தெரியாத காங்கிரஸ் பெருந்தலைவர்களே இல்லை எனலாம்.

ராஜீவ் படுகொலையின் போது அருகிலேயே இருந்து பொது மருத்துவமனை வரை அவரது உடலைச் சுமந்து சென்றவர்களில் இவரும் ஒருவர்.

'நான் மறைந்து, மண்ணோடு மண்ணாகிப் போயினும் அந்த மண்கூட என் கண்முன்னே கண்ட இந்தக் கோரச் சம்பவத்தை மறக்காது' என்று கண்ணீர் வழியக் கூறுகிறார் இவர்!

கோமளக் கனகதுர்க்கா



டாக்டர்
து. ராஜ்மோகன்ராஜ்.

ஆவியே! என்றன் அம்மையே! பார்வதி!
அழகாய காளீ! சாமுண்டீ!
தேவியே! தேவர்க்கும் அன்னையே! உமையே!
திகம்பரீ! கௌரீ என் றுனையே
கூவியுன் பேர்களே சொல்லுமடி யேன்முனே
குதித்துநீ அருளு கண்டாய்!
பாவியேன் உலகிலே பரமறிந் தாடவே,
கோமளக் கனக துர்க்கா!

காவியுன் கூர்விழிகள்! கடற்பவ ளங்களே
கன்னியே உன்றன் இதழ்கள்!
வாவியுள் நீலமே நேரொக்கும் மேனியே!
வானாட்டுக் கோல மயிலே!
ஆவிபோம் நாளிலே அன்னாய்! உன் பாதமே
அடையவே அருளு கண்டாய்!
கோவியல்தேவியே! கோயில்நா யகியே!
கோமளக் கனக துர்க்கா!

தவத்திரு. கணேச சுவாமிகள்

மணிமாலை



அருள்மிகு சந்தான ஈஸ்வரி கோயிலைத் தன்னுடைய சொந்தச் செலவிலேயே வேலூரிலிருந்து 3 கி.மீ. தூரத்திலுள்ள சேண்பாக்கத்தில் கட்டி முடித்திருக்கிறார் சுவாமிகள். தாமாக முன்வந்து மனமுவந்தளித்த காணிக்கைகளையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

பௌர்ணமிப் பூஜையும், அமாவாசைப் பூஜையும் அமர்க்களமாய் இக்கோயிலில் நிறைவேறுகின்றன. ஏராளமான பக்தர்கள் கூடுகின்றனர். மிகப் பிரபலமான அருள்மிகு சந்தான ஈஸ்வரி தீராத நோய்களைத் தீர்த்து வைக்கிறாள்.

ஆசிரமத்தில் அமர்ந்திருக்கும் சுவாமிகள் "கர்ம வினையைத்தான் மனிதன் அனுபவிக்கிறான். அம்மன் அதற்குக் கருணையைக் கழுவாயாய்த் தருகிறாள்" என்கிறார்.

சுவாமிகளது பேச்சில் "ஆற்றல் சக்தி" எனும் சொல் அடிக்கடி இடம் பெறுகிறது.

எண்ணச்சிறகுகள்

ஒய்வறியாது உழைப்பதிலேதான்
உண்மை இன்பம் இன்பம்!
பாயும் ஆற்றின் வெள்ளப் பெருக்கின்
பம்பல் மகிழ்ச்சி மகிழ்ச்சி!

தீயும் அடடே, செழித்தோங்குவதிலே
செம்மை களிப்புக் களிப்பு!
ஆயிரம் மலர்கள் காற்றில் மணத்தை
அளிக்கும் உவகை! உவகை!



த. கோவேந்தன்

பாவேந்தர் வாழ்புதுவை நகர்அடைந்தேன்
பண்பார்ந்த தோழனுடன் சென்னை மீண்டேன்
நாவேந்தன் நண்பனுரை ஆடலில் நான்
நனைந்திருந்தேன், மண் அரித்து

வேரேந்து மரம்இரண்டு வீழாதாங்கே
வீறுடனே நிற்பதனைக் கண்டதிர்ந்தேன்
"சீரேந்து வாழ்க்கையினுர் செல்வம் எல்லாம்
தீர்ந்தாலும் இப்படித்தான்" என்றான் தோழன்!

இணையற்ற பெருமேதை



கவிரத்ன. நலங்கிள்ளி

சீருற்ற பாரதத்தின் சிறப்புற்ற
பேரொளியாய்த் திகழும் அண்ணல்
பாருற்ற பெருஞ்சீர்த்தி பட்டங்கள்
பலபெற்ற பண்புமிக்கோன்
பேருற்ற கலைஞானம் பேச்சாற்றல்
எழுத்தாற்றல் பெற்ற மேலோன்
ஏருற்ற அரசியலின் இணையற்ற
பெருமேதை அம்பேத் காரே!

அரசியலில் சமுதாயக் கல்விபொரு
ளாதார அமைப்பில் நல்ல
தரமுடைய மேம்பாட்டில் தாழ்ந்தவர்கள்
மேன்மையுறத் தாமுழைத்தே
சிரமணியாய்த் திகழ்ந்திட்ட அம்பேத்கர்
சிங்கத்தின் சிறப்பெல்லா மும்
ஒருநாவால் சொல்லிடஇங் கொருப்படுமோ
அவன்நாமம் ஒளிர்ந்து வாழ்க!



ஜவ்வாது தீபங்கள்


ஜமுனா நீல்

சந்தனக் காவினில்
சங்கொலி முழக்கிடும் சந்ததியாம்!
வனத்துறை என்ற வான்மீது பறந்து,
வட்டமிடும் வல்லூறு யாம்!
கல்லாமை என்ற பாறையைத் தகர்க்க
சிற்றுளி ஏந்திய சிற்பிகள் யாம்!
எல்லோரும் கற்று இன்புற்றிலங்க
எரிந்திடும் ஜவ்வாது தீபங்கள்யாம்!

போரும் பகையும் மாய்க!








சோ. ச. யுவராசன்.

வானும் மண்ணும் கடலும் காற்றும்
வண்ண மலர்க்காவும் – தோழா
நானும் நீயும் வாழ இயற்கை
வடித்த கொடைகளடா!
தேனும் மாவும் தின்னக் கனியும்
செய்வினை தானியமும் – தோழா
ஏனவள் தந்தாள் மானுடம் வாழ
இத்தனை என் செய்தாள்?

விண்ணை மண்ணை அளந்து தெளிந்தோம்
வித்தைகள் பலகற்றோம் – தோழா
உன்னை என்னை அழித்துக் கொள்ள
கருவிகளும் கண்டோம்!
அன்னை வயிற்றுப் பிள்ளைகளாக
அன்பு செயமறந்தோம் – தோழா
இன்னும் பகைமை போர்வேண் டாம்புவி
ஏற்றம் பெற உழைப்போம்!



நான் பாடும் பாட்டு

வே.இரா. சிவஞானவள்ளல்


தமிழ்த்தாயின் திருவடிகள் தலைமீது தாங்கி
தமிழ்மரபின் கவிமரபில் நான் பாடும் பாட்டு



எல்லோர்க்கும் மேலிருந்தே இவ்வுலகை நோக்கி
இளஞ்சிரிப்பு சிரிக்கின்ற இறைவனையும் பாடும்
இல்லாமை கல்லாமை அலைக்கழிக்கும் உலகில்
இல்லையவன் எனக்குமுறும் நெஞ்சினையும் பாடும்

மடம், அச்சம், நாணம், பயிர்ப்(பு) என்கின்ற நான்கும்
மணந்திலங்கித் துலங்கிவரும் மங்கையையும் பாடும்
மடம் அச்சம் தவிர்த்தவளாய் மண்ணுலகம் வியக்க
மேன்மையுறும் புதுமைப்பெண் புகழினையும் பாடும்

அறிவுக்கே விளங்காமல் அன்றுமுதல் நம்மை
ஆட்கொண்டே இயக்கிவரும் பழைமையையும் பாடும்
அறிவேற்கும் அடிப்படையில் இவ்வுலகை இந்நாள்
ஆட்கொள்ளும் அறிவியலாம் புதுமையையும் பாடும்



தொழவைக்கும் சிந்தனைக்கு விருந்தளிக்கும் கருத்தை
தேன்தமிழில் தெளிவாகப் பெரியவர்க்கும் பாடும்
மழலைகளை மகிழ்வித்த கவிமணிபோல் குழந்தை
மனங்கவரும் பொருள்களையும் மழலையர்க்குப் பாடும்

மாலையை...

க. இராமகிருஷ்ணன்



மாண்டஎன் தலைவனுக்கு
மலர்வளையம் வைக்கச்சென்றேன்
என்தொண்டுள்ளம் கண்டு
துவண்டுவிட்ட என்தலைவன்
காரில்வந்த மந்திரிகள்
என் கண்களையே மூடிவிட்டார்கள்
அதைச் சற்றே நீ அகற்று
மக்கள் சஞ்சலத்தைக் காண்பதற்கு!
என்றார்! நான் மாலையை அகற்றும்போது
என்மண்டை உடைந்தது.

மெழுகுவத்தி

ஆதி வெங்கடேசன்



ஓ... மெழுகுவத்தியே – நீ
நெருப்பாற்றைக் கடக்க எண்ணி
நூல்கயிறை உன்தலைமேல் முடியாக்கினாய்!
முடியில் நெருப்பூற்ற – உன்
மடியில் என்றும் பயமில்லை!

உன்னடியில் இருளெனும் ஏழ்மைக் குசேலர்!
உன்னைச் சுற்றிலும் செல்வ ஒளிப்பாரி!
என்னே உன்வாழ்க்கை விந்தை!

நோற்றிருக்கும் நின்வாழ்வு
நொடிப்பொழுதில் மறைந்தாலும்
தோன்றிற் புகழொடு தோன்றுகின்றாய்!
தரணிக்கு நீ ஓர் எடுத்துக்காட்டு!

மூங்கில் காட்டு நிலா!

வசந்தராஜன்



மூங்கில் காட்டுக்குள்ளே மொட்டுநிலா! – நெஞ்சில்
மூண்டது மோகம்; பின் இன்பஉலா!
தாங்கிய வானமோர் தங்கப்புறா – அங்கு
தண்ணொளி கொட்டித் தனித்தநிலா!

காற்று நடமிடும் மூங்கிலிடைத் – தன்னைக்
காட்டி மறைக்குது கன்னிநிலா;
ஆற்றுப் படுகையின் மேனியெல்லாம் – ஒளி
அங்கங்கு தேக்குது அழகுநிலா!

தென்றலும் வாடைக் குளிர்காற்றும் – மலைத்
தேங்கிய சந்தனப் பூங்காற்றும்
இன்றதை வாட்டிட ஏக்கமுற்று; – புது
இன்னலில் காயுது சின்னநிலா!

எத்தனைச் சுமைகள்?

இரவுகள் சுமக்கும்
கனவுச் சுமையே!

இளமைச் சுமக்கும்
காதல் சுமையே!

முதுமைச் சுமக்கும்
நோய்ச் சுமையே!



நெற்றிச் சுமக்கும்
திலகச் சுமையே!

மலைகள் சுமக்கும்
அருவிச் சுமையே!


கவிதைச் சுமக்கும்
உணர்வுச் சுமையே!

அடஅடா... எனக்குமட்டுந்தான்
எத்தனைச் சுமைகள்!

பி. ஜி. திருஇன்ப எழிலன்

கடவுளுக்கு ஒரு கடிதம்

த. அன்பு



- முகமே இல்லாத உனக்கு
முகவரி இல்லாத கடிதம்.

- மண்ணிலிருந்து
மனிதனைப் படைத்தாய்
அதனால்தான் அவன்
அழுக்காகிப் போனானோ?

- மனிதன் முதலில்
இதயங்களை உடைத்தான்
இப்போதோ
கோயிலை உடைக்கிறான்.

மானுட முல்லைகள்

தோ. கமலநாதன்



இன்று
மானுடத்தில் பூத்த
முல்லை மலர்கள்
வரதட்சணைத் தீயிட்டுக்
கொளுத்தப்படுகின்றனவே!
அன்று
ஒரு முல்லைக் கொடிக்கே
தேர் கொடுத்த பாரியே
இன்று
இவை உன் கண்களுக்குத் தெரியவில்லையா?
தெரியாமல் இருக்காது
கொடி காக்கத் தேரைக் கொடுத்துவிட்டு
மலர்களைக் காக்க முடியாமல்
தவிக்கின்றாய் நீ!

கரங்களை உயர்த்து



மா. மாணிக்கம்

கையில் இருக்கிற வரையில்
களாவும்
பலாவைவிடப் பெரியது!

கடந்து போகிற காலத்தைக்
கட்டிப் போடவா முடியும்?
வினாடிகள்தானே என விட்டுவிட்டால்
வருடங்களும் கணக்கில் வராது!

கரங்களை உயர்த்து -
அங்கே -
வானம் இல்லையென்றாலும்
மேகமாவது எட்டும்!

கொஞ்சம் ஒதுங்குங்கள்



பி.ஏ. தாவீது

காற்றுப் படட்டும் வெளிச்சம் வரட்டும்
நாளைய உலகின் நம்பிக்கைப் பயிர்கள்
நலிந்திடாமல் நிமிர்ந்து வளர
ஒளியும் வேண்டும் காற்றும் வேண்டும்
கொஞ்சம் ஒதுங்குங்கள்

மழலைக் குரல்கள் பிஞ்சுக் கரங்கள்
ஆளப் போவது நாளைய உலகை
வளர்க்காவிட்டால் பரவாயில்லை
நசுக்காதிருந்தால் அதுவே போதும்
கொஞ்சம் உணருங்கள்

கொஞ்சம் அமைதி கொஞ்சம் வசதி
அடுத்த தலைமுறைக் கதுதான் தேவை
கொஞ்சம் உதவுங்கள்

கனியே! கற்கண்டே!



மு. கன்னியப்பன்


கனியே! இனிய கற்கண்டே!
கன்னித் தமிழே! நல்லமிழ்தே!
எனக்கிங் கின்பம் உனையன்றி
அளிக்கும் பொருளும் பிறவுண்டோ?

அன்பால் இன்பம் விளையு மென
அன்பின் பயனை உரைத்தாயே!
துன்பம் தொடரா நெறியாகும்
அன்பின் நெறியே என்றாயே!

என்பால் ஆன உடலினிலே
அன்பாம் உயிரை இணைத்தாயே!
அன்பால் என்னை உய்விக்கும்
அன்னைத் தமிழே! வாழியவே!

கோடி இன்பம்

இரா. அண்ணாமலை



பெற்றெடுத்த பிள்ளைக்குப் பேரும் வைத்துப்
பிணிவந்தால் உயிரேபோல் பேணிக்காத்து,
உற்றவர்கள் உடனிருக்கப் பாசத்தோடு
உள்ளன்பு மேலோங்க வளர்க்கும்போது,
மற்றவர்கள் மனம்மாறி நோக்கினாலும்
மங்கையவள் மதிசிறிதும் மாறாதங்கு!
பற்றுடனே பாவைதன் குழந்தை மெல்ல
பயில்மழலை கேட்பதிலே இன்பங்கோடி!

தலைவியவள் தான்பெற்ற மழலைதன்னைத்
தாலாட்டிப் பாலூட்டிச் சிங்காரித்துத்
தலைவனவன் கடமையதை நிறைவுசெய்ய
தளர்நடையில் தன்குழந்தை செல்லக்கண்டு,
கலைபயின்று கல்வியிலே மிகச் சிறந்து
கற்றறிந்த சான்றோனாய் விளங்கக்காணும்
நிலைமையிலே பெற்றவளும் இதயந்தன்னில்
நீங்காது ஈட்டுகின்ற இன்பங்கோடி!



என்று விடியும்?

வாணி





இங்கே
சாலையோரச்சருகுகளுடன் உலர்ந்து
சாணக் கழிவுகளாய் மிதிபடும்
சின்னக் குருத்துகள் -

எச்சில் இலைகளுக்காய்
இரவும் பகலும் போராடினாலும்
மொத்தத்தில்
உண்பதென்னவோ பசியைத்தான் -

சலுகைக்கரங்கள் தொடுவானமென
எட்டியே நிற்பதால்
கட்டிய கந்தலைவிட
இவர் கனவுகள் நைந்தன -


கல்லறை தூரம் வரை
கண்ணீரே துணையாக
முடியாத துயரோடு
முடிகிற இவர் வாழ்வு
என்றுதான் விடியும்?


நம்பிக்கை

ஜி. வில்சன் அமல்ராஜ்



வாடிப் போன மனதின்
வக்கிரங்கள்
இதயத்திற்கு வெளியே
சுழலும் ரத்தம்!
கருதிக் கருதிக் கவலைப் படவா
சுருதி தப்பிய வாழ்க்கை!
வஞ்சம்
கண்ணுக்குத் தெரிவதில்லை
இமைகளுக்குக் கீழே அது இருப்பதால்!
ஆனால்...
நம்பிக்கை இருக்கிறது
நனைந்த வைக்கோலும் எரியுமென்று!





அமுதசுரபியாய்..!

கவிஞர் பி. சி. அசனல்லி



விந்தைகள் படைக்க விரைந்தே எழுவோம்!
சந்தையில் செந்தமிழ்ச் சரக்கைக் குவிப்போம்!
குமையும் பகையைக் குப்புற வீழ்த்தி
அமைதிப் போர்வையை அணிந்திடச் செய்வோம்!
சண்டைகள் இல்லாச் சத்திய உலகைப்
பண்டைத் தமிழராய்ப் படைப்போம் வாரீர்!
பஞ்சம், பட்டினி, பாழ்துயர் நோய்கள்
தஞ்சம் புகுவதைத் தடுத்தே ஒழிப்போம்!
ஆலைகள், கல்விச் சாலைகள், ஆய்வின்
சோலைகள் அமைப்போம்! சுகமதைக் குவிப்போம்!
இத்தரை செழிக்க எடுப்போம் முயற்சி!
தத்துவ நெறியில் முத்திரை பதிப்போம்!
பாரதி சொன்ன "பார்" அதைப் படைப்போம்!
கூர்மதி யாலே குவலயம் வெல்வோம்!
குமுதக் கரங்கள் கொடுத்தே சிவக்க
அமுத சுரபியாய் அளிப்போம் வாரீர்!!

சூரியன்

சி. பழநி



சூரியனே
உனக்கு நெய்யூற்றித்
திரி போடுவது யார்?

எவ்வளவு காலமாய் எரிகிறாயோ
ஏழை வயிறுபோல்!

அவ்வளவு காடுகளா உனக்குள்?
உன்னையே அழித்துக் கொண்டாலும் நீ
அழியமாட்டாய்...

ஓ... தன்னை அழிப்பவர்கள் என்றும்
அழிவதில்லையா உன்னைப் போல்!

எங்கள் ஞானிகள் யோகிகள்
மகான்கள்கூட அழிவதில்லையே
உன்னைப் போல்!

கற்பனை

க. தேன்மொழி



கற்பனையே உன்னைக்
கள் என்றேன்
குடியைக் கெடுப்பதினால் அல்ல
களிப்பூட்டி
மயக்கம் தருவதால்!

காரிகை என்றேன்
காமம் அளிப்பதனால் அல்ல
புதுமை பல
பெற்றுத் தருவதால்!

கதிர் என்றேன்
சுடுவதால் அல்ல
தூய வெண்
அறிவொளி தருவதால்!

உடைமைகள் போதும்

மா. ஆறுமுகம்



நாங்கள் உடைமையாளர்கள்
எங்களுக்கு ஓர் ஏக்கர் நிலமும்
ஓட்டைக் குடிசையும் உண்டு.

காய்ந்தால் எங்கள் பயிறும் வயிறும் காயும்
மழை பொழிந்தாலோ எங்கள் குடிசைக்குள் நீர்பாயும்
பெண்டு பிள்ளைகள் குளிரால் நடுங்கும்.

மண்ணை உழுதுழுது வளைந்த எம்முதுகுகள்
விண்ணை அண்ணாந்து நிமிரப் பயிற்சி பெறும்

வாடியபயிரைக் கண்டபோதெல்லாம் வாடியும்
எங்கள் குழந்தைகளின் வயிற்றுக்கு உணவு தேடியும்
நாங்கள் களைத்துப் போனோம்

இந்த மண்ணையும் விண்ணையும் பார்த்துப் பார்த்து
மனம் சலித்துப் போனோம்!





சோலை. இசைக்குயில்



கனவு -
கண்ணை மூடிக்கொண்டு
காணும் சினிமா.

உள்ள உளைச்சலின்
பைத்தியக்கார விடுதி.

பயத்தின்
பாழடைந்த வீடு.

நிராசைகளின்
வெளிப்பாடு.

இன்றைய தூக்கம்
கனவின்றி
நிர்வாணமாய் இருந்தது.

இந்த நிர்வாணம்
ஆசைகளின் அஸ்தமனமா?
அவஸ்தைகளின் விடுதலையா?

பெண்கள் எழுகவே!

எழுக எழுக எழுகவே - நமது
பெண்கள் கூட்டம் எழுகவே!
பெண்ணுரிமை காப்பதற்கே
புதுமைப் பெண்ணாய் எழுகவே!

நல்ல கணவன் தன்னைத் தேடி எழுகவே!
நல்ல மக்கள் ஈன்றெடுக்க எழுகவே!
நல்லறத்தை நாடுதற்கே எழுகவே!
நல்ல பெண்ணாய் நடந்து காட்ட எழுகவே!


வரதட்சணை வேண்டாமென்று எழுகவே!
வரம் வேண்டி கோயில் செல்ல எழுகவே!
வீர ஜான்சி ராணி யாக எழுகவே!
தீரம் மிக்க திருமகளாய் எழுகவே!

மக்களுக்குச் சேவை செய்ய எழுகவே!
பிறந்த மண்ணுக்கு நன்றி சொல்ல எழுகவே!
அமுதளிக்க அன்பு சுரந்து எழுகவே!
அனைத்து மகளிர் கூட்டம் மகிழ்ந்து எழுகவே!



மயிலாம்பிகை
குமரகுரு







கோப்பரகேசரியின் (இரண்டாம் ஆதித்த கரிகாலன்) கல்வெட்டுகள்

டாக்டர் வே. ஜெயராஜ்

கி.பி. 850இல் முதலாம் ஆதித்த விஜயாலயச் சோழனுடன் சோழர்களின் ஆட்சி தமிழகத்தில் தொடங்கியது. முதலாம் பராந்தகனுக்குப் பின் முதலாம் இராஜராஜன் ஆதிக்கத்திற்கு வருவதற்கு முன் சோழர் வரலாற்றில் ஒரு குழப்பமிருந்தது. மதுரை கொண்ட சுந்தர சோழனின் ஆட்சியின் பிற்பகுதியில் ஓர் உள்நாட்டு துக்கச்சம்பவம் அவனது ஆட்சியை நிலைகுலைய வைத்தது. கி.பி. 963இல் இரண்டாம் ஆதித்த கரிகாலன் சுந்தர சோழனின் இளவரசனாக முடி சூட்டப்பட்டான். அவனது இரண்டாம் ஆட்சியாண்டில் (கி.பி. 965) 'வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி' என்ற பட்டத்தைப் பெற்றான். 'ஆதித்தன்' 'பரகேசரி' என்ற பெயர்கள் இரண்டாம் ஆதித்த கரிகாலனையே குறிக்கின்றன.



தமிழ்நாடு முழுவதிலும் கோப்பரகேசரி இரண்டாம் ஆதித்த கரிகாலனின் கல்வெட்டுகள் இருபதுக்குமேல் உள்ளன. அவை, இரண்டாம் ஆதித்தனின் இரண்டாம் ஆட்சியாண்டிலிருந்து ஐந்தாம் ஆட்சியாண்டு வரையிலானவை. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் சீயமங்கலத்தில் மட்டும் மூன்று தமிழ்க் கல்வெட்டுகள் உள்ளன.

மேலும் உத்திரமேரூர், காஞ்சிபுரம், தக்கோலம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களிலும் உள்ளன. இக்கல்வெட்டுகளில் அறக் கொடைகள், விற்பனை, நீர்ப்பாசனப் பணிகள் போன்றவை மட்டுமே பொதுவாகக் குறிக்கப்பட்டுள்ளமையிலிருந்து போர்களைப் பற்றிய எண்ணம் மக்கள் மனத்திலிருந்து வெகுவாக அகன்றன என்பதை அறியலாம்.

சமீபத்தில் வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் வாணியம்பாடி வட்டத்தில் ஆம்பூரிலிருந்து ஆசனாம்பட்டு செல்லும் மலைப்பாதையில் சுமார் 15கி.மீ. தொலைவில் பனங்காட்டேரி என்ற கிராமத்திற்கு அருகில் டி.சி. ஸ்டாலின் என்பவருக்குச் சொந்தமான நிலத்தில் வீரபாண்டியன் முடித்தலை கொண்ட கோப்பரகேசரி இரண்டாம் ஆதித்த கரிகாலனின் இரண்டு தமிழ்க் கல்வெட்டுகளை வேலூர் அரசு அருங்காட்சியகக் காப்பாட்சியர் டாக்டர் வே. ஜெயராஜ் ஆம்பூர் சுணாங்குப்பத்தைச் சார்ந்த கே.ஆர். இராஜேந்திரன், பேராசிரியர். இரா. இளங்கோவன் ஆகியோர் கொடுத்த தகவலின் பேரில் கண்டுபிடித்துள்ளார். இக் கல்வெட்டுகள் இரண்டும் சுமார் 10 மீட்டர் இடைவெளியில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டு ஆய்வில் எஸ். இராஜவேலு, இரா. பூங்குன்றன் ஆகியோர் உதவி புரிந்தனர்.

இக்கல்வெட்டுகள் இரண்டும் சுமார் 150 செ.மீ. உயரம் 100 செ.மீ. அகலம் 20.15 செ.மீ. கனமுடையவை. இவை பரகேசரி (இரண்டாம் ஆதித்த கரிகாலன்)யின் நான்காம் ஆட்சியாண்டைச் சார்ந்தவை.

முதல் கல்வெட்டு :

இக் கல்வெட்டில் இரு புறமும் தமிழ் எழுத்துகள் பொதிக்கப்பட்டுள்ளன. இடது கையில் வில்லையும் வலது

கையில் அம்பையும் ஏந்தி நிற்கும் வீரனின் உருவம் உள்ளது. மார்பிலும், இடுப்பிலும், காலிலும் மூன்று அம்புகள் தாக்கியுள்ளன. தலையில் தலைப்பாகை, இடுப்பில் கச்சை, தொங்கும் உறைவாள், இரண்டு கால்களுக்கிடையில் ஒரு யானை சித்திரிக்கப் பட்டுள்ளன.

இரண்டாம் கல்வெட்டு :

இக்கல்வெட்டில் இடது கையில் வில்லும், வலது கையில் அம்பும் ஏந்தி நிற்கும் ஒரு வீரனின் உருவம் உள்ளது. தலையில் தலைப்பாகை, இடுப்பில் கச்சையும், உறைவாளும் உள்ளன. கழுத்து, வயிறு மற்றும் கால் பகுதிகளில் மூன்று அம்புகள் தைத்துள்ளன. முன்புறத்தில் ஒரு யானையும், பின்புறம் ஒரு பாத்திரமும் உள்ளன.

இக்கல்வெட்டுகளின்வழி தெரியவரும் செய்தியாவது : ஒரு கடுமையான படை பணச்சுணைக்குள் புகுந்து அதனை அழித்ததைக் குறிப்பிடுகின்றன. போரிட்டு மரணம் அடைந்தவன் பட்டிணத்தான் தோவி எட்மண். இன்னொரு கல்லில் வீரமரணம் எய்தியவனின் பெயர் புலப்படவில்லை. பணச்சுணை என்ற பகுதி கி.பி. 967இல் அழிக்கப்பட்டது புலனாகிறது. பாண்டியன் முடித்தலை கொண்ட கோப்பரகேசரி இரண்டாம் ஆதித்தகரிகாலன் ஆட்சி செய்த நான்காம் ஆட்சியாண்டில் இந்த இரு கல்வெட்டுகளும் நினைவுச் சின்னங்களாக எழுப்பப்பட்டுள்ளன. இவை விரைவில் வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் காட்சியில் வைக்கப்படும். ⁂

'மணிமாலை'



அ. லூயிஸ்
ஆசிரியர்

வடார்க்காடு அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை சம்புவரையர் மாவட்டங்களின் ஆர்.சி.எம். பள்ளிகளின் 70 பள்ளிகள் சார்பில் வெளியாகும் 'செய்தி மலர்' மாத இதழின் பொறுப்பாசிரியர் இவர். வேலூர் தொன் போஸ்கோ நடுநிலைப் பள்ளியில் 20 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றும் இவருக்கு வயது 40.

தமிழ்நாடு சமூகநல சேவைச் சங்கச் செயற்குழு உறுப்பினரான இவர், ஒரு நல்ல சமூகசேவையாளர். பள்ளிநேரம் தவிர்த்து மற்ற நேரங்களில் சமுதாயத் தொண்டில் ஈடுபடுகிறார்.

நாடக நடிகர், மேடைப் பேச்சாளர், நல்ல பாடகர்.

'செய்தி மலர்' இதழில் ஆசிரியர்க்கான அரசு ஆணை, கவிதை, கட்டுரை, சிறுகதை, துணுக்கு ஆகியவற்றை வெளியிடுகிறார்.



ஸ்ரீதரன்
பொது நலத் தொண்டர்

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு சாதாரண ஸ்டேஷனரி ஸ்டோர்ஸை ஆரம்பித்த இவர், இப்போது பன்னிரண்டுக்கும் மேற்பட்ட தொழில்களை நடத்துகிறார்.

பள்ளி மாணவர்கட்குப் பாடப் புத்தகங்கள், ஏழைகளுக்குத் திருமணங்கள், ஆலயங்களுக்குத் திருப்பணிகள் போன்றவற்றை ஏராளமாய் நிறைவேற்றும் அளவுக்கு நல்ல மனம் கொண்டவர்.

வாணியம்பாடி ரோட்டரிச் சங்க உறுப்பினர்.

எளிமை, உழைப்பு, உண்மை, உதவி இவை இவரது வாழ்க்கையில் இவரையும், இவரால் பிறரையும் உயர்த்தியிருக்கிறது.



ஜெ. சமரசம்
வழக்குரைஞர்

வேலூர் பகுத்தறிவாளர்க் கழகத் தலைவரான இவர், அரசு வழக்குரைஞராக ஆறு ஆண்டுகள், அரசு குற்றவியல் பொது வழக்குரைஞராய் இரண்டரை ஆண்டுகள் பணியாற்றியவர். 'கையூட்டுப் பெறாத கண்ணியர்' என்ற பெயர் பெற்றவர்.

1938லேயே என் தாய் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகி சிறை சென்றார் என்கிறார் இவர்.

வாணியம்பாடிக்கு அருகிலுள்ள அம்பலூர் இவருடைய பூர்வீகம். கைலாசம் கமிஷன் அறிக்கையைக் . கொளுத்திச் சிறை சென்றவர்.

வேலூர் தெற்கு ரோட்டரிச் சங்கத்திற்கு ஒரு லட்சம் சேமித்துத் தந்துள்ள இவர், சத்தம் போடாமல் சமூக சேவை செய்பவர். — நீ

உபகாரம்





அறிவுச்சுடர்

கிழக்கு வெளுப்பதற்கு முன்னரே மலை ஏறி, காடுகளிலிருந்து விறகு சுமந்து, தெருக்களில் அலைந்து விற்று, அன்றாடப் பொழுதுகளைக் கழித்துவந்த நாகன், தன் இடுப்பில் மட்டும் சுற்றிக் கொண்டிருந்த அழுக்கேறிய கந்தல் துணியோடும், எண்ணெய் காணாமல் சிவந்தும் காய்ந்தும் காணப்பட்ட செம்பட்டை முடியோடும் தாசில்தார் அலுவலகப் படிகளில் நின்றிருந்தான்.

"யார்யா நீ... என்ன வேணும்?" – தாசில்தார் அலுவலகக் கடைநிலை ஊழியனின் கம்பீரக் குரல்ஒலி நாகனை மிரட்டியது.

"தாசில்தார் அய்யாவைப் பார்க்கணும்".

"எதுக்கு...?"

"அய்யா கிட்டே... ஏற்கனவே மனு கொடுத்திருக்கோம். எங்க சாதி குறிச்சி அத்தாட்சி வேணும்".

'ஓஹோ... கம்யூனிட்டி சர்டிபிகேட்டா... போய்யா... அந்த மரத்துக்குக் கீழே போய் இரு. நான் கூப்பிடறப்போ வா...."

"கால் நோவ ரொம்ப நேரமா நிக்கறேனுங்க. அய்யாவைக் கொஞ்சம் பார்த்துடறேனுங்க..."

"அவர் கூப்பிடாமல் உள்ளே போகக்கூடாதுயா. நான் எதுக்கு இங்கே நிக்கிறேன்?"

சிறிது நேர இடைவெளிக்குப் பின் அவன் வேறு அலுவலக அறைக்குச் செல்ல நேர்ந்தது.

அப்போது நாகன் தாசில்தார் அறைக்குள் விறுவிறு என்று நுழைந்துவிட்டான்.

"அய்யா... கும்பிடறேனுங்க..."

"என்ன விஷயம் சொல்லுங்க!"

குனிந்த தலை நிமிராமல் கேட்டார் தாசில்தார் தேவசகாயம்.

"அய்யா... நாங்க... பச்சினேய மலையோரமா காட்டுப் பக்கம் வசிக்கிறோம். இருளக் குடும்பம்ங்க. எங்க பூர்வீகமே அங்கேதான் சாமி இருந்து வருது. முன்னெல்லாம் எங்கப்பன், பாட்டன் அத்தனை பேரும் பாம்புகளைப் புடிச்சி தோல் உரிச்சி தோல் மண்டிங்கள்ளே வித்துகிட்டிருந்தாங்க. இப்போ... காடேறி விறகு பொறுக்கி, நாட்டுலே வித்துக் கஞ்சி குடிக்கிறோம். கஷ்ட ஜீவனங்க..." தன்னிரு கரங்களால் தன் மார்பகத்தைப் போர்த்திக் கொண்டே வளைந்து கூறினான்.

"இப்போ... உங்களுக்கு என்ன வேணும்?"

"அய்யா... எங்க சாதியிலே என் பையன் ஒருத்தன்தான் எட்டாவது வரை படிச்சிருக்கான். ஒரு புண்ணியவான் மனசு இரங்கி, இவனை எப்படியாவது ரயில் வேலையிலே சேர்த்துடறேன்... அரசாங்கம் மலைஜாதிக்காரருக்கு ரயில்லே வேலை போட்டுத் தர்றாங்கன்னு சொன்னாரு. அதுக்குப் பள்ளிக்கூடத்துலே படிச்ச அத்தாட்சி மாத்திரம் போதாது, மலைஜாதிக்காரன்ற அத்தாட்சியும் வேணும்ன்னு சொல்லிப் போனாரு. அந்த நாள்ளேயிருந்து என் பையன் நடையா நடந்துகிட்டிருக்கான். இன்னும் வேலை முடியலீங்க. ரயில் வேலைக்கு நாள் போயிடுதாம்" என்றான் விழிகளில் நீர் மல்க.

"அய்யா... நீங்க கொடுத்த மனு... மேலிடத்துக்கெல்லாம் போயிட்டு வரணும். நானே நேரில் உங்க இருப்பிடத்துக்கு வருவேன். விசாரிச்சிதான் சான்று தரணும். ஆ... ஒரு விசயம். இது சம்மந்தமா எங்க அபீசுலே யார் கேட்டாலும் ஒரு பைசாகூடத் தர வேண்டாம்" என்று கடுமையாக எச்சரிக்கை செய்தார் தாசில்தார் தேவசகாயம் புன்முறுவலுடன்.

கடும் கோடை வெயிலுக்கு வயிறு நிறையக் குளிர்பானம் குடித்தவன் மாதிரி நிம்மதியாக வெளியில் வந்தான் நாகன்.

தன் அனுமதி பெறாமல் உள்ளே நுழைந்த நாகன்மீது ஏற்பட்ட கடுஞ்சினத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டு, நாகனை அடுத்த அறைக்கு

'மணிமாலை'

கே.என்.கணேசன்

வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்

1985 ஆம் ஆண்டில் நல்லாசிரியர் விருது பெற்ற குமாரபாளையத்தைச் சேர்ந்த இவர், 8 ஆண்டுகள் ஆசிரியராகவும், 27 ஆண்டுகள் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

மார்ச் மாதம் மாவட்டக் கல்வி அலுவலராய்ப் பதவி ஏற்றார். ஓய்வு பெற இன்னும் இரண்டே ஆண்டுகள் உள்ளன.



தேர்ச்சியில் தரம், விழுக்காடு போன்றவற்றை அதிகப்படுத்தும் ஆர்வம் கொண்டிருக்கிறார். மாணவரிடையே 'அறிவு வளர்ச்சிக்கு விருப்பம்' மற்றும் 'விழிப்புணர்ச்சித் தூண்டல்' நிகழப்பாடு படவிருக்கிறார். ஒவ்வொரு ஆசிரியருக்கும் 5 ஆண்டுகளுக்கொரு முறை மறுபயிற்சி அளிக்கப்பட்டால் முதிர்ந்த ஆசிரியர்களிடையே நிலவும் பாடத்திட்டத்தை முழுமையாய்த் தொடர முடியாத நிலையைத் தவிர்க்கலாம் என்கிறார்.

சேலத்திலும், தருமபுரியிலும் பணியாற்றிய ஆசிரியத் தொழில் அனுபவம், வேலூர் மாவட்ட கல்வி அலுவலர் பணிக்கு அதிகம் துணை நிற்கும் என்ற நம்பிக்கைக் கொண்டிருக்கிறார்.

அழைத்துச் சென்று தலைமை எழுத்தருக்கு அறிமுகம் செய்து வைத்தான் கடைநிலை ஊழியன். பின்னர் வெளியில் தனிமையில் சந்தித்தபோது "தொகை கொடுத்தால்தான் வேலை முடியும். இல்லேன்னா நீ அலைய வேண்டியதுதான்" என்றான்.

"அய்யாதான் சொன்னாரு... யார் என்ன கேட்டாலும் தரவேண்டாமுன்னு" - அவன் பதவிசாய் உரைத்தான்.

"அய்யா... சொல்லுவாரு... எழுதி வைக்கிறவங்க, எல்லாத்தையும் முடிச்சி வைக்கிறவங்க இவங்கதான். எல்லாம் முடிச்சி வச்சிட்டா அவர் கையெழுத்து மட்டும்தான் போடுவாரு. என்ன சொல்றே?" என்றான்.

அவனது மிரட்டலும், பயமுறுத்தலும், செய்து முடிப்பேன் என்ற நம்பிக்கையும் நாகனுக்கு உள்ளுக்குள் ஒரு நம்பிக்கையை உண்டு செய்தது.

தான் கடன் வாங்கிக் கொண்டு வந்திருந்த நூறு ரூபாயை அவனிடம் கொடுத்தான்.

சற்று தூரத்தில் இருந்த நாகனின் மகன் நாகனிடம் வந்தான்.

"அப்பா... உங்களோட இப்போ பேசினாரே அந்த மனுசன்தான் முன்னொரு நாள் என்னிடத்திலே அறுபது ரூபாய் வாங்கிகிட்டு சீக்கிரம் முடிச்சிடறேன்னு சொன்னாரு".

இரு வாரங்கள் கழிந்தன. தாசில்தார் பச்சினேய மலைப் பகுதியின் பக்கத்துக் கிராமத்திற்கு வந்து கிராம அதிகாரியிடம் நாகனைப் பற்றி விசாரித்தார்.

செய்தி எட்டியதும் நாகனும் தன் மகனுடன் விரைந்து

ஆசைகள்!

வானத்திலிருந்து
யாரோ போட்ட
பொட்டலங்களைப்
பிரித்துத் தின்ற போதுதான்
ஏற்கனவே
கேள்விப்பட்ட
சோறு பற்றித்
தெரிந்து கொண்டோம்!



காலமெல்லாம்
பருவமெல்லாம்
வெள்ளம்
எங்கள்
குடிசைகளைச் சூழட்டுமே!

இராணிதாசன்

வந்து தாசில்தாரைத் தரிசித்தான். நாகனைப் பற்றிய விவரங்களைக் கிராம அதிகாரியிடம் கேட்டுக் குறித்துக் கொண்டார் தாசில்தார்.

தாசில்தாரின் கேம்ப் கிளார்க் அந்த ஊர் டீக்கடைப் பக்கமாக நாகனை அழைத்துவர கிராமச் சிப்பந்தியை அனுப்பி வைத்தார்.

"எல்லா வேலையும் முடிஞ்சது. நாங்க போனதும் உன் சான்றிதழை அனுப்பிட றோம். இவ்வளவு தூரம் நாங்க வந்தது உன் வேலைக்காகத்தான். ஏதாவது கவனி" என்றான் கேம்ப் கிளார்க். உடனிருந்த சிப்பந்தியும் அதை ஆமோதிப்பதுபோல் பார்த்தான்.

"நமக்காக வந்தவங்க.... நம்ப வேலையை முடிச்சிடுவாங்க" என்று நம்பியவனாய் அந்த உள்ளூர் டீக்கடைக்காரனிடம் ஐம்பது ரூபாய் கடன் பெற்று அவனிடம் கொடுத்தான் நாகன்.

கைக்குத் தொகை எட்டியதும் சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டு, தாசில்தாருக்கு ஒன்றும் தெரியாதபடி "ம்...ம்... அய்யா ஜீப்பிலே உட்கார்ந்துட்டாரு. நான் வர்றேன்" என்று விரைந்தான் கேம்ப் கிளார்க்.

ஜீப் புறப்பட்டுவிட்டது.

'மலைஜாதி சான்றிதழ் சீக்கிரம் வந்துவிடும்' என்ற நம்பிக்கை நாகனுள் பிரகாசித்தது.

"அய்யா... இந்த ஐம்பது ரூபாய்க்கான விறகுச் சுமையைச் சீக்கிரமா கடைக்குப் போட்டுடறேன்" என்று தன் நாணயத்தை டீக்கடைக்காரனிடம் எடுத்துரைத்தான் நாகன்.

◆ வேலூரில் 1887ஆம் ஆண்டில் ஸ்ரீலோக ரஞ்சனி என்ற மாத இதழ் வாணி நிகேதன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு சி.ஜி. அப்பு முதலியார், கோவிந்தராஜ முதலியார் ஆகியோரால் வெளியிடப்பட்டது. ●



வி.ஏ.கோபால்

லாட்டரி மொத்த விற்பனையாளர்

மிகச் சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் விவசாயம், மற்றும் சில்லரை வியாபாரம் செய்தவர். 1969 ஆம் ஆண்டில் லாட்டரி விற்கத் தொடங்கி 1980 ஆம் ஆண்டில் மொத்த விற்பனையாளராய் வளர்ந்தவர். தமிழ்நாடு லாட்டரி மொத்த விற்பனையாளர் பொதுக்குழு உறுப்பினர்.

'பரிசு விழுந்தால் வீட்டுக்கு; இல்லையேல் நாட்டுக்கு' என்ற அறிஞர் அண்ணாவின் வாக்கை அப்படியே ஆதரிக்கிறார் மிகவும் வசதியுடன் வேலூரில் வாழ்க்கை நடத்தும் இவர்!

"லாட்டரி என்பது ஒவ்வொரு மாநிலத்திற்கும் 'கற்பக விருட்சம்' போன்றது! அதனால் அதை யாரும் வெட்டி வீழ்த்த வாய்ப்பில்லை!" என்று அழுத்தம் திருத்தமாய்க் குறிப்பிடுகிறார் இவர்!



கோ. செல்வம்

வானொலி நிலைய முன்னாள் இயக்குநர்

சென்னை வானொலி நிலைய அறிவிப்பாளராய்ச் சேர்ந்த இவர் சென்னை வானொலி நிலைய இயக்குநராய் உயர்ந்து ஓய்வு பெற்றவர்.

ஆனந்த போதினி, குமரி மலர் போன்ற பத்திரிகைகளில் எழுதியவர். வானொலியில் நாடகங்கள், உரைச் சித்திரங்கள் ஏராளமாய் எழுதியவர்.

'வாழப் பிறந்தவர்கள்', 'அரும்பும் வியர்வை' போன்ற நாடகங்கள் இவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தன.

இவருடைய நூல்கள் 14 வெளியாகியுள்ளன.

தமிழ் வளர்ச்சி இயக்கப் பரிசுகள் மற்றும் வி.ஜி.பி. சந்தனம்மாள் பரிசு போன்றவற்றை இவர் பெற்றிருக்கிறார்.

இவருடைய நூல்கள் சென்னை, கேரளா பல்கலைக் கழகங்களில் பாட நூல்களாக வைக்கப்பட்டன.

'இந்து மதம் - இது என்ன சொல்கிறது?' என்ற இவருடைய நூல் பரபரப்பாக விற்பனையாகித் தனித்துவம் நிறைந்த நூலாய்த் திகழ்கிறது.

சிறந்த ஆன்மிக, இலக்கியச் சொற்பொழிவாளரான இவர் ஆர்க்காட்டைச் சேர்ந்தவர்.

● வாலாஜா வட்டம் சேங்காடு கிராமத்தைச் சேர்ந்தவர் ஆக்கூர் அனந்தாச்சாரியார். ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரப் பங்கேற்றவர். சுதேச மித்திரன், இந்து ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியவர்.

ராஜாஜியுடன் சிறைவாசம் அனுபவித்தவர்.

கல்கிக்குப் பின்னர் சென்னை பாரதியார் சங்கத்தைச் சிறப்பாக நடத்தியவர். வாலாஜா தீனபந்து ஆசிரமத்தின் இன்னொரு பிரதான தூண். ●



மு.நடராசன்

தையற் கலைஞர்

வாணியம்பாடிக்கருகிலுள்ள புதூர் கிராமத்துக்காரர் இவர்.

தாழம்பூ, தாயின்மேல் ஆணை, இந்திரா என் செல்வம் மற்றும் தெலுங்கு, மலையாள மொழிப் படங்களில் தையற் கலைஞராய்ப் பணியாற்றியவர்.

51 வயதான இவர், பத்தாண்டுகளாக 'சங்கீத வாணி' பதிப்பகத்தை நடத்தி வருகிறார். 60க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார்.

இவர் எழுதி வெளியிட்டுள்ள 'ஆண்களுக்கு டெய்லரிங்', 'ஆண்களுக்கு நாகரிகத் தையல்', 'இன்றைய புதுப் புதுத் தையல்' போன்ற நூல்கள் நற்பெயரைப் பெற்றுள்ளன.

பயன்பாடு



யாசகன்



ஆசையாய் வளர்த்த நாய்க்குட்டி
நேற்று
செத்துப் போனது.
அப்பா சொன்னார்
ஆழமாய்க் குழிவெட்டிப்
புதைத்து விடு
தென்னை வாங்கி நட்டுவிடலாம்.
நாய்க் குட்டி
செத்துப் போனாலென்ன
தென்னைக்கு உரமாச்சு.

தாள் எழுதுகோலுக்குக் கடிதம் எழுதினால்...

இரா. சோதிவாணன்



நீயோ ஒருவனின் கையாள்;
நானோ உன்றன் அடியாள்.
நீயோ என்மேல் கிறுக்கன்;
நானோ உன் முதலாளி மனக்கண்.

நீ கறுப்பிந்தியன்;
நான் வெள்ளைக்காரி;
நமக்குப் பிறப்பதோ ஆங்கிலோ – இந்தியன்!

ஒற்றைக்கை நட்டுவனார் இயக்க
ஒற்றைக்காலால் நீ
என்மேல் நடனமிடும்போது
எத்தனை முத்திரைகளைப் பதிக்கிறாய்!



லஞ்சமோ லஞ்சம்!

எத்தல் பெர்கா





ஆங்காங்கு நடமாடும் லஞ்சம்!
அத்தனை பேருமே தஞ்சம்!
வாங்காத பேர்களோ கொஞ்சம்!
வாங்கி ஏமாற்றுவோர் எங்கும்!

பட்டங்கள் வாங்கிட லஞ்சம்
படித்தபின் பதவிக்கு லஞ்சம்
பெற்றிடும் பதவியைக் காக்க
பெருகிடும் லஞ்சமோ லஞ்சம்!

பி. இராதாகிருஷ்ணன்

உணவு விடுதி உரிமையாளர்



கேரளத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இவர், வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்கு நேரெதிரில் உள்ள 'விஜயா கேப்' உரிமையாளர்.

முப்பத்தொன்பது வயது நிரம்பிய இவர், கேரள கலா சமிதி, நவபாரத வித்யாலயா போன்றவற்றின் தலைவர். துரிதமாய்த் தயாராகிக் கொண்டிருக்கும் 'ஆதித்யன்' தமிழ்த் திரைப்படப் பங்குதாரர்.

ஆண்டுக்கு இரண்டு தடவைகள் கடந்த பதினேழு ஆண்டுகளாய்த் தொடர்ந்து இரத்த தானம் செய்கிறார்.

'கேரள சத்யா' எனும் கேரள பாணி விருந்து ஒவ்வொரு தமிழ் வருடப் பிறப்பன்றும் சுமார் நூற்று ஐம்பது கண்ணற்றோர்க்கு இவரது தலைமையின் கீழ் வழங்கப்படுகிறது.

அடியெடுத்து வைப்பாள்!

மா. சோதி



'அடியெடுத்து வைப்பாளா வீட்டில்?' என்றாள்
'அடியெடுத்து வைப்பாள் என் பாட்டில்!' என்றேன்
'அடியெடுத்தால் சீர்கெட்டுப் போவாள்' என்றாள்
'அடியெல்லாம் சீர்கொண்டு வருவாள்' என்றேன்.

'அடிவைத்தால் தளைவைத்துப் பிடிப்பேன்' என்றாள்
'அடிமாறித் தளைமாறி வாராள்!' என்றேன்
'அடிவைத்தால் சொல்லாலே வைவேன்' என்றாள்
'அடியெல்லாம் சொல்லாலே வாழ்வாள்' என்றேன்.

— மணிமாலை —



சி.வீ.சேஷாத்ரி

'வாலாஜாப்பேட்டைப் புலவர்' என்று அழைக்கப் படும் இவர் மிகச்சிறந்த பாரதப் பிரசங்கி.

பாரதி தமிழ்ப்பணிச் செல்வர், உபந்யாஸகேசரி, சொல்லின் செல்வர் போன்ற பட்டங்களைப் பெற்றவர். மேனிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராய் இருந்த இவர், தற்போது மாநிலக் கல்வி ஆராய்ச்சி பயிற்சி மையத்தில் துணைப் பேராசிரியராய் உள்ளார்.

இராஜாஜி, காந்திஜி ஆகியோருடன் நெருக்கமாயிருந்து பல ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த சி.வீ. இராஜ கோபாலாச்சாரியார் இவருடைய சிறிய தகப்பனார்.

அமைதிப்பெருவழி



சி. கண்ணப்பன்

மாண்பு பெரும் மதிநல்லார் பலரும் சொன்னார்
மதிபெற்றால் அமைதிபெற வாழ்வோ மென்றார்
வீண்பெறு பேராசையாலே வீழ்ச்சி யுற்றார்
விதிவலி என்றவர் மதியை விதிமேல் வைத்தார்
காண்பவர்தாம் கண்ணுற்ற பொருளை எல்லாம்
கருத்துடனே பிரித்தறிந்து பயனும் பெற்றார்
பேண்பனவும் பேணாமல் பேரா சையாலே
பெறு பலனும் பெறாதமைதி பெருமை விட்டார்.

தாம்பெற்ற கைகால் தம்கடமை செய்தால்
நாம்பெறுவோம் நல்வாழ்வும் பெரும்புகழும்
தாம்பெற்ற வாயடக்க மொழியால் நாளும்
தம்பெருமை தாமே வந்தெய்தக் காண்போம்
மேம்படுகண் பொறியடக்க பெருமை பெற்றால்
மேன்மைகளும் ஆண்மைகளும் தாமே எய்தும்
ஆம்பொருள்கள் அனைத்தும் நமையடைய வேண்டின்
அனைவருமே அமைதிவழி நோக்கிச் செல்வோம்.



புதிய 'மீரா' மூலிகை சிகைக்காயில் அடங்கியுள்ள சில முக்கிய மூலிகைகள், புதிதாக விற்பனைக்கு வந்துள்ள டப்பா வடிவ 'மீரா'.




புதிய மீரா அறிமுகத்தில் பங்கேற்க வந்த நடிகை சிவரஞ்சனியை திரு சி.கே. ரங்கநாதன், மானேஜிங் டைரக்டர் வரவேற்கிறார்.

'பியூட்டி காஸ்மெடிக்ஸ்' நிறுவனத்தின் தயாரிப்பான 'மீரா மூலிகை சிகைக்காய்த் தூள்' சென்ற ஆண்டு விற்பனைக்குக் கொணரப்பட்டது. 5 கிராம் அளவுள்ள 'சாசே' பாக்கிங்கில் தமிழ்நாடு, ஆந்திரா மாநிலங்களில் சென்ற ஆண்டு சுமார் 2 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப் பட்டுள்ளது. 19.7.92 அன்று 'புதிய மீரா' உருவெடுத்துள்ளது. தென்மாநில மக்களின் விருப்பத்திற்கேற்ப 'சிகைக்காய்த் தூள் ரீதா' 5 கிராம் 'சாசே' பாக்கெட் தவிர 100 கிராம், 200 கிராம் அளவிற்கு டப்பாக்களில் விற்பனை செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது. அறிமுக விற்பனையை ஊக்கமளிக்க ஒவ்வொரு டப்பாவுடனும், ஒரு கலவை தயாரிக்க ஏதுவான கிண்ணமும், ஒரு ஸ்பூனும் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

புதிய மீரா சிகைக்காய்த் தூளில் 17 வகை மூலிகைகள் அடங்கியுள்ளன. நுரைவளம் மிகுந்த 'ரீதா' தூள் முழுமையான தலை குளியலுக்கு உகந்ததாகும்.

திரு சி.கே. ரங்கநாதன், மானேஜிங் டைரக்டர் திரு சி.கே. குமாரவேலு எக்ஸிகியூடிவ் டைரக்டர் அவர்களின் திறமையான நிர்வாகத்தினால் 'சிக்' ஷாம்பு தென்னிந்தியாவிலேயே முதன்மையானதாக நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இந் நிறுவனத்தினர், விரைவிலேயே கேசப் பராமரிப்புக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் தயாரிக்க இருக்கிறார்கள். ஃ



புதிய மீரா மூலிகை சிகைக்காய் அடங்கிய பரிசை திரு சி.கே. ரங்கநாதன், மானேஜிங் டைரக்டர் 'பியூட்டி காஸ்மெடிக்ஸ்' திருமதி நஜ்னா ஹுஸைன், பிரபல காஸ்மடாலெஜிஸ்ட்டுக்கு அளிக்கிறார்.

புதிய மீரா மூலிகை சிகைக்காய்த்தூள் திருமதி நஜ்னா ஹுஸைன் பிரபல 'காஸ்மடாலெஜிஸ்ட்' அறிமுகப் படுத்துகிறார். உடனிருப்பவர் திரு சி.கே. ரங்கநாதன், மானேஜிங் டைரக்டர், பியூட்டி காஸ்மெடிக்ஸ்.



திருப்தி தரும் "திருப்தி"

"அம்மா, இன்னிக்கு என்ன டிபன்?" என்று மகன் கேட்கிறான்.

"இட்லி" என்கிறாள் தாய்.

"போம்மா, எப்ப பாரு இட்லி, தோசைதானா? வேறு டிபனே செய்யத் தெரியாதா? பூரி மசாலா செய்யேன்" என்கிறான் சிணுங்கியபடியே!

"ஆமாண்டா! செய்ய வேண்டியதுதான். கோதுமையை வாங்கி ரெண்டு நாளாச்சு. வெயில்லே வெச்சு, கல், மண் பொறுக்க ஆளைக் காணோம். மிஷினுக்குப் போகச் சொன்னா, யார் போறா? பூரி மசாலா வேணும்னா, நெனைச்சாப்பில பண்ண முடியுமா?" – தாய் குமுறலைக் கொட்டுகிறாள்.

இதுபோன்ற உரையாடல்கள் சிலருக்குப் பழைமையான தாகத் தோன்றலாம்; இன்னும் நிறைய வீடுகளில் "கோதுமையை வாங்கி, உலர்த்தி, இயந்திரங்களுக்கு எடுத்துச் சென்று மாவாக்கி வரும் வழக்கம் உள்ளது. இப்பழக்கம் வழிவழியாக வருவது என்பதால் நல்லது என்று ஏற்றுக் கொண்டு விட முடியாது. அரவை மிஷினில் மாவரைக்கும் ஆளின் சுத்தம், மிஷினின் சுத்தம் இதையெல்லாம் கண்டும் காணாதது போல இருந்து விடுகிறோம். நல்ல கம்பெனிகள் நவீன முறைகளில், சுகாதாரமிக்க பைகளில், இத்தகைய மாவுப்பண்டங்களை, ரவையை அளிக்க முன் வந்தால் வாங்க யார் தான் முன்வரமாட்டார்கள்! இது அவசர யுகம்; தயாராகக் கிடைப்பதுடன் தரமானதாகவும் கிடைத்தால் கூடுதல் சந்தோஷம்தானே! பெண்களின் வேலைப்பளுவைக் குறைத்து அவர்களின் வசதிக்கென்றே என்.இ.பி.சி. ஆக்ரோ ஃபுட்ஸ் நிறுவனத்தினர் கோதுமை மாவு, ரவை, உப்பு இவற்றை 'திருப்தி' என்ற பெயரில் தயாரித்து அளிக்கின்றார்கள். எளிதில் வாங்கி, சிறப்பாய் சமைத்து, உகப்பாய் உண்ண ஏற்ற 'திருப்தி' தயாரிப்புகளைப் பற்றி ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருந்தோம். பல பெண்கள் ஆர்வமுடன் இதில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

இந்தக் கலந்துரையாடலில் பங்கு பெற்றவர்கள்: என்.இ.பி.சி. ஆக்ரோ ஃபுட் நிறுவனத்தைச் சார்ந்த திரு.சந்திரசேகர் (மார்கெட்டிங் மேனேஜர்), திரு. சாரதி (ஏரியா மேனேஜர்), திரு. என். ரவிசங்கர் (மேனேஜர்), திருமதி.வரலக்ஷ்மி (இன்ஸ்ட்ரக்டர், காடெரிங் இன்ஸ்டிட்யூட்), திருமதி. பிரமீளா கார்த்திக் (குடும்பத்தலைவி), திருமதி. கமலா ரங்காசாரி (மண்டே சாரிடிக்ளப்), செல்வி உமாஸ்ரீ (ஹோம் சயன்ஸ்



என். ரவிசங்கர் (மானேஜர், மாட்டிரிக்ஸ் அட்வர்டைசிங் சர்வீஸ்)
சாரதி
சந்திரசேகர்
மேனன்
வரலட்சுமி



சாரதி (ஏரியா மானேஜர்)



சந்திரசேகர் (மார்க்கெட்டிங் மானேஜர்)

மாணவி), திரு.விக்கிரமன் (ஆசிரியர் - அமுதசுரபி).

கமலா : கோதுமை வாங்கி சலித்து, அரைத்து, பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லாத படி, ரேடிமேட் பாக்கெட்டு களில் கிடைப்பது பற்றி உங்கள் எண்ணத்தைச் சொல்லுங்கள்!

வரலக்ஷ்மி : அநேகமாக எல் லாப் பெண்களும் வேலைக்குப் போகிறார்கள். வேலைக்குப் போகாதவர்களும்கூட, காலை நேர அவசரத்திற்குப் பள்ளி, கல்லூரி, அலுவலகம் செல் பவர்களுக்குச் சீக்கிரம் தயார் செய்ய இதுபோன்ற ரெடிமேட் உணவுப் பொருட்களை வாங்கு கிறார்கள். இது மைக்ரேவேவ் யுகம். சிறியவர்கள் புதுப் புது டேஸ்ட் கேட்கும் காலம். இன்ஸ்டண்ட் உணவு வகை களை விரும்புகிறார்கள். ஒரு சாதத்தை வடித்து விட்டுக் காலை முதல் இரவு வரை சாப்பிடச் சொன்னால் யாரும் அதற்குத் தயாராக இல்லை.

பிரமீளா : அதுவும் தவிர முன்னெல்லாம் வீடுகள் பெரிய தாக இருக்கும். நிறைய இடவசதி இருந்ததால் அம்மி, உரல், ஆட்டுக்கல் என்று போட்டிருப்பார்கள். ஆனால் இப்பப் பெரும்பாலும் ப்ளாட் வாழ்க்கை. இரண்டு மூன்று அறைக்குள் அத்தனை சாமான் களையும் வைத்தாக வேண்டும். சுவரில் ஒரு ஆணி அடித் தால்கூட அடுத்த ப்ளாட்ல இருக்கறவங்க முகத்தைச் சுளிப்பாங்க. பழைய முறை களைக் கையாள்வதில் சில ப்ளஸ் பாய்ண்டுகள் இருப் பதைப் போல, புதிய முறை களிலும் ப்ளஸ்பாய்ண்டுகள் இருக்கத்தான் செய்கின்றன. சுவையானதா, சுத்தமானதா, வாங்கி அப்படியே உப யோகிக்கக் கூடியதாகக் கிடைச்சா, பெண்கள் அதைச் சந்தோஷமா வரவேற்கறாங்க!

கமலா : ரொம்ப கரெக்ட்! நவீன உலகத்துல மக்கள் எதெல்லாம் சௌகர்யம்னு நெனைக்கறாங்களோ, அதை நிச்சயமா வாங்கறாங்க. அழகா சுகாதார முறையில் 'பாக்' செய்யப்பட்டு, சில மாதங்கள் வரை பூச்சி வரா மல் இருக்கும் என்ற உறுதி யளிக்கும் 'திருப்தி' பிராண்ட் கோதுமை, மைதா, ரவையை



கங்கா ராமமூர்த்தி

வாங்கறாங்க. இதில் இன் னொரு அட்ராக்ஷன் என் னன்னா, ஒவ்வொரு 'பாக்' கிலும் ஒவ்வொரு 'ரெசிபி' (சமையல் குறிப்பு) வைக்கு றாங்க. ரவையில திரும்பத் திரும்பக் கேசரி, உப்புமாதான் செய்யறோம். புது மாதிரியா ரவா புட்டிங் செய்யலாம் என்பது 'திருப்தி' ரவை வாங் கிய பிறகு தெரிந்து கொண் டேன். 'பாக்' பார்த்தேன். கோதுமை மாவில் கார்போ ஹைட்ரேட் 80% இருக்குனு தெரிஞ்சதும் உடனே வாங்கிட் டேன்.

சந்திரசேகர் : வெரிகுட். இப்பல்லாம் பெண்களுக்கு ஒரு அவார்னஸ் (விழிப்புணர்வு) வந் திருக்கிறதைப் பாராட்டணும். ஒரு உணவுத் தயாரிப்பு வாங்கும்போது அது ந்யூட்டிரி ஷியஸ் வேல்யு உள்ளதா என்று கவனிக்கிறார்கள். பழைய முறையில் கோதுமையை வாங்கி உலர்த்தி அரவை இயந்திரத்தில் மாவாக்குகிறீர் கள். பிறகு வீட்டிற்கு வந் ததும் மாவைச் சலிப்பீர்கள் இல்லையா?

பிரமீளா : ஆமாம், தவிடு இல்லாம இருக்கணும். சப் பாத்தி மெதுவாக இருக்கும்னு சலிப்பாங்க.

சந்திரசேகர் : அந்த இடத் துலதான் நீங்க தவறு செய்ய றீங்க. சலித்த தவிட்டைத் தூக்கி எறிந்துவிட்டு, மாவை மட்டும் பயன்படுத்துகிறீர்கள் இல்லையா? தூக்கி எறிகிற தவிட்டில்தான் முக்கால் வாசி சத்தும் இருக்கிறது. நீங்கள் உபயோகிக்கும் மாவில் கால் வாசி சத்துகூட இருப்பதில்லை.

வரலக்ஷ்மி : அப்ப 'திருப்தி' கோதுமை மாவில் இந்த அளவு சத்துக்களை எப்படிக் கொண்டு வருகிறீர்கள்?

சந்திரசேகர் : பஞ்சாப் மாநிலத்தில் விளையும் முதல்

தரமான கோதுமையை வாங்கி, அதை இயந்திரங்கள் மூலமாக 48 மணிநேரம் நன்றாகச் சுத்தம் செய்கிறோம். வேறு எந்த 'ப்ராண்ட்' தயாரிப்பும் இவ்வளவு முழுமையாகச் சுத்தம் செய்யப்படுவதில்லை. பிறகு விசேஷ செய்முறை மூலம் தானியங்கள் உலர்த்தப்பட்டு, நோய்க்கிருமிகள் முற்றிலும் நீக்கப்படுகின்றன. கோதுமை தானியத்தின் ஊட்டச்சத்து முழுவதும் நிலைக்குமாறு பார்த்துக்கொள்கிறோம். தானியம் மாவாக அரைத்த பிறகு கைபடாமல் பைகளில் அடைக்கிறோம். கவனமுடன் தயாராகும் 'திருப்தி' தயாரிப்புகளில் சத்துக்கள் முழுமையா இருக்கு.

கமலா : மிஷினில் நாங்கள் அரைக்கும் மாவில் சத்துக்கள்


வரலட்சுமி (இன்ஸ்ட்ரக்டர் காடெரிங் இன்ஸ்டிட்யூட்)

கிடைக்காதா? மேலும் அந்த மாவும் 20 நாள்வரைகூடப் பூச்சி வராமல் இருப்பதில்லையே ஏன்?

சாரதி : கோதுமையைப் புடைக்கிறீர்கள். அப்போது அதன் முனைகள் உடைந்து போகின்றன. மிஷினில் உராய்வினால் மேலும் கொஞ்ச நஞ்சம் இருக்கும் 'சத்துக்கள் நிறைந்த பகுதிகளை இழக்கிறோம். மிஷினின் இரும்புப் பொடிகள்கூட மாவுடன் கலக்கின்றன.


கமலா ரங்காசாரி

பிரமீளா : அப்படியா? அப்ப மாக்னட் (காந்தம்) வைத்து சோதித்துப் பார்த்தால் இரும்புப் பொடிகள் இருப்பது தெரியும் இல்லையா?

ரவி : கண்டிப்பா தெரியும்!

வரலக்ஷ்மி : மைதா மாவைப் போலவே கோதுமையும் வெள்ளையாக இருக்கிறதே...


பிரமீளா கார்த்திக் (குடும்பத்தலைவி)

சந்திரசேகர் : நல்ல வெள்ளை கோதுமையில் தயாரிக்கிறோம். கோதுமையை இயந்திரத்தில் இட்டு, முதல்ல தயாரிக்கிறது ரவை. மறுபடி அரைத்துக் கோதுமை மாவும், மீண்டும் மூன்றாம் முறை அரைத்து மைதாவும் தயாரிக்கப்படுகிறது. ஒவ்வொரு நிலையிலும் அதற்குரிய ஊட்டச்சத்துக்களும் சேர்க்கப்படுகிறது. 'திருப்தி' கோதுமை மாவுல கொழுப்புச் சத்து 1.2%தான் இருக்கும். மைதாவில்தான்


உமாஸ்ரீ (மாணவி)

அதிகபட்சமாக 8% கொழுப்புச் சத்து இருக்கிறது.

கமலா : 'திருப்தி' கோதுமை மாவுக்கு மலச்சிக்கலைப் போக்கற சக்தி இருக்கறதால, வயதானவர்கள் இதைத் தாராளமாக உபயோகிக்கறாங்க. உங்க தயாரிப்புகளுக்கு 'அக்மார்க்' முத்திரை இருக்கிறதே! அது ஒன்று போதுமே!

சந்திரசேகர்: அதுமட்டுமல்ல! மைசூரிலுள்ள (CFTRI) மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகத்தின் நற்சான்றையும் பெற்றிருக்கிறது. திருப்தி தயாரிப்புகளுக்குச் சமையலறையில் ஆறு மாதங்கள் வரை கெடாமல் இருக்கும் தன்மை இருப்பதை இக்கழகம் சோதனை நடத்தியுள்ளது. திருப்தி தயாராகும் ஒவ்வொரு நிலையிலும் திடீரென்று இக்கழகம் சோதித்து, சான்றிதழ் தந்திருக்கிறது.

உமாஸ்ரீ : எல்லாமே இயந்திரங்களின் உதவியினால்தான் தயாராகிறதென்றால் - மனித சக்தியை உபயோகிக்கவில்லையா?

சந்திரசேகர் : ஏன் உபயோகிக்காமல்? இயந்திரங்களை இயக்க, தானியங்களைப் போட, எடுக்க... மனிதசக்தியைப் பயன்படுத்துகிறோம். தொழிற்சாலையில் பணிபுரியும் ஆண்களும் பெண்களும் மிகவும் பாதுகாப்பான தலைக்

கவசம், கையுறைகள், கால் ஜோடுகள் அணிந்துதான் வேலை செய்வாங்க. சுத்தம் கருதி எதையும் கையால் தொடவிடுவதில்லை.

வரலக்ஷ்மி: நானும் எவ்வளவோ 'பாக்' செய்த சாமான்களை வாங்குகிறேன். பார்வைக்குப் பூச்சி இருப்பது தெரியாது; பிரித்தால் தெரியும். ஆனால் 'திருப்தி'யில் பூச்சிகள் வராமல் இருக்க நீங்க என்னென்ன விதத்தில் பாதுகாக்கிறீர்கள்?

சந்திரசேகர் : பாக்டரியில் தயாராகி 'பாக்' செய்யப்படுவதுவரை ரொம்பப் பாதுகாப்பா கவனிக்கறவங்க. அதற்குப் பிறகு கடைகளில் எப்படி வைத்திருக்கிறார்கள் என்பதைக் கவனிக்கத் தவறிவிடுவதே இதற்குக் காரணம். சில கடைகளில் டிடெர்ஜெண்ட் சோப் பக்கத்தில் உணவுப் பொருட்கள் நிறைந்த பாக்கெட்டுகளை வைத்திருப்பார்கள். டிடெர்ஜெண்ட்டின் மணம் நிச்சயமாக இவற்றில் கலக்கும். ஆனால் திருப்தியைப் பொருத்தவரை தரமான பாலி ப்ரொப்பிலின் பைகளில்தான் 'பாக்' செய்கிறோம். மேலும் கடைகளில் எங்கள் பாக்கெட்டுகள் எப்படி, எங்கே வைக்கிறார்கள் என்று கவனிக்கிறோம். பாக்டரியிலிருந்து கோடவுன் போன்ற வழியில் லேசாகத் தூறல் போட்டாலும் போதும். 'க்வாலிடி' போயிடும். இதைப் பலர் கவனிக்காம இருக்கலாம். ஆனா 'திருப்தி' தயாரிப்புகள் மூன்றரை லட்சம் பாக்கெட்டுகளை ஒருமுறை ஒருவேளை கெட்டுப்போயிருக்கலாமோ என்ற சந்தேகத்தினால் தூக்கி எறிந்திருக்கிறோம். எங்களுக்குப் பொதுமக்களின் திருப்திதான் முக்கியம்! எங்கள் தயாரிப்புகளின் தரம்தான் அதிமுக்கியம்!

கமலா : 'திருப்தி' மைதா மாவுல சிப்ஸ், பூரி எது செய்தாலும் துளிக்கூட எண்ணெயே குடிக்கலை. வாணலியில் வைத்த எண்ணெய் அப்படியே இருக்கு. இது ரொம்ப பேருக்குப் பிடிக்கும். கோதுமை சாப்பிடற பழக்கம் இப்ப தென்னிந்தியாவிலேயும் அதிகமா இருக்கு. இல்லையா?

சந்திரசேகர் : நிச்சயமா ட்ரெண்ட் சேஞ்சாயிருக்கு. சில பேர் 100% கோதுமை சாப்பிடறாங்க. எனக்குத் தெரிந்த சில வீடுகள்ல மெனு-கார்ட் எப்படி இருக்கு தெரியுமா? திங்கள் கிழமை – ப்ரட், செவ்வாய் – சப்பாத்தி, புதன் – பூரி, வியாழன் – ரவா புட்டிங் என்று. செய்யறது எவ்வளவு சுலபம் பார்த்தீங்களா? அதே நேரத்துல சத்துக்களையும் நிறைந்த அளவுல அடையறோம். இப்ப நிறைய பேர் காலை உணவாக பிரெட் சாப்பிடறாங்க. இந்த மார்டன் பிரெட் 'திருப்தி'யின் மைதாமாவினால் தயாராகிற விஷயம் ரொம்பப் பேருக்குத் தெரிஞ்சிருக்காது.

வரலக்ஷ்மி : விலையைப் பொறுத்தவரை சற்றுக்கூடுதல் என்ற எண்ணம் பலருக்கு இருக்கிறது. குறைக்க முயற்சி செய்வீர்களா?

சந்திரசேகர் : முதல்தரமான கோதுமை, நவீனமான இயந்திரங்கள், டபிள் பாக், தரத்திற்கும் உடல் நலத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் விழிப்புணர்வு இப்ப ஏற்பட்டிருக்கு. விலை அதிகம் என்று சொல்பவர்கள் ரொம்ப கொஞ்சம் பேர்தான். கொடுக்கும் பணத்திற்குக் கூடுதல் நன்மை கிடைக்கிறதை நினைத்துப் பார்ப்பவர்களே அதிகம்.

கமலா : சார் சொல்வது சரிதான். சாதா கோதுமையிலோ, ரவையிலோ நாம் செய்கிற சப்பாத்தி, உப்புமா இவற்றின் அளவும் நமக்குக் கூடுதலாகக் கிடைக்கிறபோது, ஒருமுறை திருப்தி வாங்கறவங்க கண்டிப்பா மறுமுறையும் அதேயே கேட்டு வாங்கறாங்க! நீங்க சால்ட் கூட தயாரிக்கிறீங்க இல்லையா?

பிரமீளா : கல்லுப்புதான் ஊறுகாய் போட நல்லதுன்னு சொல்றாங்களே!

சாரதி : அதெல்லாம் சும்மா. பழைய வழக்கம்னு சொல்றாங்க. ஆனா உண்மை அதுவல்ல. கல்லுப்புல 72 சதவிகிதம்தான் உப்பு உள்ளது. மற்ற பொடி உப்புகள்லகூட பாரபின், வாக்ஸ் இவையெல்லாம் கலந்திருக்கும். ஆனா திருப்தியில் அயோடின் கலந்த உப்பு. தேவையான அளவுக்கும் பாதி போட்டாலே போதும். அவ்வளவு தரமானது.

உமாஸ்ரீ : மாதிரி அயோடின் உள்ள உப்பை ஹில் ஸ்டேஷன்களில் உள்ளவர்கள்தான் பயன்படுத்தணும். நமக்கெல்லாம் வேண்டாம்னு சொல்றாங்களே!

சந்திரசேகர் : நோ. நோ. எல்லாருக்கும் அயோடின் வேண்டும். இல்லேன்னா தைராய்டு வியாதி வரும். மற்ற உப்புகளை உப்பளத்திலிருந்து எடுக்கறாங்க. ஆனா 'திருப்தி' உப்பு ராஜஸ்தானிலுள்ள மினரல் வாட்டரிலிருந்து எடுக்கப்படுவதால் 100% உப்பாக உள்ளது. ஹைபர்டென்ஷன் உள்ளவர்கள்கூட இந்த உப்பைப் பயன்படுத்துகிறார்கள்.

விக்கிரமன் : திருப்தி என்று எப்படி பெயரைத் தேர்ந்தெடுத்தீர்கள்?

சந்திரசேகர் : அநேகமாக எல்லா இந்திய மொழிகளிலும் 'திருப்தி' என்ற சொல் 'நிறைவு' என்ற அர்த்தத்தில் உள்ளது.

அதனால இதைத் தேர்ந்தெடுத்தோம்.

விக்கிரமன் : தரமான சமையல் எண்ணெய்கூட நீங்கள் தயாரிக்கலாமே?

சந்திரசேகர் : இன்னும் சில ஆண்டுகளில் 'திருப்தி' ஒரு 'house-hold' பெயராகி விடும். "திருப்தி சமையலறை"யை ஒவ்வொரு வீட்டிலேயும் காண்பீர்கள். கூடியவரையில் மினரல் வாட்டர் கொண்டுவர இருக்கிறோம்.

வரலக்ஷ்மி : மினரல் வாட்டர்னா அதில என்ன இருக்கு?

சந்திரசேகர் : கால்ஷியம், மக்னீஷியம், சல்பர், சால்ட் இருக்கும். பில்டர் முறை, அல்ட்ரா - வயலட் முறை இவற்றால் நவீனமாகச் சுத்தம் செய்யப்பட்ட தூய தண்ணீரில் மினரல்கள் கலக்கப்படுகின்றன.

கமலா : திருப்தி 91 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம்தான் தயாரிப்புகளை மார்க்கெட்டுக்குக் கொண்டு வந்துள்ளது. இதன் சாதனை என்னவென்று சொல்லுங்கள்.

சந்திரசேகர் : வேறு எந்த "ஸ்டேபிள் புட்"டும் செய்யாத சாதனையைத் திருப்தி செய்துள்ளது. தேசிய அளவில் எங்களுக்கு மார்க்கெட் உள்ளது. தரம் நிறைந்த எங்கள் திருப்தி தயாரிப்புகள் துபாய், பஹ்ரீன் போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன!

விக்கிரமன் : மிகவும் சந்தோஷமான செய்திதான்!

மாறுகின்ற கால ஓட்டத்திற்குத் தகுந்தபடி, நம்மை நாமும் மாற்றிக் கொள்ள வேண்டும். சுத்தமான, சுகாதாரமான ஊட்டசத்துள்ள தயாரிப்புகள் கிடைக்கும்போது பொன் போன்ற நேரத்தை கல்லுரலிலும் அரவை இயந்திரத்திலும் செலவிட வேண்டாமே!

தொகுப்பு : கங்கா ராமமூர்த்தி

மகளிர்க்கான யோசனைகள்

பட்டுப்புடைவையைத்தோய்க்கும்போது கீழேயுள்ள பார்டர் பக்கத்தைச் (ஜரிகையை) சுருக்கிக் கொண்டு 'ஸர்ப்' போட்டுக் கசக்கிவிட்டுப் பின் உடல்பகுதியைத் தனியாக 'ஸர்ப்' போட்டுக் கசக்கிவிட்டு முழுப்புடைவையையும் தண்ணீரில் அலசி எடுத்தால் புடைவை சாயமும் போகாது ஜரிகையும் கெட்டுப் போகாது இதேபோல் 'நைலான்' வெரைட்டி புடைவைகளுக்கும் அடியில் 'சாரிபால்' வைத்திருப்பவர்கள் அடிப்பக்கம் தனியாகக் கசக்கிவிட்டு முழுப்புடைவையையும் அலசி எடுக்கலாம். இப்படித் துவைப்பதால் புடைவைகள் கிழிந்துவிட்டாலும் புதியதாகவே காணப்படும். 'ட்ரை வாஷ்'தான் செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை. பணமும் மிச்சம்.

ஸ்பெஷல் 'ஸிக்ஸ்' இன் 'ஒன்'

பொதுவாக இட்லிக்கு மாவு அரைத்தால் இட்லி, தோசை, ரோஸ்ட் என்றுதான் செய்வது வழக்கம். ஒரே மாவில் (ஒருநாள் மொத்தமாக அரைத்து 'ப்ரிஜ்'ஜில் வைத்து விட்டால் போதும்) பலவிதமான வாய்க்கு ருசியான வகை வகையான தின்பண்டங்களைச் செய்து பார்க்கலாமே!

1. இட்லி மாவில் சிறிதளவு ரவை சேர்த்து இட்லியாக வார்த்து எண்ணெயில் பொரித்தெடுத்துத் தயிர்வடையாகச் செய்யலாம்.

2.'பிரட்'டைச் சிறுசிறு துண்டங்களாக வெட்டி வைத்துக் கொண்டு மாவில் அமிழ்த்தி எண்ணெயில் 'பஜ்ஜி'யாகப் பொரித்தெடுக்கலாம்.

3. பச்சைமிளகாய், வெங்காயம், காரட், பட்டாணி, தேங்காய் இவற்றைத் திருகிப் போட்டு 'ஊத்தப்பம்' போல வார்த்து மேலே இட்லிப் பொடியுடன் நல்லெண்ணெயைத் தடவிக் கவிழ்த்து மூடிவிட்டுத் திருப்பிப் போடாமல் எடுத்து 'மொறமொற'வென சாப்பிடக் கொடுத்தால் யாருமே '5. ஸ்டார்' ஹோட்டலுக்குப் போக மாட்டார்கள்.

4. இட்லிமாவுடன் கொஞ்சம் மிளகு, சீரகப் பொடி, சுக்குப் பொடி கலந்து திராட்சை, முந்திரி, நெய்யில் தாளித்துக் கொட்டவும். கறிவேப்பிலையை நன்கு பிய்த்துப் போட்டு ஒரு தட்டுப் போன்ற பாத்திரத்தில் நெய் தடவி மாவைக் கொட்டி குக்கரில் வைத்துவிடவும். குண்டுபோட வேண்டாம். நன்கு ஆவி வந்தவுடன் 'ஸ்டவ்'வை அணைத்து விட்டு, தட்டில் உள்ள 'கேக்' போன்ற இட்லியைத் தண்ணீர் தெளித்துக் கவிழ்த்துக் கொட்டவும். பின் சிறுசிறு துண்டுகளாகப் போடவும். குழந்தைகள் தினமும் இதைத்தான் கேட்பார்கள்.

5. மேலே குறிப்பிட்டுள்ள படியே மாவில் மிளகு, சீரகப் பொடி, சுக்குப்பொடி போட்டுக் கலந்து திராட்சை, முந்திரி தாளித்துச் சிறிதளவு 'பேக்கிங்' பவுடர் போட்டு 'பேக்கிங் ட்ரே'யில் நெய் தடவி மாவைக் கொட்டி 'பேக்' செய்து எடுக்கவும். அழகாக 'கேக் இட்லி' சாப்பிடலாம்.

— வித்யா ஸ்ரீநிவாஸ்

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
(புதுவை அரசு நிறுவனம்)
புதுச்சேரி – 605 001

கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டம்

தமிழ்க் கவிஞர்களுக்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் ஓர் வேண்டுகோள்

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் புதுவை அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு தன்னாட்சி ஆய்வு மையமாகும். இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ள பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களுள் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டமும் ஒன்றாகும். இருபதாம் நூற்றாண்டில் வெளியாகியுள்ள எல்லா வகையான தமிழ்க் கவிதைகளையும் திரட்டி, கணிப்பொறியின் துணைகொண்டு நிரல் படுத்திப் பாதுகாத்தல், சிறந்த மரபுக்கவிதைகளையும், புதுக்கவிதைகளையும் பொருள் மற்றும் வடிவ அடிப்படையில் வகுத்து ஒரு தெளிவான புதிய வடிவ-உள்ளடக்கக் கோட்பாட்டின் அடிப்படையில் தொகைநூல்களாக வெளியிடுதல் முதலான இலக்குகளைக் கருத்தில் கொண்டு கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டத்தினைப் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் இருபதாம் நூற்றாண்டில், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை முதலான நாடுகளில் வெளியாகியுள்ள எல்லாத் தமிழ்க்கவிதைகளையும் திரட்டித் தொகுக்கும் இறுதிக்கட்டப் பணியில் மேற்படி ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பான செய்திக்குறிப்பு ஏற்கனவே நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், வானொலி முதலான மக்கள் தொடர்புச் சாதனங்கள் வழியாக வெளிவந்துள்ளது. இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் வானொலி, செய்தித் தாள்கள் வாயிலாகத் தமிழ்க்கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டம் தொடர்பான செய்தி வெளியிடப்பட்டுள்ளது. தாம் இதுவரை வெளியிட்டுள்ள கவிதைகளையும், தம்மிடம் நூல் வடிவில் உள்ள கவிதைகளையும் அருள்கூர்ந்து நிறுவனம் மேற்கொண்டுள்ள கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டத்திற்கு வழங்குமாறு புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் தமிழ்க் கவிஞர்களை வேண்டிக் கொள்கிறது. அவ்வப்போது வெளியாகி, தொகுக்கப் பெறாமல் உள்ள கவிதைகளைத் தனித்தாளில் எழுதியோ, ஒளிப்படப் பிரதியாகவோ கவிஞர் பெயர், வெளியான இதழ், ஆண்டு ஆகியவற்றைக் குறிப்பிட்டு நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கலாம். இந்த நூற்றாண்டில் வெளியான /வெளியாகிக் கொண்டிருக்கும் ஏராளமான தமிழ்க் கவிதைகளும், கவிதைத் தொகுதிகளும் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வந்த வண்ணம் இருக்கின்றன. இந்த நூற்றாண்டின் எந்த ஒரு தமிழ்க்கவிதையும் கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டத்திலிருந்து விடுபட்டுவிடக் கூடாது என்பதில் மேற்படி நிறுவனம் கருத்தாகவும் கவனமாகவும் இருந்துவருகிறது. ஆயினும், தமிழ்க்கவிஞர்களின் ஒத்துழைப்பின்றிக் கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டம் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பில்லை. ஆகவே இந்த அறிவிப்பினை இறுதி வாய்ப்பாகக் கருதி தங்கள் கவிதைகளையும், கவிதைத் தொகுதிகளையும் இயக்குநர், **புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், 19, சின்ன சுப்பராயப்பிள்ளை வீதி, புதுச்சேரி – 605 001 (இந்தியா)** என்ற முகவரிக்கு விரைந்து அனுப்புமாறு உலகெங்கிலுமுள்ள தமிழ்க் கவிஞர்களை வேண்டிக்கொள்கிறோம்.

இயக்குநர்,
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.

வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட இலக்கியச் சிறப்பிதழுக்கு எங்கள் வாழ்த்துகள்!

டி. தீனதயாளன்,
டி. வெங்கடேசன்,
ஓம்சக்தி லாரி சர்வீஸ்,
சாயிநாதபுரம்,
வேலூர் - 1.

ஜே. முத்துமாணிக்கம்,
10B ஆற்காடு ரோடு,
வேலூர் - 4.

பாலச்சந்தர்,
தொழிலதிபர் & காண்ட்ராக்டர்
வேலூர்

வி. கிருபானந்தன்,
இயக்குநர்,
கார்த்திக் ஃப்ளவர் மில்ஸ்,
மேல் மணவூர்,
வேலூர்.

Tel : GOKULAM
Vaniyambadi
Post Box 100

Krishna Groups
FINANCE : 2188
OFFICE : 2599
RESIDENCE : 2799

FOUNDER : C. SREEDHARAN.
25 YEARS OF SERVICE IN BUSINESS AND FINANCIAL LINES

சென்னை - 2 உள்ள ஆர்.ஜே. ப்ராசஸ் ஆப்செட் அச்சகத்தில் அச்சிட்டவர் : ஆர். ஜனார்த்தனன், ஸ்ரீராம் டிரஸ்ட், சென்னை - 600 001 சார்பில் வெளியிட்டவர் : ஏ.வி. எஸ். ராஜா, ஆசிரியர் - விக்கிரமன், நிர்வாக அலுவலகம், த.பெ.எண். 5063, 145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600 001. தொலைபேசி : 586548.